கடவுள் துணை.

இகபர ரகசியம்

என்னும்

இல்லற பூஷணம்.

முதற்பாகம்.

இவை
சென்னைக் கிறிஸ்தவ கலாசாலைத் தமிழ்ப்பண்டிதராயிருந்து
காலஞ்சென்ற
ஈ. இரத்தினவேலு முதலியார்
மாணாக்கர்
சே. ப. அப்பாதுரை முதலியாரால்
தொகுக்கப்பட்டு

சூ. இராஜரத்தினம் என்பவரால்
சென்னை:
வாணீநிலய அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

1914.

 [Price As. 6.

முதற் பதிப்பு

உ

கடவுள் துணை.

முகவுரை.

திருமகட்கோர் திலகம்போலவுங் கலைமகட்கோர் கலை
போலவும், பூமகட்கோர் பூண்போலும் விளங்கப்பெற்ற
விந்நிலவுலகத்தி னுறையும் புண்ணிய புருடர்களுக்கும் கண்
ணிய மாதர்களுக்கும் வந்தனபூர்வமாகத் தெரிவிப்பது
யாதென்னில், மண்ணி னுதித்தவன்றே மாய்வது திண்ண
மென்பதை மறந்தவரீ ரென்றாலும் மூன்றாழின் பயனால்
மறந்து உலக விஷயாதிகட் கவாவுற்று உண்மையறியா
தொழிவரென் றிரங்கி அநேக மேதாவிகள், எச் செல்வத்
தினுங் கல்விச் செல்வமே சிறந்தது ; ஆனால் உண்மைப்
பொருளின்னதெனவும், பொய்ப்பொருளின்னதெனவும்
விளங்க லோகோபகாரமாக அளவுகடந்த ஞான சாத்திரங்
களும், நீதி சாத்திரங்களும், நம்மவர் கடைத்தேறும்பொரு
ட்டு வெளியிட்டுள்ளாராயினும் அவ்வளவு நூற்களில் தூசு
ப்பிரமாணமாவது கற்றுத்தெளிய நமக்கு வயதில்லையான
தால் எள்ளளவேனுந் தெரிந்து இநம்புவியில் வாழ்வ துசி
தம். ஆனதால் இவ்வுலகத்தி லொழுகவேண்டிய சாதனங்
களும், மேலுலகத்துக்காக வேண்டிய சாதனங்களும் யாவ
ரும் எளிதி லறியும்பொருட்டு அநேக நீதிவாக்கியங்களும்
பட்டணத்தார் பாடல், தாயுமானவர் பாடல் முதலிய
இன்னுஞ் சில வேடிக்கைப் பாட்டுகள் இவைகளை அநேக
நூல்களினின்றுஞ் செய்யுள்ரூபமாகத் திரட்டி என் சிற்றறி
விற் கெட்டியவரையில் சில கடினச் செய்யுள்கட்கு கருத்து
ரையும் எழுதி வெளியிடத் துணிந்தேன். இதிற் குற்றம்
பலவாக்கிடந்தாலும் கல்வி யறிவுடையோர் அங்கீகரித்து
என்பா லன்புறுவார்களென்று வந்தனத்துடன் கேட்டுக்
கொள்கிறேன்.

சோ. ப. . அ

கடவுள் துணை.

இகபர ரகசிய மென்னும்

இல்லறபூஷணம்.

முதற் பாகம்.

பொது வணக்கம்.

உலகெலாந் தனதின் னருட்கொடு புரந்தே
யுத்தமர் நெஞ்சகத் தொளிரும்
பலகலை நவின்ற பழையனுங் குழகன்
பரசினர்க் கருள்புரிந் தாங்காங்
கிலகுபன் மதத்தோ ரெவ்வெவா றிறைஞ்சி
யேத்தினு மவரவர் துதிகொண்
டுலகிலவ் வாறே யருள்குரு பரன்ற
னடி மலர் முடிமிசை யணிவாம்.

விநாயகர் துதி.

நிலம்போற்றும் பனிக்கிரண நிலாவணிந்த நாயகனார்
நிருதர்வாழுஞ்
சலம்போற்று மதில்பொடித்த ஞான்றினிய பூசனைகள்
சாலவாற்றிப்
புலம்போற்று மெய்யடியார்விநாயகனென் றியம்புபதப்
பொருளைநாட்டி
வலம்போற்று மணியிரத மூந்தமழ விளங்களிற்றை
வணக்கஞ்செய்வாம்.

இதுவுமது.

வானநாடர்கள் மாதவர் நாடரு
மோன ஞான முழுது முணர்ந்திடத்
தான மேவு கடலிக டாசலத்
தானை மாமுகத் தண்ணலை யேத்துவாம்.

எண்சீரடி விருத்தம்.

வேறு.

உடல்பொருளுமாவியுஞ் சற்குருநாதற்கே
 வுண்மையுடனுதகத்தால் தாரைவார்த்து
நடமாடுமிம்மூன்று மெனதென்றெண்ணி
 நாயகனுஞ்சிவனையே யடிமையாக்கு
திடவாக்குத்தவறாமல் நிலைத்துநெஞ்சே
 தேகந்தானழியளவு முதலிசெய்தால்
படமாடுமாவத்தை யனித்தவீசன்
 பதம்பெறுவாயுள்ளபடி பகர்ந்திட்டேனே.

வாணி துதி.

உரைப்பாருரைக்குங்கலைகளெல்லாமெண்ணிலுன்னையன்றித்
தரைப்பாலொருவர்தாவலரோ தண்டாளமுலை
வரைப்பாலமுதுகந்திங்கெனை வாழ்வித்தமாமயிலே
விரைப்பாசடைமலர்வெண் டாமரைப்பதிமெல்லியலே.

இலக்குமி துதி.

மடற்கமலநறும்பொகுட்டிலாசிருக்குஞ்செந்துவர்வாய்
 மயிலே மற்றுன்
கடைக்கணருள்படைத்தன்றோமணிவண்ணனுலகமெலாங்
 காவல் பூண்டான்
படைத்தனனுன்முகக்கிழவன் பசுங்கிழவி மதிபுனைந்த
 பரமன் றானுந்
துடைத்தனனின் பெருஞ்சீர்த்தி யெம்மனோரெடுத்துச்
 சொல்லற்பாற்றோ.

மனதின் சிறப்புகூறல்.

விருத்தம்.

மனமது செம்மையானல் மந்திரஞ் செபிக்கவேண்டாம்
மனமது செம்மையானல் வாயுவை யுயர்த்தவேண்டாம்
மனமது செம்மையானல் வாசியை நிருத்தவேண்டாம்
மனமது செம்மையானல் மந்திரஞ் செம்மையாமே. 1

சரியைநிலை.

ஓதுகின்ற வேதமெச்சிலுள்ள மந்திரங்களெச்சில்
போதகங்களான தெச்சில் பூதலங்களேழுமெச்சில்
மாதிருந்த விந்துவெச்சில் மதியுமெச்சி லொளியுமெச்சில்
ஏதிலெச்சி லில்லதில்லை யில்லையில்லை யில்லையே. 2

கிரியைநிலை.

வீடெடுத்து வேள்விசெய்து மெய்யரோடு பொய்யுமாய்
மாடுமக்கள் பெண்டிற்சுற்ற மென்றிருக்கு மாந்தர்காள்
நாடுபெற்ற நடுவர்கையி லோலைவந் தழைத்திடில்
ஓடுபெற்ற தவ்விலை பொருது காணுமுடலமே. 3

யோகநிலை.

வித்திலாத சம்பிரதாய மேலுமில்லை கீழுமில்லை
தச்சிலாத மாளிகை சமைத்தவாற தெங்ஙனே
பெற்றதாயை விற்றடிமை கொள்ளுகின்ற பேதைகாள்
சித்திலாத போதுசீவ னில்லையில்லை யில்லையே. 4

ஞானநிலை.

பண்டுநான் பறித்தெறிந்த பன்மலர்களெத்தனை
பாழிலே செபித்துவிட்ட மந்திரங்களெத்தனை
மிண்டராய்த் திரிந்தபோ திறைத்தநீர்களெத்தனை
மீளவுஞ் சிவாலயங்கள் சூழவந்த தெத்தனை. 5

உடல் நிலையாமை.

உலகத்திரே யுலகத்திரே
நாக்கடிப்பாக வாய்ப்பறை யறைந்து
சாற்றக்கேண்மின் சாற்றக்கேண்மின்
மனிதர்க்கு வயது நூறல்லதில்லை 6

ஐம்பதிரவில் அகலுந் துயிலினல்
ஒட்டிய விளமையால் ஒரைந்து நீங்கும்
ஆக்கை யிளமையில் ஐம்மூன்றும் நீங்கும்
எழுபதுபோக நீக்கிருப்பன முப்பதே
அவற்றுள்
இன்புறுநாளும் சிலவே யதா அன்று
துன்புறுநாளுஞ் சிலவே யாதலால்
இன்னே செய்யவும் வேண்டும் இன்னும்
இன்றே செய்யவும் வேண்டும் இன்றும்
நாளை நாளை யென்பீராகில்
நமனுடைமுறை நாளாவது மறியீர்.

(அவற்றுள்.)

இன்புறுநாளுஞ் சிலவேயதா அன்று
துன்புறுநாளுஞ்சில வேயாதலால்
பெருக்காறொத்தது செல்வம்பெருக்காற்
றிடிகரையொத்த திளமையிடிகரை
வாழ்மரமொத்தது வாழ்நாளாதலால்
ஒன்றேசெய்யவும் வேண்டுமவ்வொன்றும்
நன்றேசெய்யவும் வேண்டுமந்நன்றும்
இன்றேசெய்யவும் வேண்டுமவ்வின்றும்
இன்னேசெய்யவும் வேண்டுமவ்வின்னும்
நாளைநாளை யென்பீராகில்
நம்முடையமுறைநா ளாவதுமறியீர்
எப்போதாயினுங் கூற்றுவன்வருவான்
அப்போதந்தக் கூற்றுவன்றன்னைப்
போற்றவும்போகான் பொருளொடும்போகான்
சாற்றவும்போகான் றமரொடும்போகான்
நல்லாரென்னு னல்குரவறியான்
தீயாரென்னுன் செல்வரென்றுன்னுன்
தரியாதொருகணந் தறுகணாளன்
உயிர்கொடுபோவான் உடல்கொடுபோகான்
எதுக்கழுவீ ரேழைமாந்தர்காள்
உயிரினையிழந்தோ உடலினையிழந்தோ

உயிரிழந்தழுதுமென் றோதுவீராகில்
உயிரினையன்றுங்காணீ ரின்றுங்காணீர்
உடலினையன்றுங்கண்டீர் இன்றுங்கண்டீர்
உயிரினையிழந்த வுடலதுதன்னைக்
களவுகொண்ட கள்வனைப்போலக்
காலுமார்த்துக் கையுமார்த்துக்
கூறைகளைந்து கோவணங்கொளுவி
ஈமத்தீயை எரியெழமூட்டி
பொடிபடச்சுட்டுப் புனலிடைமூழ்கி
போய்த்தமரோடும்புந் திரைந்தழுவது
சலமெனப்படுமோ சதுரெனப்படுமோ
பார்ப்பனமாந்தர்காள் பகர்வதுகேண்மின்
இறந்தவராயுமை யில்லிடையிருத்திப்
பாவனைமந்திரம் பலபடவுரைத்தே
உமக்கவர்புத்திர ரூட்டினபோது
அடுபசியார்குலைந் தாங்கவர்மீண்டு
கையேந்திநிற்பது கண்டதார்புகலீர்
அருந்திபவுண்டியா லார்பசிகழிந்தது
ஒட்டியர்மிலேச்ச ரூணர்சிங்களர்
இட்டிடைச்சோனகர் யவனர்சீனத்தர்
பற்பலர்நாட்டினும் பார்ப்பாரிலையால்
முற்படைப் பதனில்வேறாகியமுறைமைபோல்
நால்வகைசாதியிந் நாட்டினினாட்டிநீர்
மேல்வகைகீழ்வகை விளங்குவதொழுக்கால்
பெற்றமுமெருமையும் பிறப்பினில்வேறே
அவ்விருசாதியி லாண்பெண்மாறிக்
கலந்துகருப்பெறல் கண்டதுண்டோ
ஒருவகைச்சாதியா மக்கட்பிறப்பினீ
ரிருவகையாகநீ ரியம்பியகுலத்துள்
ஆண்பெண்மாறி அணைதலுமணைந்தபின்
கருப்பொறையுயிர்ப்பதுங் காண்கின்றிலீரோ
எந்நிலத்தெந்தவித் திடப்படுகின்றதோ
அந்நிலத்தந்தவித் தங்குதித்திடுமால்

மாறிவேறுகும் வழக்கமொன்றிலையே
பூசுரர்ப்புணர்ந்து புலைச்சியீன்ற
புத்திரராயினோர் பூசுரரல்லரோ
பெற்றமு மெருமையும் பேதமாய்த்தோன்றல்போற்
மாந்தரிற்பேதமாம் வடிவெவர்கண்டுளார்
வாழ்நாளுறுப்புமெய் வண்ணமோடறிவினில்
வேற்றுமையாவதும் வெளிப்படலின்றே
தென்றிசைப்புலையன் வடதிசைக்கேகிற்
பழுதறவோதிப் பார்ப்பானவான்
வடதிசைப்பார்ப்பான் றென்றிசைக்கேகின்
நடையதுகோணிப் புலையனவான்

(அதுநிற்க)

சேற்றிற்பிறந்தசெங்கழுநீர்போலப்
பிரமற்குக் கூத்திவயிற்றிற் பிறந்தவசிட்டரும்
வசிட்டர்க்குச்சண்டாளி வயிற்றிற்பிறந்தசத்தியரும்
சத்தியர்க்குப்புலைச்சிதோள் சேர்ந்துபிறந்தபராசரும்
பராசருக்கு மீன்வாணிச்சி வயிற்றிற்பிறந்தவியாசரும்

(ஆகிய இந்நால்வரும்.)

வேதங்களோதி மேன்மைப்பட்டு
மாதவராகி வயங்கினரன்றே
அருந்தவமாமுனி யாம்பகவற்கு
இருந்தவாறிணைமுலை எந்திழைமடவார்
ஆதிவயற்றினி லன்றவதரித்த
காண்முளையாகிய கபிலனும்யானே
என்னுடன் பிறந்தவ ரெத்தனைபேரெனில்
ஆண்பான்மூவர் பெண்பானல்வர்
யாம்வளர்திறந்திறி தியம்புவல்கேண்மின்
ஊற்றுக்காடெனு மூர்தனிற்றங்கியே
வண்ணாரகத்தில் உப்பைவளர்ந்தனள்
காவிரிப்பூம்பட்டினத்தில்கள்விலைஞர்சேரியில்
சான்றாரகந்தனில் உறுவைவளர்ந்தனள்
நரப்புக்கருவியோர் நண்ணிடுஞ்சேரியில்

பாரகத்தினி லெளவைவளர்ந்தனள்
குறவர்கோமான்கொய்தினைப்புனஞ்சூழ்
வண்மலைச்சாரலில் வள்ளிவளர்ந்தனள்
தொண்டைமண்டலத்தில் வண்டமிழ்மயிலையில்
நீளாண்மைகொளும் வேளாண்மரபுயர்
துள்ளுவரிடத்தில் வள்ளுவர்வளர்ந்தனர்
அரும்பார்சோலைச் சுரும்பார்வஞ்சி
அதிகமானில்லிடை யதிகமான்வளர்ந்தனள்
பாருர்நீர்நாட் டாரூர்தன்னில்
அந்தணர்வளர்க்க யானும்வளர்ந்தேன்

(ஆகலால்.)

மாரிதான் சிலரைவரைந்துபெய்யுமோ
காற்றுஞ்சிலரைநீக்கிவீசுமோ
மாநிலஞ்சுமக்க மாட்டேனென்னுமோ
கதிரோன்சிலரைக் காயேனென்னுமோ
வாழ்நான்குசாதிக் குணவுநாட்டிலும்
கீழ்நான்குசாதிக் குணவுகாட்டிலுமோ
திருவும்வறுமையுஞ் செய்தவப்பேறும்
சாவதும்வேறிலை தாணியோர்க்கே
குலமுமொன்றே குடியுமொன்றே
இறப்புமொன்றே பிறப்புமொன்றே
வழிபடுதெய்வமு மொன்றேயாதலால்
முன்னோருரைத்த மொழிதவறாமல்
எந்நாளாயினு மிரப்பவர்க்கிட்டுப்
புலையுங்கொலையுங் களவுந்தவிர்ந்து
நிலைபெறவறத்தி னிற்பதையறிந்து
ஆணும்பெண்ணு மல்லதையுணர்ந்து
பேணியுரைப்பது பிழையெனப்படாது
பிறப்புஞ்சீலமுமல்லது பிறப்புநலந்தருமோ
பேதையீரே. 7

படிக்கரசனிருந்தாற் குடிக்கொருசேதமில்லை யென்பது.

செடிக்கொரு வேங்கைகுடிகொண்ட காடெனத்தேசத்திலே
அடிக்கொரு தீம்புசெய்வானரத் துரந் தராசாள விந்தப்

படிக்கொரு மன்னனுண்டானாலுமுழுது பயிரிடுமக்
குடிக்கொருசேதமுண்டோ வச்சுதானந்த கோவிந்தனே. 8

பொல்லாக் குணத்துக்கு நல்லமருந்துண்டோ யென்பது.

உணத்தக்க நன்மருந்தாற் பிணிபோமென் றுலகிலுள்ளோர்
பணத்துக்குக் கொண்டுபரிகரிப்பார் விடம் பாய்ந்து செத்த
பிணத்துக்கும் பச்சிலையுண்டு புல்லோர்க்குப் பிறக்கும் பொல்லாக்
குணத்துக்கு நன்மருந்தே தச்சுதானந்த கோவிந்தனே. 9

செல்வமிருந்தால் சுற்றத்தவருந்
தம்மை விட்டு நீங்கா ரென்பது.

உண்டானபோது கோடான கோடி
உறவின் முறையார்
தொண்டாகவே வந்து தொழுவா ரந்தச்செல்வந்
தொலைந்துவிட்டால்
கண்டாலும் பேசா ரழைத்தாலும் வாராரங்கென்ன
கவைபோ மென்பாரிந்தச்
சண்டாள ருறவு வேண்டேன் ரத்ன
சபாபதிக் கடவுளே. 10

ஒழுக்கத்து நின்றவர் பஞ்சமா பாதகங்கட்
கிடங்கொடா ரென்பது.

காதல் கவறாடல் கள்ளுண்டல் பொய்ம்மொழிதல்
ஈதல் மறுத்த லிவைகண்டாய் போதிற்
சினையாமை வைகுந் திருநாடா செம்மை
நினையாமை பூண்டார் நெறி. 11

உலகில் தோற்றும் பிறவிகளின்னின்ன தென்பது.

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அநின்ற இத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான். 12

மனதிற்கு அறிவு புத்திகூறல்.

வாழிநெஞ்சமே சென்றிடேல் நின்றதோர்
வார்த்தையெற்குரை செப்வாய்
ஏழியாமியற் றுபர்தவத் திவ்வுடல்
கிடைத்ததன்றோ மற்றீ
தூழிகால மிங்கிருக்குமோ நீயுமோர்ந்
துணையெனி னுளபோழ்தே
சூழுமேழ்பவந் துடைத்தல் செய்யா யிதென்
தொழுதரன் றுணைத்தாளே. 13

[அ-கை:—அறிவானது மனதை யழைத்து முன்செய்த தவப் பேற்றினல் வந்த தேகத்தால் சிவனை வணங்கி எழ்பிறவியு மொழிக் கச்செய்யென்று கூறும் எ-து.]

உயர்தவத்திவ் வுடல்கிடைத்த தென்பதற்குதாரணம்.

எறியுங் கடலி னுகத்தொளையி னியாமைக் கழுத்துப் புகுவதுபோற், பொறிவெம் பிறவி பநேகத்தாற் புருடன் விவேகி யெனப்பிறந்து,முறியும் பிறவிப் பயனிலவிம் மோக மமையுஞ் செய்தொழிலாற், செறிவ தென்னே யிவற்றாலே தினங்களெல்லாஞ் சென்றிடுமால். 14

ஈன்றவர் நம்மா லுற்ற வெண்ணரு மிடர்கட் கான்ற
மூன்றுல கமுமொப் பாமோ மூப்பினு விளைப்பா லன்னர்
கான்றவன் சொற்கள்கன்னல் கான்றவின் பாகெனக்கொண்
டூன்றுகோ லென்னத்தாங்கி யூழியஞ் செய்யாய் நெஞ்சே.

[அ-கை:—எண்ணமுடியாத் துன்பத்திலாழ்ந்துப் பெற்றவரது சொல் கற்கண்டைப் போலவும், பாகுபோலவும், ஊன்றுகோல் போலவுங் கொண்டேவல் செய்வதே நீதியாம் எ-து.]

மனையவள் வீயின் வேறோர் மனைவியைக் கொளலாம் பெற்ற
தனையரா திபரி றப்பிற் றனித்தனிப் பெறலாம் பின்னும்
புனைபொரு ளீங்கின் மற்றோர் பொருளையும் பெறலா மத்தன்
அனைபிறந் திடின்வேறத்த னனைவரு வாரோ நெஞ்சே. 16

[அ-கை:—அன்புவாய்ந்த மனைவியானவளிறப்பினும்வேறுமனைவியைப் பெறலாம் புத்திரரும் பொருளும் நீங்கிடினும் வேறு புத்திரரும் பொருளும் பெறலாம் அன்னை தந்தை யிறந்திடில் வேறன்னை தந்தை வாரார் எ-து]

பிறர்தாரந் தன்னைப் பெற்ற தாயாகப்
பிறர்பொருளை யோடாகப் பேணிப்—பொறைமேவும்
வைப்பினுயிர் யாவுந்தன் மன்னுயிரா வுற்றோனே
ஒப்பினுயர் ஞானி யுணர். 17

[அ-கை:—பிறர் மனைவியைப் பெற்றதாயாகவும், பிறர் பொருளை ஓடாகவும், உலகத்தில் வதியு முயிர்களை தன்னுயிர் போலவும் நினைப்பரே ஞானியாவார் எ-து.]

பொத்தகங் கன்னி பொருளிவைமற் றோர்பால்
உற்றிடிற் போயினவென் றுன்னுகளே—பெற்றால்
கிழிந்தும் நலநற்றுங் கேடுற் றரிதிற்
கழிந்தும் பெறவருமாங் காண். 18

[அ-கை:—அன்புடன் விசுவாசிக்கும் புத்தகமும், பொருளும், பெண்ணும் அன்னியர்பாலீந்திடில் ஒழிந்ததென் றெண்ணலாம் (அல்லது)கொடுக்கபெரின் கிழிந்தும் ஒழிந்தும் அந்தமற்றும் அரிதில் வரும், எ-து.]

எக்காரியத்திற்குஞ் சொற்சோர்வு படேல்.

நித்திபத்தைக் கேட்கப்போய் நித்திரையென் றேகுழறிப்
புத்தியற்ற கும்பகன்னன் பொன்றனன்பார்—மத்தமத
குன்றம்போற் புன்னைவனக் கொற்றவா பாகைமன்னு
என்றுஞ்சொற் சோர்வுப டேல். 19

எவருக்காகினு மீவதை விலக்கேல்.

மாவலியை மானுக்கு மண்ணுதவா மற்றடுத்த
காவலினற் சுக்கிரனுங் கண்ணிழந்தான்—ஆவதனல்
நன்னீதி புன்னைவன நாதமகி பாவுலகத்
தின்னீ வதுவிலக் கேல். 20

மாளாத்துயருழக்கும் கோபந் தணிப்பது—சடபாதர்

ஆதி நிமிர்ச்சிவிகைக் காளாய்ச் சடபாதர்
தீது பொருத்துச் சிறப்புற்றார்—சோதிப்
புயமா வளர்கின்ற புன்னைவன நாதா
செயமா ருவது சினம். 21

கையிலிருப்பதை யொளித்தல் கூடாதென்பது.

இந்துமதி விற்றுமலைந் தினனுக்கா ளாகியரிச்
சந்திரனே தன்னிலைமை தப்பாதான்—அந்த
மனுநெறிதேர் புன்னை வனநாதா பூமி
யினியல் வதுகர வேல். 22

தீரயோசித்து சேரிடமறிந்து சேரென்பது.

இருமைக்கு மெய்த்துணையா மென்றுமே மார்க்கண்டன்
அரனடியைச் சேர்ந்தா னவன்போல்—அருள்பெருகும்
பூசாப லாபாகை புன்னைவன மேமனமொத்
தேசே ரிடமறிந்து சேர். 23

பெண்கள் கல்வி பயிலாவிடிற் றரும மின்னதென
வறிந்து நடவாரென்பது.

கல்வியே யறவழி காட்டு மாண்மகன்
செல்வழி யறிந்திடான் வித்தை தேறுமுன்
அல்வளர் கூந்தலா ரறிய நூலின்றி
நல்வழி யுணர்ந்ததி னடக்கற் பாலரோ.

பெண்மகள் கெடுவளென் றஞ்சிப் பெற்றவன்
உண்மைநூ லவட்குணர்த் தாமை தன்மனைக்
கண்மறு புருடரைக் காணு மென்றதை
பெண்மையாய்த் தவன்பறித் தெறித லொக்குமே. 24

[அ-கை:—கல்வியாற் பெண் கெடுவளென்று அஞ்சி தரும
நூலை கற்றுக்கொடாத தந்தை அறிவிருந்து மில்லாதவனுவான் எ-து.]

காவலன் பயத்தினுற் கற்பைக் காக்கின்ற
பாவைய ரறநூற் பயன்றெ ரிந்திடிற்
பாவபுண் ணியநெறி யறியும் பண்பினுற்
சீவனீங் கினுமய லவரைச் சேர்வரோ. 25

[அ-கை:—கணவனச்சத்திஞல் கற்பைக் காக்கும் பெண்கள் அருமையான நூற்களைப் படித்தால் பாவபுண்ணியமறிந்து அன்னியரை சிவனிங்கிணு கினையார், எ-து.]

இக்கிளை நகுமொழி யெழின் மின்ஞரிஞன்
மக்கண்மிக் கோரொனன் மடமையா மிபன்
டக்கமு மொக்குமே யவற்று ளல்லகண்
ணக்கண்மற் றெக்கணே யழிவு டைக்கனே. 26

[அ-கை:—கரும்பைப் பழிக்குஞ் சொற்களுடைய பெண்களிஞண்மக்கள் மிக்கோரொன லறிவீனமே யன்றி இரண்டு கண்களில் உபயோகமுள்ள தெது, விழிந்ததெது எ-து.]

குலம்வேண்டு மென்றிருப்பார் குலத்துள்ளார் கல்வியிஞற் குறையாஞனப், பலம்வேண்டு மென்றிருப்பார் தந்தைமார்பறந்தபெருஞ் செல்வமுள்ள, தலம் வேண்டு மென்றிருப்பார் தாய்மார்கள் யௌவனமு நலமுஞ்சார்ந்த, நலம்வேண்டு மென்றிருப்பார் நாறுகுழன்மங்கைமார் நலத்தின் மிக்கார். 27

[அ-கை:—பெண்கட்கு கணவன் றேடுந்தந்தைமார் கல்வி வேண்டு மெனலுந் தாய்மார் பொருளை விரும்பலும் சுற்றத்தவர் குலத்தை விரும்பலும் பெண்கள் நல்ல அழகு வேண்டுதலும் இயற்கையாம் எ-து.]

இன்சொல்.

வந்த விருந்து மலராத வதன நோக்கு
முன் குழையும்
அந்த வடைவா லகத்தன்பை யலர்ந்த முகத்தால்
வெளிப் படுத்திச்
சந்த மணிவா யிஞவந் தோன்றச் சற்றும்
வஞ்சங் கலவாமே
உந்துஞ்சுவையின்மொழிபென்று முரைத்தல்வேண்டும்
பயன் வேண்டின். 28

மாசற்ற நெஞ்சுடையார் வன்சொலினி தேனையவர்
பேசுற்ற வின்சொல் பிறிதென்க—ஈசற்கு
நல்லோ னெறிசிலையோ நன்னுதா லொண்கருப்பு
வில்லோன் மலரோ விருபுப். 29

இன்சொலா லன்றி யிருநீர் வியனுலகம்
வன்சொலா லென்று மகிழாதே—பொன்செய்
கதிர்வளையாய் பொங்கா தழற்கதிராற் றண்ணென்
கதிர்வரவாற் பொங்குங் கடல். 30

புன்சொல்லும் நன்சொல்லும் பொய்யின் றுணர்கிற்பார்
வன்சொல் வழியராய் வாழ்தலு முண்டாமோ
புன்சொ லிடர்ப்படுப தல்லா லொருவனை
இன்சொ லிடர்ப்படுப்ப தில். 31

கற்றோர்க்குக் கல்வியே ஆபரண மென்பது.

கற்றார்க்கு கல்வி நலனே கலனல்லான்
மற்றோ ரணிகலம் வேண்டாவா—முற்ற
முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா யாரே
யழகுக் கழகுசெய் வார். 32

தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
யம்மா பெரிதென் றகமகிழ்க—தம்மினுங்
கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றதெல்லா
மெற்றே யிவர்க்குநா மென்று. 33

முற்று முணர்ந்தவ ரில்லை முழுவதூஉங்
கற்றன மென்று களியற்க சிற்றுளியாற்
கல்லுந் தகருந் தகரா கனங்குழாய்
கொல்லுக் கூடத்தி னால். 34

வாங்குங் கவளத் தொருசிறிது வாய்தப்பிற்
றாங்குங் களிறோ துயருறா—வாங்கதுகொண்
டூறு மெறும்பிங் கொருகோடி யுய்யுமா
லாருங் கிளையோ டயின்று. 35

பெண்கள் மீது மதன்கணை யெய்யு மியல்பு.

நெஞ்சி லரவிந்த நீள்சூதங் கொங்கையிலே
அஞ்சும் விழியி லசோகமாம்—வஞ்சியர்தஞ்
சென்னியிலே முல்லை திகழ்நீல மல்குலிலே
யன்னவே யெய்யுமியல் பாம். 36

மதன் கணைச் செயல்.

நினைக்கு மரவிந்த நீள்பசலை மாம்பூ
வனைத்து னவுநீக்கு மசோகு—வனத்கினுறு
முல்லை கிடைகாட்டு மாதே முழுநீலங்
கொல்லு மதனம்பின் குணம். 37

மாதர் கூந்தற்கிணை.

பேசுங் குழலைப் பிறங்கு முகிலென்று
மாசிலா நீல மணியென்றும்—வீசுமற
லென்று மிருளென்று மெழிற்கவரி பாசிக்கொத்
தென்று முவமை யியம்பு. 38

மாதர் மொழிக்கும், அதரத்திற்கும் பற்குமிணை.

இயம்புமொழி கிள்ளை யிரங்கிசையாழ் வீணை
வயங்கு கருங்குயில்வண் பூவை—தயங்கினிய
பாகு கரும்பமுதம் பாறேன் மதுப்பழமென்
ருகுமத ரம்பவள மாம். 39

ஆமே பவளமரக் காம்பன் முருக்கிலவம்
பூமெல் லிதழ்வீழிப் பொற்கனியாங்—காமமணிக்
குல்லையருந் தொண்டை கொடித்து தூளேகோப
முல்லை முருந்தெயிறு முத்து. 40

நுதற்கும், வெயர்வைக்கும், சொற்குமிணை.

மருங்கொசியு மின்னார்தம் வாணுதலை வானத்
தரும்புங் குழவிமதி யாயும்—புரந்தான்றன்
வில்லெனவு முத்தம் வெயர்வெனவு மேவிரும்பிச்
சொல்லும்பா குங்கரும்புஞ் சொல். 41

தோள், வயிறு, உந்தி, அல்குல், தொடை, முழந்தாள், கணைக்காலிற்குமிணை.

வேயிருதோ ளாலுதர மிக்கவுந்தி நீர்ச்சுழியாஞ்
சேபமணி யாலவட்டந் தேரரவு—தூயவல்குன்
மென்கதலி யூரு விளங்குமுழந் தாளலவ
னன்கணைக்கா ருவ்வரா ளுடு. 42

ஐச்சுவரியம்-8, உபசாரம்-16, பேறு-16.

வேண்டுநற் சுற்ற மிராசாங்க மக்கள்பொன் மேவுமணி
யாண்டிடுந் தொண்டுநெல் வாகன மாமிவை யட்டசெல்வங்
காண்டலி சிதல்கை கால்கழு நீரொடு மூக்குடிநீ
ராண்டளித் தேபுன லாட்டனல் லாடை பணிதல்பினே. 43

பின்னுமுந் நூலளித் தேகு தேப்வை பூசல் பிரசமலர்
அன்னைப் புனைக னிசியரி தூவற் றரனரை முன்
னென்னிகர் தீபங்கர்ப் பூர மிடலமு தேந்தல் கொடன்
மன்னடைக் காய்மலர் மந்திரத் தர்ச்சித்தன் மாண்பெனவே.

என்னுமிவ் வீரெட் டுபசாரமாம்வலி யேரிளமை
நன்மக்க ளேயின்மை வாழ்நாட் புவிமின் னலனுகர்ச்சி
பொன்னறி வூக்க மிகுகல்வி வெற்றி புகழ்பெருமை
யென்மூத லீரெட்டுப் பேறுநற் புண்ணியர் நேர்வனவே. 45

அட்டமங்கலம்.

சாற்றுங் கவரி நிறைகுடந் தோட்டிமுன் றற்பணமா
மேற்றிய தீப முரசம் பதாகை யிணைக்கயலே
நாற்றிசை சூழ்புவி மீதட்ட மங்கல நன்குழையின்[திருவே.
மேற்றிகழ்வேற்றடங்கட்செய்ய வாய்ப்பைம்பொன் மெய்த்

32-தருமமு மின்னின்ன தென்பது.

வண்ணான்புன் னாவிதன் காதோலை சோலை மடந்தடம்வெண்
சுண்ணம் பறவைப் பிணஞ்சுட றாரியஞ் சோறளித்தல்
கண்ணாடி யாவிற் குரிஞ்சுகல் வாயுறை கண்மருந்து
தண்ணீப்பந் தர்தலைக் கெண்ணெய் பெண்போகந் தாலையமே.

மேதகு மாதுலர்க் குச்சாலை யேறு விடுத்தல்கலை
யோதுவர்க் குண்டி விலங்கிற் குணவோ டுபர்பிணிநோய்க்
கீதன் மருந்து சிறைச்சோ றளித்த வியல்பிறரின்
மாதுயர் காத்தனற் கந்நியர் தாநம் வழங்கலுமே. 48

கற்றவறு சமையத்தார்க் குணவு கருதும்விலை
யுற்றதளித் துயிர் மீட்டல் சிறுருக்கு தவனற்பான்
மற்றுமகப் பெறுவித்தல் சிறுரை வளர்த்தலெனப்
பெற்றவிவற் றினை யெண்ணான் கறமெனப் பேசுவரே. 49

ஆடவர்ச் சிறப்புவமை.

திருமான் முருக னளகேச னிந்திரன் சேண்முகிலை
பொருமாரன்வீமன் விசயன்மெய்க்கன்னன் புகழ்த்தருமன்
வருமான சீவகன் மூவேழு வள்ளல் வநசநிதி
தருமா மணிசங்கந் தேனுவைப் போலவுஞ் சாற்றுவதே. 50

மடவார்ச்சிறப்புவமை.

வதியு மின்னார் தமைப் பேசத் திருவுமை வாணிமகி
ரதியையும் பார்பதி வாழுமற் றோரை யரம்பையரை
மதிதரு மான்பிடி யன்னங் குயில்கிள்ளை மாமயிலைப்
பொதியவொப்பார்படையாவாரெழின்மதன்போர்செய்யவே.

சிவன் பெருமை.

போராடு வேலை விழியழ லேவிப் பொடிப்படுத்தி
னோரார் புரத்தை நகையா லெரித்து நிலாவணிந்து
காராழி நஞ்சுண்டு தக்கன்றன் வேள்வி கடிந்தாக்க
ளோராத் தலைநெரித் தேசண்டன் வீழவுதைத்தனனே. 52

உதிக்குங் கடவுட் கதிரோன்றன் பல்லை யுறவுதிர்த்து
வீதிக்குந் தலையைத் திருகித்தகர்வரும் வெங்கனற்கு
மதிக்குங் காமறுத் திந்துவைத் தேய்த்துயர் வாணிதுண்டஞ்
செதிக்கும்படித்தள்ளியிமத்துட் டாண்டவஞ்செய்தனனே.

தாண்டவஞ்செய்து தழலுரு வாதித்தரையிடந்து
கீண்டவனுக்குந் தெரிவரிதா யளகேசனுக்கு
வேண்டிய சங்கநிதி முதலாக வியந்தளித்த
காண்டகுஞ் சோதியென்பார்க் கெய்து மேகலை மாதவமே.

மாதவர் வேள்வி புரிந்தே விடுத்த வரியரவு
போதகம் வேங்கை மழுமான் முயலகன் பொங்கனலென்
றோதரும் வெம்பகை வீறொழித்தே தன் னுருவமைத்தக்
காதணி சங்கக் குழையான் சரணங் கருதுமினே. 55

மின்னும் பவளமுஞ் செவ்வானும் வேணிமெய் யூர்தியுடன்
றுன்னுங் கொடிவிடை யேந்தல் கபாலந் துடிசுடர்மான்
மன்னுங் கொடுங்கதிர்ச் சூலா யுதம்படை மாதவற்கு
முன்னந் திகிரியளித்தோன் முடித்தது முற்கங்கையே. 55

கங்கையும் வில்வமு மென்பு மராவுங் கடுக்கையும்வெண்
டிங்களுந் தும்பையு மாரு மெருக்குந் திகழுறுகும்
பங்கப னன்னத்துருவாகி நாடிப் பறந்தறியா
வெங்கள் பிரான்பவ ளச்சடை மீதணிந் தேர்பெற்றதே. 56

விநாயகன் பெருமை.

வெண்பா.

தேய்ந்த தினிவளருஞ் செல்வப் புகழுறுமென்
றோய்ந்து மதிபொதியு மச்சடைபோற்—றோய்ந்ததிறச்
செந்துவர்மா மேனியெழிற் செல்வன் கழன்மலரில்
வந்திறைஞ்சு மன்பரொனும் வண்டு. 57

வண்டார் மதப்பிரச வல்விலங்கு கிம்புரிதூண்
டண்டார் புழைச்சிந் தூரத்தடக்கைத்—துண்டக்
கழைமருப்புச் செங்கட் கறையடிவெங் கோபக்
குழைசெவிநால் வாய்க்குஞ் சரம். 58

முருகன் பெருமை.

சரவணத்து தித்தாறு தாயர்மகிழ் சண்முகனோர்
குரவனென வீசற்கு மார்—னரிகுறவ
ரிந்திரற்கு மாமருக னேந்தயிலோன் மாமயிலோன்
கந்தன்சே வற்றுவசன் காண். 59

காணுஞ் சசிமகளைக் கானவளைக் கைப்பற்றி
நாணவய ளிந்திரனன் ஞடுறவே—பூணு
முரண்சூர்ச்செற் றக்கடம்பின்மொய்ம்பனடி யார்க்குக்
கருணைபெரு கின்பக் கடல். 60

திருமாலின் பெருமை.

நெடில் விருத்தம்.

கடலிற்றுயின்றுங் கடலடைத்துங் கடலைக் கடைந்துங் கடல் சுவறக்
கணையொன் றேவிக் கடற்புவனங் கடந்துஞ் சரணொன் றாலளந்து
முடலைக்குறைத்தும் புவியிடைந்தண் டுமிழ்ந்துமுடலைச் சகடுதைத்து
மூரிக்களிறோ டிணைமருத முளரிந்தும் விளவிற் கன்றெறிந்து
மடலூற் றெதிர்ந்து பெருந்தருகி னலகை யிடந்துங் கடலைகவர்ந்து
மாயர் குலத்தில் வந்துதித்து மசுரர் கிளையைவேரறுத்து
மிடலூற் றலகை முலைபருகி யான்பா லிழுது வெண்ணெய்தயி
ரெடுத்தாங் கருந்திப் பதினாறா யிரவர் குரவை கொண்டானே. 61

குரவை குனித்து விளையாடிக் குன்று குடையா யெடுத்தொருகாற்
கொண்டறடுத்து வேயூதிக் கோலிற் றுயின்று நிரையினமேய்த்
தரவின்டித்து வருமுல்லை யாயர் தலைவன் யமுனையினீ
ராடுஞ் சிறிய கருஞ்சிறுக்க னளிக்க மகவை யந்தணர்க்காய்
விரைவி னழைக்க யமபுரம்போய் மீண்ட குரிசிற் றிகிரியினால்
வெயிலை மறைத்து வலம்புரிவாய் விட்டு மதமா வெங்கரவாற்
பரவி யழைக்க வந்தருளிப் பார்த்தன் றனக்குத் தேர்கடவிப்
பரிந்து போற்றத் துகிலிழந்த பாஞ்சாலிக்கு மளித்தானே. 62

அளிக்குஞ் சிறுசே லுருவெடுத்து மரிய மறையை முன்கொணர்ந்து
மாமை யுருக்கொண் டடைகிடந்து மாதி வராக வுருவெடுத்துங்
களித்துத் தூணின் மடங்கலுருக் காட்டிக் கனக னுடற்பிளந்துங்
கடும்போர் வலிய மாவலியைக் காலி னடக்கிப் புவிகவர்ந்தும்
வளிக்குந் தொலையா முதுமதுகை வாணன் புயமா யிரமறுத்தும்
வஞ்சக் கஞ்சனுடல் செகுத்தும் வனம்போ யரசு துறந்திருந்துங்
குவிக்குஞ் சரத்தாற் றாடகையைக் கொன்றுமிகல்வாலியைக் கடிந்துங்
கொடிய கவந்தன் புயந்துலைத்த கொண்டன முள்ளங்குடி தங்கும்.

முடுகு விருத்தம்.

தங்குந் திருமறு மார்பன யோத்தித்தலைவன் பலவீமன்
றடவட மதுரைத் திருநக ராளன் றரைமகள் சானகிதன்
கொங்கைத் துணைவன் றசரத ராசகுமாரன் வாசுதேவன்
குலம்வரு முதல்வனந்தன் மைந்தன் கோதைய சோதையிளஞ்
சிங்கங் கோசலை செல்வன் றேவகி சிறுவன் சனகையர் கோன்
றெய்வப் புதுமண வாளன் பஞ்சவர் செல்வச் சிறுதூதன்
பொங்குங் கடலிடை யறிதுயில் கூரும் புருடன் சங்குசரம்
பொருதண் டாழிவில் வாளுடனேந்தும் புனிதனை நினைவீரே. 64

பிரமன் பெருமை.

நினைக்கிலய னேறு நெடுங்கொடியு மன்ன
நனைக்கமலந் தாரிருப்பா நாட்டுந்—தனிப்படையே
தண்டமுன் னூலாரந் தவளமலர் வாணியவ
னெண்டொடியென் றுள்ளத் துணர். 65

மனிதராய்ப் பிறக்கினும் பறவை, மிருகம், கல், மரம், சுரு, தேவர், மனிதர் குணங்களைப்போ லுள்ளா ரெனல்.

மனிதரிலும் பறவையுண்டு விலங்குண்டு கல்லுண்டு மரமுமுண்டு
மனிதரினு நீர்வாழு ஞ்சாதியுண் டனேககுலமனித ருண்டு
மனிதரினு மனிதருண்டு வானவரு மனிதராய் வருவ துண்டு
மனிதரிலே பிறப்பறுக்கவந்ததே யருமையென வதுத்தார்முன்னோர்.

அஞ்ஞானக்காட்டை அறிவாகிய கோடரியால் களைவதிதுவெனல்.

கூரார் விவேகமெனுங் கோடரியா லஞ்ஞானக்
காராருங்காட்டைக் களைந் தெடுத்துச்—சீர்ஞான
தீபங்கைக் கொண்டாற் றிகழ்முத்தி தோன்று மன்றே
தாபமறு மானிடரே தான். 67

அறிவுளோர் தன்மை.

மனமெனு மகந்தைநீக்கி மாற்றிலா வின்பவீட்டிற்
சினமதை கழித்துமேலாந் தேசிக னருளைப்பெற்று
அனலதாங் கானலேற்றி யடைபொரு ளிதுவேயென்று
தனையகன் றிருப்பரெல்லாந் தரணியில் மேல்வராமே. 68

இதுவுமது.

காமமாதிகள் வந்தாலுங்கணத்திற்போமனதிற்பற்றார்
தாமரையிலைத்தண்ணீர்போற்சகத்தொடுங்கூடிவாழ்வார்
பாமரரெனக்காண் பிப்பார் பண்டிதத்திறமை காட்டார்
ஊமரு மாவா ருள்ளத்துவகையாஞ் சீவன் முத்தர். 69

கடவுளைத்தவிர எந்தவுலகத்திலும் நல்லவரில்லையெனல்.

எல்லார்க்கு நல்லவனிங்கில்லையங்கில்லை யெங்குமில்லை
யெல்லார்க்கு நல்லவன் சந்திரனுமினுமேந்திழையா
ரெல்லார்க்கு நல்லவனுமேயிருந்திலனென் றிகழ்வா
ரெல்லார்க்கு நல்லவனீயே புகழ்க்கச்சியேகம்பனே. 70

பாவத்தைத்தள்ளினால் பற்றுதெழுபிறவியெனல்.

புலைகளொடு கொலைகளவு கட்காமத்தைப்
புந்திதனிற் கருதாமல் நிற்பா யாகில்
மலைமகளோர் பாகனுந்தன் வசமாய் நின்பான்
மாதவமு நிலைக்குமிந்த வழிநில் லார்க்கு
அலைகடலிற் றுரும்பதுபோல் மனந்தள்ளாடும்
அறிவுதனக் கானிவரு மதுவல் லாமல்
நிலைதவறு மெழுபிறப்பும் நீங்கா தென்றே
நீணிலத்தி லருமறைக ளோதும் வாறே. 71

இதுவுமது.

அனைத்துயிருமொன்றுயென் னெரியரும்பசியெவைக்குமாற்றி
மனத்துள பேதாபேதம் வஞ்சகங் களவு சூதுஞ்
சினத்தையுந்தவிர்ப்பாயாகில் செய்தவம்பின்வேருண்டோ
உனக்கிது யுறுதிகண்டாயுபதேச மிதுவேதானே. 72

நல்லோரைக்காண்பது நலவென்பது.

நல்லாரைக் காண்பதுவு நன்றே நலமிக்க
நல்லார்சொற் கேட்பதுவு நன்றே—நல்லார்
குணங்களுரைப்பதுவு நன்றே யவரோ
டிணங்கி யிருப்பதுவு நன்று. 73

தீயோரைக் காண்பது தீதுவென்பது.

தீயாரைக் காண்பதுவுந் தீதே திருவற்ற
தீயார்சொற் கேட்பது வுந்தீதே—தீயார்
குணங்க ளுரைப்பதுவுந்தீதே யவரோ
டிணங்கி யிருப்பதுவுந் தீது. 74

சபையிற் குறிப்பறிவ திதுவென்பது.

கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கு
மவையல்ல நல்ல மரங்கள்—சபைநடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டாதவனன் மரம். 75

தீயோர்க்குபகாரஞ்செய்தலினால் வருங்கேடு.

வேங்கை வரிப்புலிக்குத் தீர்த்த விடதாரி
யாங்கதனுக் காகார மானாற்போல்—பாங்கறியாப்
புல்லறிவாளர்க்குச் செய்தவுபகாரங்
கல்லின்மே லிட்டகலம். 76

நற்குலத்திற் பிறந்தாலும் பிறவிநோயொழியாதெனல்.

கற்றதனாற் றொல்லைவினைக் கட்டறுமோ நல்லகுலம்
பெற்றதனாற் போமோ பிறவிநோ—புற்றகட
னஞ்சுகந்து கொண்டருணை நாதரடித் தாமரையை
நெஞ்சுகந்து கொள்ளா நெறி. 77

தேகம் விழுமுன் தெய்வந்தொழுவெனல்.

காய நெகிழாமுன் கண்களிருளா முன்
வாயிலுள்ள பல்லும் வழுவாமுன்—காயம்பார்த்
தோடிநமன் வாராமுன் னுள்ளமே சோணகிரி
நாடிநம வென்றே நட. 78

பிரமவிட்டுணு காலநிலை.

கோடிவிதி மாளிற் குலாவு கமலக்கண்ணா
னொடி வடவா லுறங்குமே—நாடுங்கா
லக்கண்ணார் கோடி யழியி னருணகிரி
நக்கனருள் சற்றே நகும். 79

காரணனை யறியின் காலனை வெல்லலாகுமெனல்.

காலன் றனக்கஞ்சக் காரணமென் னெஞ்சமே
பால முகுந்த வருணேசன்—கோலத்தை
நேசமுற்று நீகருதி னீங்காம னின்றலைக்கும்
பாசமுற்று நீக்கும் பரன். 80

அநேக நட்சத்திரங்கள்கூடினும் சந்திரனுக்கிணையாகா தென்பது.

கல்லார் பலர்கூடிக் காதலித்து வாழ்கினுநால்
வல்லா னொருவனையே மானுவரோ—அல்லாரும்
எண்ணிலா வான்மீ னிலகிடினும் வானகத்தோர்
வெண்ணிலா வாமோ விளம்பு. 81

பேசுந்தெளிவால் கற்றவரும் நற்றவருந் தெரிந்து கொள்வது.

வாக்குநயத் தானறிக கற்றவரை நற்றவரை
யாக்கைநயத் தாலறிய லாகாதே—காக்கையொடு
நிலச் சிறுகுயிலை நீடிசையா லன்றியே
காலத் தறிவாரோ கூறு. 82

குற்றமிலாதவரும் இடபேதத்தால் குற்றமுடையவராவா ரெனல்.

நிந்தையிலாத் தூயவரு நிந்தையரைச் சேரிலவர்
நிந்தையது தம்மிடத்தே நிற்குமே—நிந்தைமிகு
காலநிழற் கீழிருந்தா னென்பா லருந்திடினும்
பாலதெனச் சொல்லுவரோ பார். 83

அறிவிலாப்புத்திரர் பலரிருப்பதைக்காட்டினுமறிவுடை யோனொருவனே போதுமெனல்.

பொற்பறிவில் லாதபல புத்திரரைப் பேறலினோர்
நற்புதல்வ னைப்பெறுத னன்றாமே—பொற்கொடியே
பன்றிபல குட்டி பயந்ததினு மேதுபயன்
ஒன்றமையா தோகரிக்கென் றோது. 84

பொருள்தேடலும், காப்பாற்றலும், அழித்தலும் பிரர்க் கிதலுந் துன்பமேயெனல்.

இன்ன றரும்பொருளை யீட்டுதலும் துன்பமே
பின்னதனைப் பேணுதலும் துன்பமே—அன்ன
தழித்தலுந் துன்பமே யந்தோ பிறர்பால்
இழித்தலுந் துன்பமே யாம். 85

மனிதரைப்பார்க்கினும்.நின்குடைய மிருகமே யுயர்வெனல்.

கொம்புளதற் கைந்து குதிரைக்குப் பத்துமுழம்
வெம்புகரிக் காயிரந்தான் வேண்டுமே—வம்புசெறி
தீங்கினர்தங் கண்ணிற் றெறியாத தூரத்து
நீங்குவதே நல்ல நெறி. 86

நல்லோர்களெக்குடிபிறக்கினுந் தாழ்ந்தவராகாரெனல்.

தாமரை பொன்முத்து சாமரைகோ ரோசனைபால்
பூமருதேன் பட்டு புனுகுசெவ்வா—தாமழன்மற்
றெங்கே பிறந்தாலு மெள்ளாரே நல்லோர்கள்
எங்கே பிறந்தாலு மென். 87

குடும்பத்திற்கடங்காப்பெண் கொல்லயெமனுவாளெனல்.

கல்லாத மாந்தற்குக் கற்றுணர்ந்தார் சொற்கூற்றம்
அல்லாத மாந்தர்க்கறங்கூற்றம்—மெல்லிய
வாழைக்குத் தானீன்ற காய்கூற்றங் கூற்றமே
இல்லிற் கிசைந்தொழுகாப் பெண். 88

இறக்கும் வரை துன்பஞ் செய்யினு மறிவுளோரிகழா ரெனல்.

சந்தனையுந் தீபனவே செய்திடினுந் தாமவரை
ஆந்தனையுங் காப்ப ரறிவுடையோர்—மாந்தர்
குறைக்குந் தனையுங் குளிர்நிழலைத் தந்து
மறைக்குமாங் கண்டீர் மரம். 89

அறிவுடையோர் கோபம் அரைநொடியில் மாறுமெனல்.

கற்பிளவோ டொப்பர் கயவர் கடுஞ்சினத்துப்
பொற்பிளவோ டொப்பாரும் போல்வாரே—விற்பிடித்து
நீர்கிழிய வெய்த வடுப்போல மாறுமே
சீரொழுகு சான்றோர் சினம். 90

அரசனைப்பார்க்கினுங்கற்றவர்க்குச்சென்றவிடமெலாஞ் சிறப்பெனல்.

மன்னனு மாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்—மன்னனுக்குத்
தன்றேச மல்லாற் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்ற விடமெல்லாஞ் சிறப்பு. 91

ஒருவேளை புசிப்பவனே யோகியெனல்.

ஒருபோது யோகியே யொண்டளிக் கைமாதே
யிருபோது போகியே யென்ப—திரிபோது
ரோகியே நான்குபோதுண்பா னுடல் விட்டுப்
போகியே யென்று புகல். 92

ஈய்க்குவிஷந்தலையில் தேளுக்கு கொடுக்கில் பாம்பிற்கு பல்துன்மார்க்கருக்கு உடல்முழுது மென்பது.

ஈய்க்கு விடந்தலையி லெய்து மிகுந்தேளுக்கு
வாய்த்தவிடங் கொடுக்கில் வாழுமே—நோக்கரிய
பைங்கண ரவுக்குளிடம் பல்லளவே துர்ச்சனருக்
கங்கமுழுதும் விடமே யாம். 93

கற்புடைய பெண்களின் செய்கை.

அன்னை தயையு மடியாள் பணியுமலர்ப்
பொன்னி னழகும் புவிப்பொறையும்—வன்னமுலை
வேசி துயிலும் விரல் மந்திரி மதியும்
பேசிலிவை யுடையாள் பெண். 94

(பொ-ரை) அன்பில் தாயைப்போலும், பணிவிடை செய்வதில் அடியாளைப்போலும், அழகில் இலட்சுமியைப்போலும் பொருமையில் பூமிதேவியைப்போலும், பஞ்சணையில் வேசியைப்போலும், அறிவில் மந்திரியைப்போலு மிருப்பவளே மனைவியாவாள்.

கத்திப்பேசும் பெண்களால் காலம் படும் பெரும்பாடு.

பெண்ணொருத்திபேசில் பெரும்பூமி தானதிரும்
பெண்ணிருவர் பேசில் விழும் வான்மீன்கள்—பெண்மூவர்
பேசிலேசுவறும் பேதையே பெண்பலர் தாம்
பேசினுலக மென்னுமோ பின். 95

(பொ-ரை) ஒருபெண் பேசினால் பூமியதிரும், இரண்டு பெண்கள் பேசினால் நட்சத்திரங்களுதிரும், மூன்று பெண்கள் பேசினால் சமுத்திரசலம் வற்றிப்போம் பலபெண்கள் பேசினால் உலகம் என்ன பாடுபடுமோ தெரியாது.

யுகம் நான்கிற்கும் நான்கு பெண்களெமனாயிருந்தா ரென்பது.

என்னை கிரேதத்தி ரேணுகையே கூற்றுவனார்
தன்னேர் திரேதத்திற் சானகியே—பின்யுகத்திற்
கூடும் துரோபதையே கூற்றாங் கலியுகத்தில்
வீடுதோறுங் கூற்றுவனாமே. 96

(பொ-ரை) கிரேதாயுகத்தில் ரேணுகை நமன் போலிருந்தாள், திரேதாயுகத்தில் சீதை நமன்போலிருந்தாள், துவாபரயுகத்தில் துரோபதை நமன்போலிருந்தாள், கலியுகத்தில் வீடுகள்தோருமிருக்கும் பெண்களே நமனாவார்கள்.

பெரியோர் மூடரைக்கண்டால் விலகிப்போவாரென்பது.

பேதையரைக்கண்டால் பெரியோர் வழிவிலகி
நீதியொடு போதனெறி யன்றோ—காதுமத
மாகாத்த யானைவழி விலகல்புன் மலந்திரன்
சூகரத்துக் கஞ்சியோ சொல். 97

(பொ-ரை) பெரியோர் மூடரைக்கண்டால் விலகிப்போவதே நல்ல நெறி அதேனெனில் மலத்தைப்புசிக்கும் பன்றியைக்கண்டால் யானை விலகிப்போவது அதற்குப் பயந்தன்று.

ஞானிகளின் றன்மை.

எத்தொழிலைச் செய்தாலு மேதவத்தைப் பட்டாலும்
முத்தர் மனமிருக்கு மோனத்தே—வித்தகமாய்க்
காதிவிளை யாடியிரு கைவீசி வந்தாலும்
தாதிமன நீர்க்குடத்தே தான். 98

சோரமனை யாட்டிமிகச் சோரபிரான் மேன்மனதாய்ச்
சேரத் தொழில்செய்யுந் திட்டம்போல்—பேர்பெரிய
அக்கனடி யேன்மனத்தை யானது வைத்துகந்தே
எத்தொழிலுஞ் செய்வ ரிசைந்து. 99

மண்மேற்பொறுமையுடையோரும் மதிபோற் சாந்தமுடையோரும்
புண்போலுடலைப்புனைந்தோரும்புனல்போலொழுக்கம் பூண்டோரும்
கண்போலிரக்கமுடையோருங் கனல்போற்புசிக்குங்கதியோரும்
விண்போ லறிவை யறிந்தோரும் பிறவாரிந்த மேதினிக்கே.

விதியினளவே யனுபவித்த விதுவென்பது.

ஆழ வமுக்கி முகக்கினு மாழ்கடனீர்
நாழி முகவாது நானாழி —தோழி
நிதியுங் கணவனு நேர்படினுந்
தந்தம் விதியின்பயனே பயன். 101

(பொ-ரை) ஆழமாகியசமுத்திரத்தில் ஒருபடியைக்கொண்டுநான்குபடி நீர் முகவேண்டுமானால் முகவாது (அதுபோல்) ஒருபெண்ணுக்கு அழகுடைய புருஷனும் பொருளும் கிடைத்தாலும் தானெவ்வளவு அனுபவிக்கக்கூடுமோ அவ்வளவு தானனுபவித்தல் கூடும்.

தீயவரைக்காத்தல் தீமைக்கிடமென்பது.

நன்றறியாத் தீயோர்க் கிடங்கொடுத்த நல்லோர்க்குந்
துன்று கிளைக்குந் துயர் சேரும்—குன்றிடத்திற்
பின்னிரவில் வந்தகரும் பிள்ளைக்கிடங் கொடுத்த
அன்னமுதற் பட்டதுபோ லாம். 102

(இ-ள்) காகத்துக் கிடங்கொடுத்த அன்னப்பட்சிக்குத் துயரஞ் சம்பவித்ததுபோல துஷ்டருக்கு இடங்கொடுத்த நல்லோர்க்கும் அவர்கள் சுற்றத்தவர்க்கும், துயரஞ்சம்பவித்த வரலாறு. ஒருவராலும் ஏற முடியாத பெரியமலைக் குகையில் அன்னப்பட்சிகள் வாசஞ்செய்துக் கொண்டிருக்கையில் ஒருநாளிரவு ஒரு காக்கையானது வந்து ஓ அரச வன்னமே நான் மழையில் நனைந்து திசைதப்பிவந்தேன். நீ இடங் கொடுத்தாதரிக்கவேண்டுமென்று கூற அவ்வரசவன்னம் மந்திரியன் னத்தை நோக்க, அரசனே எந்தப்பட்சிக்கிடங் கொடுத்தாலும் காக்கைக்குமாத்திர மிடங்கொடுக்கலாகாதெனத்தடுக்க, மந்திரி! காக்கையினிடம் உதயகாலத்திலெழுந்திருத்தலும், ஒருவருங்காணமல்புணர்தலும், உணவுநேர்ந்தால் சுற்றத்தோடுண்ணலும், உயிரோம்புதலுமாகிய ஐந்து குணங்களையுடையதாகையால் அதைக் காப்பாற்றுவதே தருமமென்று இடங்கொடுக்கக் காக்கை அன்றிராத்திரியங்கிருக்கையில் மலங்கழித்தது அம்மலத்திலிருந்த ஆலம் விதைமுளைத்துப் பெரியமரமாகி விழுதுகளைப் பற்றிக்கொண்டு ஒரு வேடன்மேலேறிக் கண்ணிவைத்து அன்னதொகுதிகளை யெல்லாங் கொண்டுபோனான்.

அகத்திலழகு முகத்தில் தெரியுமென்பது.

அற்றசிவ யோகிக் கருஞ்சின்ன மூன்றுண்டு
பற்றலகை யுன்மத்தம் பாலரியல்—முற்றாரச
வாதிக்குச் சின்ன மூன்றுண்டே மகிழ்போக
மீதிவிர வாமை யென்று. 103

(இ-ள்) சிவயோகிக்கு மூன்றடையாளமுண்டு அவையாவையெனில் அகப்பற்றுபுறப்பற்று நீக்கிப் பேய்பிடித்ததுபோலவும் உன்மத்தங்கொண்டதுபோலவும் பாலர்போலுமிருத்தலாம். ரசவாதிக்கு மூன்றடையாளம் அவையாவையெனில், செல்வமனுபவித்தலும் இரப்பவர்களுக்குக் கொடுப்பதுந்தான் ஒருவரிடத்தி லிரவாமையும்.

பெரியோர்குணமுஞ் சிறியோர்குணமு மிதுவென்பது.

மனம்வேறு சொல்வேறு பண்ணு தொழில்வேறு
வினைவேறு பட்டவர் பால் மேவும்—மனமே
மனமொன்று சொல்லொன்று வான்பொருளு மொன்றே
கனமொன்று மேலவர்தங் கண். 104

(இ-ள்) துன்மார்க்கர்களுக்கு மனம் வாக்கு செய்கையாகிய இம் மூன்றும் வெவ்வேறாயிருக்கும். மேலோர்க்கு மனம் வாக்கு செய்கை ஆகிய யிம்மூன்றும் ஒன்று போலவேயிருக்கும். (எ-று)

சத்திய வசனம் சனத்திற்கு வருத்தம்.

சத்திய மெக்கானுஞ் சனவருத்த மாகுமே
யத்தியபொய் யார்க்கு மிதமாகு—சத்திபால்
வீடுதோ றுஞ் சென்று விலைபாமது விருந்த
வீடுதனி லேவிலையா மே. 105

(இ-ள்) சனங்களுக்கு சத்தியவசனமானது விரோதமாகவே யிருக்கும்,அசத்தியமானது இதமாகவே யிருக்கும் அதெப்படியெனில் பாலானது வீடுகள்தோறுஞ் சென்று விற்றால் விலையாகும். கள்ளானது யாவருந்தேடிவந்து வாங்கும்படி இருந்தவிடத்திலேயே விலையாகும். (எ-று)

உத்தமர் மத்திமர், அதமரிம்மூவர்க்கு மின்னின்னது வொப்பாமெனல்.

உத்தமர்தா மீயுமிடத் தோங்குபனை போல்வரே
மத்திமர்தாந் தெங்குதனை மானுவரே—முத்தலரு
மாங்கமுகு போல்வார்கம ரவர்களே
தேங்கதலி யும்போல்வார் தேர்ந்து. 106

(இ-ள்.) கொடுக்குந் தன்மையில் உத்தமர் பனைமரத்துக்கொப்பாவார் மத்திமர் தென்னமரத்துக்கொப்பாவார், அதமர் கமுகுமரத்திற்கும் வாழைமரத்திற்கும்ஒப்பாவார். பனைமரம் நீரைவிரும்பாமலே பலனைத்தரும் தென்னமரம் நீர்விட்டமட்டில் பலனைத்தரும் கமுகும் வாழையும் மாறாமல் நீர்விட்டுக்கொண்டிருந்தால் பலனைத்தரும்.

பெண்வழிச் சேரலின் குற்றம்.

தன்னைப் புகழ்வானுஞ் சாட்சிசொல்லி நிற்பானும்
பொன்னைமிகத் தேடிப் புதைப்பானும்—ஒன்னலர்தம்
நன்புத்தி கேட்பானு நாணமில்லாதானும்
பெண்புத்தி கேட்பானும் பேய். 107

(இ-ள்.) தன்னைத்தானேபுகழ்ந்துபேசிக்கொள்பவனும் நியாயத்தலத்தில் சாட்சி சொல்லித் திரிபவனும், மிகு செல்வத்தை சம்பாதித்து தானுமுண்ணாமல் பிறருக்கும் கொடாமல் புதைத்துவைப்பவனும் பகைவர்கள் வஞ்சமாகச்சொல்லும் புத்திகளை கேட்டு நடப்பவனும் வெட்கமென்பதே யில்லாமல் மூடப்பெண்களின் வார்த்தை

யைக்கேட்டு நடப்பவனுமாகிய யிவர்களெல்லாரும் பேய்க்குச்சமான மாவார்கள்.

பெண்டுகள் சொற் கேட்கின்ற பேயர்களை குணமூடப்
பேடிலோபர்
முண்டைகளுக் கிணையல்லா முனைவீரர் புருடரென
மொழி யொணாதே
உண்டுலக முதிப்பாருள் கீர்த்தியற மின்னதென
வுணர்வே யில்லார்
அண்டினவர் தமைக்கெடுப்பா ரழிவழக்கே சொல்வதவ
ரறிவு தானே. 108

(இ-ள்.) மங்கையர் சொற்களைக் கேட்கின்ற பேயர்களாகிய குணங்கெட்ட பேடியொத்த வுலோபிகளும் விதவைகளும், ஒப்புவமையில்லாத சுத்தவீரர்களுமாகிய விவர்களையும் ஆண்டன்மையுடையவரெனச் சொல்லக்கூடாது; உலகத்திற் பிறந்தவர்களுள் புகழும் தருமமும் இன்னதென்று ஆராய்ந்து அறியார்களே அடுத்தவர்களைக் கெடுப்பவர்களாவார் நியாயத்தைவிட்டு விரோதமாகப் பேசுவதே அவர்கள் புத்தியாகும். (எ-று.)

மங்கை கைகைசொற்கேட்டு மன்னர் புகழ் தசரதனு மரணமானான்
செங்கமலச் சீதைசொல்லை சிராமன் கேட்டவுடன் சென்றான்
மான்பின்
தங்கையவள் சொற்கேட்ட விராவணனுங் கிளையோடு தானு
மாண்டான்
நங்கையர் சொற் கேட்பதெல்லாங் கேடுவரும் பேருலகோர்
நகைப்பார்தாமே. 109

(இ-ள்.) அரசர்புகழும் தசரதன் கைகேசியெனும் மனைவின் சொற்கேட்டுமரணமடைந்தான். ஸ்ரீராமபிரான் ஜானகிசொற்கேட்டு மான்பின்சென்று வருந்தினன். இராவணன் தன்தங்கையாகிய சூர்ப்பனகையின் சொற்கேட்டுத் தன் சுற்றத்தோடு மாண்டான் ஆதலால் பெண்கள் சொற்கேட்பதெல்லாம் துன்பத்திற்கேயிடமாகும் உலகத்தவரும் நகைப்பார்கள். (எ-று.)

கெர்வத்தின் கொடுமை.

கற்றது கைம்மண்ணளவு கல்லா துலகளவென்
றுற்றகலை மடந்தை யோதுகிறாள்—மெத்த
வெறும்பந் தயங் கூற வேண்டாம் புலவீர்
எறும்புந் தன்கையிலெண் சாண். 110

ஏர்பெறு மிருநிதிச் செருக்க தெய்திடிற்
றேர்செவி யுடையவர் செவிட ராகுவர்
ஓர்தரு முரைவலா ரூமை யாகுவர்
கூர்விழி யுடையவர் குருட ராவரே. 111

தனித்தனி முச்சுட ரியற்றித் தங்கிய
வனைத்துல கிருளையு மகற்று நான்முகன்
நினைப்பருஞ் செல்வம்வந் தெய்தினீடிய
மனச்செருக் கெனுமிரு ளகற்ற வல்லனே. 112

செல்வம்வந் துற்றபோது தெய்வமுஞ் சிறிதுபேணார்
சொல்வதை யறிந்துசொல்லார் சுற்றமுந் துணையும் பேணார்
வெல்வதே கருமமல்லால் வெம்பகை வலிதென்றெண்ணார்
வல்வினை விளையும் பாரார் மண்ணின்மேல் வாழுமாந்தர். 113

சிறியரே மதிக்கு மிந்த செல்வம்வந் துற்ற ஞான்றே
வறியபுன் செருக்குமூடி வாயுள்ளார் மூகராவர்
பறிபணி செவியுளாரும் பயிருஞ் செவிடராவர்
குறிபெருங்கண் ணுளாருங் குருடராய் முடிவ ரன்றே. 114

பொய்க்கொடுமை.

தான்கெடினுந் தக்கார்கே டெண்ணற்க தன்னுடம்பி
னூன்கெடினு முண்ணார்கைத் துண்ணற் கடவான்கவிந்த
வையகமெல்லாம் பெறினு முரையற்க
பொய்யோ டிடைமிடைந்த சொல். 115

மெய்யதைச் சொல்வாராகில் விளங்கிடுமேனுநன்மை
வையக மதனைக்கொள்வார் மனிதரிற் றேவராவார்
பொய்யதைச் சொல்வா ராகிற் போசன மற்பமாகும்
நொய்யவ ரிவர்களென்று நோக்கிடா ரறிவுள்ளோரே. 116

பொய்யருக்குப் பொய்யுரைத்தால் வெற்றியாமவருக்குப்
பொய்யாகாத
மெய்யருக்குப்பொய்யுரைத்தா றேய்பிறை போற்றவங்குறை
யுமிடியுண்டாகும்
துய்யதாய் தந்தையர்க்குப் பொய்யுரைத்தால் வறுமைபிணி
தொலையாவென்றும்
உய்யவருந் தேசிகற்குப் பொய்யுரைத்தானரகமது வுண்மை
தானே. 117

பூசாரிபொய்யும் புலவோ ருரைத்த பொய்யும்
காசாசை வேசையர்கள் கற்றபொய்யும்—கூசாமல்
தட்டாருரைத்தபொய்யுஞ் சவுளிக்கடைப் பொய்க்குக்
கட்டாது கால்வரிசை காண். 118

(இ-ள்) கோயில் பூசைகள் செய்துவரும் பூசாரிகள் சொல்லப்பட்ட பொய்யும், வித்துவான்கள் கற்பனையலங்காரங்களமைத்துச் சொல்லும் பொய்யும், பொருளே தெய்வத்திலும் பெரிதென்றெண்ணி அதன்பேரிலேயே சதாநோக்கமுடைய விலைமாதர்கள் கற்பித்துவந்த பொய்யும், கொஞ்சமேனுமஞ்சாது தட்டார்கள் பேசும்பொய்யும் ஆகியஇவைகளெல்லாம் சவுளிக்கடைவியாபாரிகள் பேசும் ஜெகஜாலப் பொய்க்குமுன் கால்வரிசையும் ஒப்பாகாது. (எ-று.)

மக்கட்பேறு.

கங்குலின் மதிவிளங்குந் கதித்திடும் பகற்காலத்தில்
செங்கதிர் விளங்குமன்றிச் சிறந்திடு முலக மூன்றும்
பொங்கிய தன்மையாலே போனது விளங்குமென்றும்
வங்கிசம் விளங்கு நல்ல மகவினுங் குறுமென்றே. 119

உந்து நீர்க்கட லுடுத்தபார் முழுவது மொருங்கே
வந்து தாமொடு மாசியல் வளமெலாம் பெறினும்
இந்தி ராதியர் பெரும்பதத் திருக்கைபெற் றிடினும்
மைந்த ரின்றியே வாழ்வது வாழ்வுமற் றன்றே. 120

மைந்தனைப் பெறு கின்றதும் மாசிலார்
புந்தி யன்பொடு போற்றி வளர்ப்பதுந்
தந்தை மாண்டுழி தம்முறைக் கேற்பன்
அந்த மில்கட னாற்றுதற் கேயன்றோ. 121

இறைவர் ஞானமு மேதமி லாமையும்
பொறையும் பூண்ட புல்லவர்ப் பெறுவ ரேல்
மறவ ரேனு மவரைபவ் வல்வினை
பிறவி யேழினும் பின்றொடா தரோ. 122

கற்பிலாப் பெண்களின் றன்மை.

அடுத்தமனை தொறுந்திரிவாள் கணவனுக்கு முன்னுண்பா
ளடக்க மில்லாள்
கடுத்தமொழி பேசிடுவாள் சிறுதனந்தே டுவளிவளைக்
கலந்து வாழ்தல்
எடுத்தவிடைக் கொடியாரே தண்டலையா ரேயவர்க்கு
மின்பமாகக்
குடித்தனமே செயவேண்டிப் பிடாரிதனைப் பெண்டுவைத்துக்
கொண்டதாமே. 123

பண்டோரான் பெண்ணமைத்தவ் விருவருக்கு பணமிபற்றிப்
பாணி ரக்கம்
கொண்டளித்த முறைகடந்து கள்ளவழிப் புணர்ச்சிசெயுங்
கொடியோர் தம்மை
மண்டலமே வாய்பிளந்து விழுங்காயோ வவர்தலைமேல்
வானுலாவும்
கொண்டலே பேரிடியை வீழ்த்தாயோ விதுசெப்பிற்
குற்ற முண்டோ. 124

தன்னுரை கொளாதமனை வாழ்க்கையது தன்னின்
வெந்நிரயம் வீழும்வகை யேவிழுமி தம்மா
அன்னரொடு மேவிபம ராடவர் தமக்குப்
பின்னுமொரு கூற்றுமுள தோபிணியு முண்டோ. 125

காமத்தால் வருந் தீமை.

பைந்தொடியா ராசைநோய் காம்பீர மனிதரையும் பது மந்தன்னை, முந்திரவி கதிர்போல மிளிர்விக்குங் கனலிடியு முனைக்கூர்வாளும், வெந்தவிருப் புப்பொறியு மெனக்கொடிய மனவேட்கை மேரு வொத்த, சுந்தரஞா னியர்தீரர் சூரரை யெல்லா மிமைப்பிற் றுரும்பு செய்யும். 126

அஞ்சன வைவேற்க ணாரிவையர்தம் பேராசை
நெஞ்சு புகினொருவர் நீங்கு நிலைமைத்தோ
எஞ்சல்புரி யாதுயிரை யெந்நாளு மீர்ந்திடுமால்
நஞ்சமினி தம்மவோ நாளு நலியாதே. 127

தீமையுள்ளன யாவையுந் தந்திடுஞ் சிறப்பும்
தோமில்செல்வமுங் கெடுக்குநல் லுணர்வினைத் தொலைக்கும்
ஏமநன்னெறி தடுத்திரு ளுய்த்திடு மிதனல்
காம மன்றியே பொருபகையுண்டுகொல் கருதில். 128

நன்றியைக் கோறனு நலனைக்கோறலும்
வென்றியைக்கோறலும் விவேகங்கோறலும்
துன்றியவொக்கலைத் துறந்து நிற்றலும்
கன்றிய காமத்தி னன்றியில்லையே. 129

பகையினை யாக்கலும் பாவ மாக்கலும்
நகையினை யாக்கலும் நகையை யாக்கலும்
திகைமன மாக்கலுஞ் சிறுமை யாக்கலு
நகைதரு காமத்தி னன்றி யில்லையே. 130

கைதவ மிழைத்தலுங் களவு செய்தலும்
ஐதுயிர் கோறலு மறத்தைக் கோறலும்
பொய்தவ வுரைத்தலும் பொரு ளிழத்தலும்
எய்திய காமத்தி னன்றி யில்லையே. 131

காமத்தா லிந்திரன் கலக்க மெய்தினன்
காமத்தா லிராவணன் கருத்த ழிந்தனன்
காமத்தாற் கீசகன் கவலை யுற்றனன்
காமத்தா லிறந்தவர் கணக்கி லார்களே. 132

உணங்கி யொருகான் முடமாகி யோர் கண்ணிழந்து செவியின்றி
வணங்கி நெடுவா லறுப்புண்டு வயறுமுதுகி லுயர்ந் தொட்டி
அணங்கு நலிய மூப்பெய்தி யகல்வா லோடு கழுத்தேந்திச் [யான்.
சுணங்கன் முடுவ லதைத் தொடர்ந்தா லெவரைக் காமன் றயர்செய்

நீட்டையிலே யிருந்துமனத் துறவடைந்த பெரியோர்க ணிமல
ன்றுளைக், கிட்டையிலே தொடுத்துமுத்தி பெறுமளவும் பெரியசுகங்
கிடைக்கும் காம, வெட்டையிலே மதிமயங்கிச் சிறுவருக்கு மணம்
பேசி விரும்பித்தாலிக், கட்டையிலே தொடுத்துநடுக் கட்டையிலே
கிடத்துமட்டுங் கவலைதானே. 134

கோபத்தால் வருந் தீமை.

கோபத்தால் கௌசிகன் றவத்தைக் கொட்டினன்
கோபத்தா னகுடனுங் கோல மாற்றினன்
கோபத்தா லிந்திரன் குலிசம் போக்கினன்
கோபத்தா லிறந்தவர் கோடி கோடியே. 135

வெகுளியே யுயிர்க்கெலாம் விளைக்குந் தீவினை
வெகுளியே குணந்தவம் விரத மாய்க்குமால்
வெகுளியே யறிவினைச் சிதைக்கும் வெம்மைசால்
வெகுளியிற் கொடும்பகை வேறென் றில்லையால். 136

அவாவினால் வருந்தீமை.

கள்ளிக்கு மாலாக்கி காற்கு விலங்காக்கிப்
பிள்ளைக் கடையாணிப் பின்னிறுக்கிப்—பொல்லாக்
கடுமிடற்றன் சோமேசன் கற்பித் துயிரைப்
படுகுழியிற் பாச்சுவதைப் பார். 137

ஆசையாற் சந்திர னங்கந் தேய்ந்தனன்
ஆசையாற் சௌபரி யறிவை நீங்கினன்
ஆசையா னராசுர னுவி போக்கினன்
ஆசையால் வாலியு மழிந்து போயினன். 138

கெர்வத்தினுல் வருந் தீமை.

சிறியரோ மதிக்கு மிந்த செல்வம் வந்துற்ற ஞான்றே
வறியபுன் செருக்கு மூடி வாயுள்ளார் மூகராவர்
பறியணி செவியு ளாரும் பயிறருஞ் செவிட ராவர்
குறிபெறுங் கண்ணு ளாருங் குருடராய் முடிவ ரன்றே. 139

பிச்சையெடுப்பதால் வருமிழிவு.

பல்லெலலாந் தெரியக் காட்டி பருவால் முகத்திற் கூட்டிச்
சொல்லெலலாஞ் சொல்லி நாட்டித் துணைக்கரம் விரித்து நீட்டி
மல்லெலலா மகல வோட்டி மானமென்பதனை வீட்டி
இல்லெலலா மிரத்த லந்தோ விழிவிழி வெந்த ஞான்றும். 140

கல்லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சித்தான் குடிக்கத் தான் கற்பித்தானு, இல்லைத்தான் பொன்னைத்தா னெனக் குத்தான் கொடுத்துத்தா னிரட்சித்தானு, அல்லைத்தான் சொல்லித்தா னியாரைத்தா னேவத்தானையோ வெங்கும், பல்லைத்தான் றிறக்கத்தான் பதுமத்தான் புவியிற்றான் பண்ணினனே. 141

தருமத்தின் பெருமை.

அன்புறு மறத்தினு லடுக்கு மின்பமே
இன்பெனத் தக்கதா லேனையின் பெலாம்
துன்பமும் பழியையுந் தோற்று மாதலால்
வன்புறு மறத்தினை மறப்பிற் கேடுறும். 142

தருமமென் றொருபொரு ளுளது தாவிலா
இருமையி னின்பமு மெளிதி னுக்குமால்
அருமையில் வரும்பொரு ளாகு மன்னதும்
ஒருமையி னேர்க்கலா லுணர்தற் கொண்ணுமோ. 143

தன்னுட வினுக்கொன்றீந்தால் தக்கதோர் பலமதாகும்
மின்னியல் வேசைக்கீந்தால் மெய்யிலே வியாதியாகும்
மன்னிய வுறவர்க்கீந்தால் வருவது மயக்கமாகும்
அன்னிய பரத்துக்கீந்தா லாருயிர்க் குதவியாமே. 144

கைப்பொருள் பெற்ற ஞான்றே கடவுளா லயத்திற் கீந்து
மெய்ப்படி புரான னூல்கள் விருப்பொடு கேட்டுவந்து
வைப்பென விரப்போர்க் கீந்து வருபவ ருளரேற் கூற்ற
மொப்புபத் தண்டந் தப்பி முன்னவ னின்பத் தாழ்வார். 145

கொடுத்தலின் பெருமை.

திரவியம் வந்தபோது சேர்ந்தபல் லோர்க்கு மீந்தால்
வரவர வளமா மந்த வகைசெயா விடிற் கெட்டேகும்
ஒருகலிங் கின்விட்டக் காலோ தநீர் போக்குப்போகும்
பெருகுரு மேரியில்லா விடனடு வணையைப் போக்கும். 146

சாதல்வந் தடுத்த கானுந் தனக்கொரு சாதலின்றிப்
பூதல மிறக்குங் கானும் புகழுடம் பிருக்கு மந்தக்
கோதறு புகழின் யாக்கை கொடையினாற் செல்வங் கூற
வாழ்தலை யுடையா ரன்றே வானமும் வணங்கு நீரார். 147

பேடையைப் பிடித்துத்தன்னைப் பிடிக்கவந் தடைந்தபோது
வேடனுக் குதவி யாக விறகினல் வெந்தி மூட்டிச்
சாடுறும் பசியை நீக்கித் தன்னுயிர் கொடுத்த பைம்புள்
வீடுபெற் றுயர்ந்த வார்த்தை வேதத்தில் விழுமி தன்றே.

மடுத்தபாவாணர் தக்கோர் மறையவ ரிரப்போர்க் கெல்லாங்
கொடுத்துயார் வறுமை யுற்றார் கொடாது வாழ்ந்தவரார் மண்மேல்
எடுத்து நாடுண்ட நீருமெடாத காட்டகத்து நீரும்
அடுத்த கோடையிலே வற்றி யல்லதிற் பெருகுந் தானே.

கொடையே யெவர்க்கு மெய்பேறுங் கொடுக்கு நெறியிற் பிறழாத
கொடையே யாருந்தன் வழியினெழுகச் செய்யுங் குறைதீர்ந்த
கொடையே பகையை யுறவாக்குங் குலவும்பூத மனைத்தினையுங்
கொடையே புரக்கு மென்றுள்ளங் கொள்ளப் புகன்றான் கவுதமனே.

புகழின் பெருமை.

பூதலத்தில்மானிடராய்ப் பிறப்பதரி தெனப்புகல்வர் பிறந்தோர்தாமும்
ஆதிமறைநூலின்முறை யருள்கீர்த்தி யெலாந் தங்கவன்பாய்ச் செய்து
நீதிவழு வாதவகை வழக்குரைத்து நல்லோரை நேயங் கொண்டு
காதவழி பேரில்லான் கழுதையெனப் பாரினுள்ளோர் கருதுவாரே.

நேசனைக் காணுவிடத்து நெஞ்சார வேதுநித்தல்
ஆசானை யெவ்விடத்து மப்படியே—வாச
மனையாளைப் பஞ்சணையில் மைந்தர்தமை நெஞ்சில்
வினையாளை வேலைமுடி வில். 152

விருந்தாக வருவோர்க்குபசரிப்பதின் பெருமை.

விருந்தினனாக வொருவன்வந் தெதிரின்
விபத்தனன் மொழியினி துரைத்தல்
திருந்துற நோக்கல் வருகென வுரைத்த
லெழுதன்முன் மகிழ்வன செப்பல்
பொருந்துமற்றவன்ற னருகுற விருத்தல்
போமெனிற் பின்செல்வ தாதல்
பரிந்துநன் முகமன் வழங்கலிவ் வொன்பா
னொழுக்கமும் வழிபடும் பண்பே. 153

உலகப்பற்றை யொழித்தவராயினு மன்பிலாவிடிற் பயனிலாரென்பது.

கலையெலா முணர்ந்தா னேனுங் கரிசறத் தெளிந்தா னேனும்
மலையென வுயர்ந்தா னேனு மனமயலகன்றா னேனும்
உலகெலாம் புகழப் பல்லோர்க் குதவிய கையனேனும்
இலகிய விரக்க மின்றேலெழுநா கடைவ னன்றே. 154

இடனும் பொருளு மேவலரு மிருந்தும் பயனென் னேவந்த
வுடலின் பயனுகிபவாத்தை வுறுதவிடத்து நொதுமலரும்
படர்செய் பகையு முறவாக்கும் பற்றுமழிக்கு மனைமைந்தர்
தொடர்பின் வளர்க்கு மன்பதிற்சேர்ந்து மன்பின் வழுவற்க.

அன்பிலார் செய்கை.

தேவ ருக்கென விரந்துண்ணுந் தீயவர்
யாவ ருக்கும் படுநிந்தை யேற்றுநர்
காவெ னப்பிறர் வைத்தவை கைக்கொளும்
பாவ ரப்பழி பாற்றவும் வல்லரோ. 156

இறைவனை யமைச்சனு யிருந்து செற்றவர்
கறவைகள் பருகுநீர்க் கயங்க ரேர்த்தவர்
பொறைவனக் கிளிகளும் வளர்க்கும் பூவையும்
சிறைபடுத் தவரெலாந் துயரிற் றீர்வரோ. 157

அன்னமு மியற்றிய வறனும் விற்றவர்
கொன்னவன் மறையினுல் கூலிக் கீந்தவர்
முன்னகை செய்துபின் பகைமொ ழிந்தவர்
சொன்னவை வழுக்குநர் துறக்க மாள்வரோ. 158

நன்பின் பெருமை.

மங்குலைப்பதி னுயிரம் யோசனை மயில்கண்டு நடமாடும்
தங்குபானுநா ருயிரம் யோசனை தாமரை முகம் விள்ளும்
திங்களாதவற் கிரட்டியோசனை யுறச்சிறந்திடு மாக்காம்பல்
எங்களுயக னன்பா யிருப்பவ ரிதயம்விட் டகலாரே. 159

பொன்னுள்ளான் பூமியுள்ளான் புந்தியுள்ளா னுயிடினும்
என்னுள்ளா னுவனவ னிருந்தவர்த நட்பிலனேல்
பொன்னில்லான் பூமியில்லான் புந்தியில்லா னுயிடினும்
என்னில்லா னுவனவ னிருந்தவர்த நட்புளனேல். 160

சமயம்வரி னிடித்துரைப்பார் தக்கவழிச் செலச்செய்வார்
இமயவர்த முலகுறவு மிருளுலகம் பகையுமாய்
அமயவறி வுரைத்துவா ரந்தோ நூல்கற்றுணர்ந்த
கமையுடையார் நட்பெவர்க்குங் காண்கிடைக்கு மரிதரிது.

செருக்குமிகுந்தவர் சிநேகங் கூடாதெனல்.

நறவு சந்தனக் குழம்பொடு நறுஞ்சுவை நலம்பெற வணிந்தாலுஞ்
சருவ சந்தேக மனமுடை மாதரைத் தழுவலு மாகாதே
பருவத்ங்கள்போற் பலபல நவமணிப் பைம்பொனை யீந்தாலும்
செருவமிஞ்சிய மானிடர் தோழமை கிட்டலு மாகாதே. 162

பயனற்றவை யிதுவெனல்.

கடன்படு பிதாவுங் கண்டவர் தங்கட்கெல்லாம்
உடன்படு மன்னைதானு முயர்ந்திடும் ரூபந்தானே
அடர்ந்திடும் பாரிவித்தை யப்பியசி யாதபிள்ளை
நடங்களு யிவர்களுல்வர் சத்துரு வாவர்தாமே. 163

சோமனிடா வாழ்வுஞ் சோறிடா நல்லுறவும்
நாமமீ றில்லாத நன்னுதலும்—ஓம
நெருப்பில்லா வேதியரு நெய்பாலுடனே
பருப்பில்லாப் போசனமும் பாழ். 164

ஒழுக்கமின்னதெனல்.

நேசநல் வாச மீகை சத்திய நித்கம் வேண்டும்
மாசிலா மேலோர் தம்மைமகிழ்ந்து பூசிக்கவேண்டும்
தேசமுஞ் சிறக்க நீதிசெய்திட வேண்டு மென்று
மாசற வுரைத்த நீதி யறிவித்தே னவனுக் கென்றான்.

புண்ணிய நன்னீராடல் கடவுளர் பூசையாற்றல்
உண்ணிறை மகிழ்ச்சி வேத பாரகர் கூட்டறிய
கண்ணியவாமைகள்ளா தொழுகுதல்கடுஞ்சொலின்மை
எண்ணியவிவைகணன்கு குலத்திற்கு மியைந்தவாமால்.

தாழ்ந்த வருணத் துதித்தோருந் தக்கோராவ ரொழுக்கத்தால்
வீழ்ந்த வொழுக்கத் தாரிழிவர் மேலாம் வருணத் துதித்திடினுஞ்
சூழ்ந்த துணையாஞ் சிறப்பின்பஞ் சுரக்குமதனா லுயிர்தனினும்
வாழ்ந்த வொழுக்க மோம்பிடுக வழுக்கி னிடும்பை யேதருமே. 167

அடக்கம் அமருலகேத்துமெனல்.

வான்குருவி யின்கூடு வல்லரக்குத் தொல்கரையான்
தேன்சிலம்பி யாவர்க்குஞ் செய்யரிதால்—யாம்பெரிதும்
வல்லோமே யென்று வலிமைசொல வேண்டாங்காண்
எல்லார்க்கு மொவ்வொன் றெளிது. 168

கொல்லாமையே நரகுக்குச் செல்லாமை யெனல்.

எவ்வுலகும் பராபரன் சந்நிதியதாகு மிலங்கு முயிருட லனைத்து மீசன் கோயில்
எவ்வுயிரு மெம்முயிர்போ லென்று நோக்கி யிரங்காது கொன்றருந்து மிழிவி னோரை
வவ்வியெம தூதருந் தண்டஞ் செய்து வல்லிரும்பை யுருக்கியவர் வாயில் வார்த்து
வெவ்வியதீ யெழுநரகில் வீழ்த்தி மாறா வேதனைசெய் திடுவரென வோது நூலே. 169

அம்மா வெனவலற வாருயிரை கொன்றருந்தி
இம்மா னிடரெல்லா மின்புற் றிருக்கின்றார்
அம்மா வெனுஞ்சத்தங் கேட்டகன்ற மாதவர்க்கும்
பொய்ம்மா நிரயமெனிற் புசித்தவர்க்கென் சொல்லுவதே.

தங்கண் மக்களுந் தாங்களும் படுதுயர் தமக்கோர்
எங்கண் மக்களும் யாங்களு மென்செய்தோ மினிமேல்
எங்கண் மக்களும் யாங்களு மின்றுறு துயரை
தங்கண் மக்களுந் தாங்களும் படுவர் சத்தியமே. 171

கங்கையிற் படிந்திட் டாலுங் கடவுளைப் பூசித்தாலும்
மங்குல்போற் கோடி தானம் வள்ளலாய் வழங்கினாலும்
சங்கையில் லாதஞான சாஸ்திர முணர்ந்திட் டாலும்
பொங்குறும் புலால் புசிப்போன் போய்நர கடைவ னன்றே.

கொலையிலா துதவு மன்னங் கூறிற்பே ரமுத மாகும்
கொலையின னளிக்கு மன்னங் கூறில்வல் விடம தாகும்
கொலையன னளிக்கு மன்னங் கொடும்பவ மளிக்குமூலம்
கொலைஞர் தம்மனையி லுண்பான் கொலைஞனே யாவனன்றே.

முன்செய்த தீவினையின்படி நன்மையுந் தீமையுந் தோன்றுமெனல்.

அவரவர் வினையி னவரவர் வருவா ரவரவர் வினையள வுக்கே
அவரவர் போக மென்றதே யாயி னாருக்கார் துணையதாகுவார்கள்
அவரவர் தேக முளபொழு துடனே யாதர வாரென நாடி
அவரவ ரடைத னெறிகன்மத் தடையு மாதர வாதர வாமே. 174

ஆங்கால மெய்வருந்த வேண்டா மதேதென்னிற்
றேங்காய்க் கிளநீர்போற் சேருமே—போங்காலம்
காட்டானை யுண்ட கனியதுபோ லாகுமே
தாட்டாளன் றேடுந் தனம். 175

அறிவுடையோரின் நடக்கை யிதுவெனல்.

தன்மானங் குலமானந் தன்னைவந் தடைந்தவுயிர் தங்கண் மானம்
என்மானமாகிலென்ன வெல்லவருஞ் சரியெனவே யெண்ணம்போந்த
நன்மானம் வைத்தெந்த நாளுமவர் தங்களுக்கு நன்மை செய்வோர்
மன்மானி யடைந்தோரை காக்கின்ற வள்ளலென வழுத்த லாமே.

பொல்லார்க்குக் கல்விவரில் கெர்வமுண்டா மதனோடு
பொருளுஞ் சேர்ந்தால்
சொல்லாதுஞ் சொல்லவைக்குஞ் சொற்சென்றூற் குடிகெடுக்கத்
துணிவர் கண்டாய்
நல்லோர்க்கிம் மூன்றுகுண முண்டாகி லருள்திக
ஞானமுண்டாம்
எல்லோர்க்கு முபகாரராயிருந்து பரகதியை
யெய்துவாரே. 177

தாசிகளை நம்புவோர் தூசுக்கு முதவாரெனல்.

வெம்புவாள் விழுவாள் பொய்யே மேல்விழுந் தழுவாள் பொய்யே
தம்பலந் தின்பாள் பொய்யே சாகின்றே னென்பாள் பொய்யே
அம்பிலுங் கொடிய கண்ணா ளாயிரஞ் சிந்தை யாளை
நம்பின பேர்களெல்லா நாயினுங் கடையாவாரே. 178

ஆலகாலவிடத்தையு நம்பலா மாற்றையும் பெருங்காற்றையும் நம்பலாம்
கோலமாமதயானையைநம்பலாங் கொல்லும்வேங்கைப் புலியையுநம்பலா
காலனார்விடு தூதரை நம்பலாங் கள்ளர் வேடர்மறவரை நம்பலாம் [ம்
சேலைகட்டிய மாதரை நம்பினாற் றெருவினின்று தியங்கித் தவிப்பரே.

அத்தியின் மலரும் வெள்ளை யாக்கைகொள் காக்கைதானும்
பித்தர்தம் மனமு நீரிற் பிறந்தமீன் பாதந்தானும்
அத்தன்மால் பிரமதேவ னளவிடப்பட்டாலும்
சித்திரவிழியார் நெஞ்சந் தெரிந்தவ ரில்லை கண்டீர். 180

படியினைப்பொழுதே வதைத்திடும் பச்சை நாவியை நம்பலாம்
பழிநமக்கென வழிமறித்திடு பழைய நீலியை நம்பலாம்
கொடுமதக்குவ டெனவளர்ந்திடு குஞ்சரத்தையு நம்பலாம்
குலுங்கப்பேசி நகைத்திடுஞ்சிறு குமரர்தம்மையு நம்பலாங்
கடையிலக்கமு மெழுதிவிட்ட கணக்கர்தம்மையு நம்பலாங்
காக்கைபோல் விழிபார்த்திடுங் குடிக்காணியாளரை நம்ப
நடைகுலுக்கியு முகமினிக்கியு நகைநகைத்திடு மாதரை [லாம்
நம்பொணாதுமெய் நம்பொணாதுமெய் நம்பொணாதுமெய்
[காணுமே.

அறங்கெடு நிதியுங் குன்று மாவியு மழியுங் காயம்
நிறங்கெடு மதியும் போகு நீண்டதோர் நரகிற் சேர்க்கும்

மறங்கெடு மறையோர் மன்னர் வணிகர்நல் லுழவோரென்று
குறங்கெடும் வேசை மாதர் குணங்களை விரும்பி னோர்க்கே.

ஒன்று கொடுத்து ஒன்பது பெற்றவன் கதி யின்னின்னதெனல்.

பொருளொன்று நான்றந்த திவட்கதற்கில் லாமையினி
பொய் புரட்டு
மருளொன்று கட்காமங் கொலைகளவு சூதுவசை
மாணத் தோடும்
இருளொன்றுநரகமின் னுமிவள்பானுங்கொண்டதற்கோ
ரிலக்க முண்டோ
தெருளொன்றும் பாரினம்போற் சமர்த்தாக்கொண்
டெவர்வணிகஞ் செய்யவல்லார். 183

(இ-ள்) நான் விரும்பப்பட்ட இந்தப் பெண்ணுக்குக் கொடுத்தது பொருள் ஒன்றே அவ்வாறு கொடுத்தபொருளுக்குப்பதிலாக தரித்திரம், வெள்ளை, சொறுக்குமுதலிய தூர்வியாதிகளும், பொய், புரட்டு, கட்குடித்தல், காமம், கொலை களவு மரண முதலியவற்றோடு இவளிடத்திலிருந்து நான் வாங்கிய சரக்குகளைக் கணக்கிட்டுச் சொல்லமுடியாது ஞானத்தையடைவதற் கேதுவாகிய இப்பூமியில் என்னைப்போல் சாதுர்யமாக ஒருபொருளைக்கொடுத்து பலசரக்குகள் வாங்கி வர்த்தகஞ்செய்யத்தக்க வியாபாரிகள் யாரிருக்கிறார்கள்? ஒருவருமில்லை. எ-று.

தன்பொருள் தாசியானவள் பறிக்கவதனால் மும்மூர்த்திக் கொப்பாயினே னெனல்.

பசையறவெம் மாவியன்னாள் கைப்பொரு ளெலாம்பறிக்கப்
பசியானன்கு
திசைமுகமு நோக்கலாற் றிசைமுகனானேனும் வாயிற்
றீயாளிட்ட
வசையான் மண்ணுண்டு மாயனானேனுங் கையில்
வாங்கு மோட்டால்
இசைமேவு மீசனானேனும் புவியினமை யொப்பா
ரெவர்தா மம்மா. 184

(இ-ள்.) என்னுயிர்க்கொப்பாகிய இப்பெண்ணானவள் சிறிதும் பசையில்லாதொழியும்படி பொருள்கள் யாவற்றையும் (ஆசைவார்த்தைகளால்) மயக்கிபறித்துக்கொள்ள பின்னர்யாதொருவழியுமின்றி மனம் வருந்துகையில் கொடியபசியானதுவந்து வருத்த அப்பசி நீங்கப்பொருட்டு நான்குதிசைமுகமுந் திரும்பித்திரும்பிப் பார்த்தலினால் திசைமுகனென்று சொல்லப்பட்ட பிரமதேவனுக்கொப்பாயினேன். என்வயிலே அக்காதகிபோட்ட பலவிததூஷணையாகிய மண்ணையுண்டு திருமலுக்கொப்பாயினேன். அக்கொடியாளுக்கு நான் கொடுத்த பொருளுக்குப் பதிலாக கொடுத்த திருவோட்டில் யாவருந்துதிக்கும் பரமசிவனுக்கொப்பாயினேன். இவ்வாறு மும்மூர்த்திகளுக்குஞ் சமானமாயுள்ளவகள் என்னைத்தவிர வேறு ஒருவருண்டோ சொல்வாயாக! எ-று.

கல்வியை விரும்பி காலில்விழுவதிதுவெனல்.

அன்னையே யனைய தோழி யறந்தனை வளர்க்குமாதே
உன்னையோருண்மைகேட்பே னுரைதெரிந் துரைத்தல்வேண்டும்
என்னையே புணருவோர்க ளெனக்குமோ ரின்ப நல்கிப்
பொன்னையுங் கொடுத்துப் பாதப்போதினில் வீழ்வதேனோ.

(இ-ள்.) தாய்போலுங் கருணையுள்ள பாங்கியாகிய பெண்ணே உன்னையோருண்மை கேட்கின்றேனதைத்தெரிந்து சொல்வாயாக. என்னிடத்து கல்வியை விரும்பினவர்கள் எனக்கு மின்பத்தைத்தந்து மலர்போன்ற எனதுகாலில் விழுகின்றார்கள் யாதுகாரணம். எ-று.

தருமஞ் செய்யாதவர் தனமின்னின்னதிலொழியுமெனல்.

பொம்மெனப் பணைத்து விம்மிப் போர்மதன் மயங்கிவீழுங்
கொம்மைசேர் முலையினாளே கூறுவே னொன்றுகேண்மோ
செம்மையி லறஞ்செய்யாதார் திரவியஞ் சிதற வேண்டி
நம்மையுங் கள்ளுஞ் சூதும் நான்முகன் படைத்தவாறே. 186

(இ-ள்.) அழகாகப் பருத்து விம்முதலுற்று வலிமையுள்ள மன்மதனையும் மயங்கச்செய்யும் வட்டவடிவான கொங்கையையுடையவளே ஒன்றுரைக்கிறேன் கேட்பாயாக. செவ்வையாக தருமஞ் செய்யாதவர்கள் பொருள்களெல்லாம் நமக்கும்; கட்குடித்தலுக்கும் சூதாடுதற்கும் பிரமதேவன் சிருட்டிசெய்திருக்கிறான். எ-று.

பிறவி துன்பமானதெனல்.

அடுகரிதொடாவீழ வைந்தலை நாகங் காண
விடிகிணற்றுகின் வேரைப் பற்றிநான்றிடவவ் வேரைக்

கடிகமேவா ரெலியும் வந்து கறித்திட வதினின் றேனுக்
கிடைதுளி தேனக் கின்பம் போலுமிப் பிறவி யின்பம். 187

(இ-ள்.) பெறுதற்கரிய விம்மானுடப் பிறப்பிற்பிறந்தும், அடையவேண்டிய பேரின்பசுகத்தை யடையாமல் இவ்வுலகவின்பத்தையே நாடுதலெத்தன்மைத்தெனின், ஒருவனை கொலைத்தொழிலிற் பழகிய யானையானது துரத்த, அதற்குப் பயந்து ஓடும்பொழுது ஒருயிடிந்த கரையையுடைய பாழுங்கிணற்றில் தவரிவிழ, அவ்வாறு விழுந்தவன் அக்கிணற்றிலிருக்கும் ஐந்து தலைகளையுடைய நாகசர்ப்பத்தைக்கண்டு பயந்து கிணற்றின் கரையில் முளைத்திருக்கும் அறுகம்புற்கொடியை யாதாரவாக்கொண்டு தொங்குகையில் ஒரு எலி வோடிவந்து அக்கொடியைக்கறிக்கவும், அத்துன்பத்திலிருப்பவனுடையவாயில், மேலிருக்கும் தேன்கூண்டிலிருந்து ஒரு துளிதேன்வீழ, அதைச்சுவைத்து இன்பத்தை யனுபவிக்குஞ் சுகத்திற் கொப்பாகும். எ-று.

கொண்டுவின்படர் கருடன்வாய்க் கொடுவரிநாகம்
விண்ட நாகத்தின் வாயினில் வெருண்டவன் றேரை
மண்டு தேரையின் வாய்தனி லகப்படு தும்பி
வண்டு தேனுக ரின்பமே மானிட ரின்பம். 188

(இ-ள்.) சதாரீங்காரசத்தத்தை முழக்கும் வண்டானது மதுவையுண்டு களிப்படையுஞ்சமயம், தேரையானது வண்டைப்பிடிக்கவும், அத்தேரையை பாம்பானது கவ்வவும், அப்பாம்பை ஆகாயத்திலே பறந்துசெல்கின்ற கருடனானது பிடிக்க ஒவ்வொன்று மெவ்வளவு இன்பங்கொள்ளுமோ அவ்வளவு யின்பங்கொள்ளுமிந்த மானிடதேகம். எ-று.

உலகத்திலெல்லாவற்றிலும் பெண்சன்மந் துன்பமெனல்.

அல்லலே பெண்ணெனப் பிறந்தலாங்கதின்
அல்லலே யிளமையிற் சிறந்த லாங்கதின்
அல்லலே கட்டழ குடமை யாங்கதின்
அல்லலே யிரவலர் சார்பி னுகுதல். 189

(இ-ள்.) இவ்வுலகத்தில் பெண்ணாய்ப்பிறத்தல் மிகவுந்துன்பமேயாம். அவ்வாறு பெண்ணாய்ப்பிறத்தலினும் இளமைப்பருவத்திற் விதவையாவது மிகவுந் துன்பம். இளமைப்பருவமுடையவளாயிருந்தும் அதனோடு மிகவுமழகுவாய்ந்திருத்தலதனினுந் துன்பம். இவையனைத்தும்விட தரித்திரமுடையவனுக்கு வாழ்க்கைப்படுதல் பெருந்துன்பம். எ-று.

மானிடரவயவத்தினிழிவு.

அரும்பு கோணிடி லதுமணங் குன்றுமோ
கரும்பு கோணிடிற் கட்டியும் பாகுமாம்
இரும்பு கோணிடி லியானையை வெல்லலாம்
நரம்பு கோணிடி னுமதற் கென்செய்வோம். 190

(இ-ள்.) அழகிய மலர்களினரும்பு வளைந்தால் அதின்பரிமளம் நீங்காது கரும்பைப்பிழிந்தால், மதுரம்பொருந்திய வெல்லமும் பாகுமாகும், இரும்பைக்காய்ச்சிவளைவுபட்டால் மும்மதம்பொருந்திய யானையைநடத்த அங்குசமாகும், நமதுதேகத்திலுள்ள நரம்புவளைந்தால் நாமெத்தொழிலைச் செய்யவுமுடியாது. எ-று.

சரீரத்தினிழிவு.

பந்தவுடல் வீண்பாடு பட்டவுடல் சீசீநாற்
கந்தவுட லொன்றுக்கா காதவுடல்—இந்தவுடல்
வைத்துப்பார்த் தென்ன வலிய வுயிர்மாய்த்துச்
செத்துப் போனாலு நல்லதே. 191

(இ-ள்.) ஆசையாகிய கயிற்றினால் கட்டுண்டவுடல், பயனற்ற தொழில்களை மேற்கொண்டுசெய்தவுடல் யாவருக்குமிழிவு செய்யப்படுகிற நாற்றம்பொருந்திய வுடல், உலகிலொன்றுக்குமுதவாதவுடல் இந்தவுடலுக்கு அழகுசெய்து சந்தோஷித்தாலென்னபயன், நாமாகவே வுயிரைமாய்த்து யிரப்பதே நன்று. எ-று.

இளமைநிலையாமை.

பாலனான பருவம்போம் பன்னுகுமாரப் பருவம்போம்
கோலமான தருணம்போங் கோலையூன்றிக் குனிந்தெழுந்து
காலன்மாய்க்க வனைவர்களுங் கல்லென்றழுது பேர்மாற்றி
ஏலப்பிணமென்றொரு பெயரிட்டிடுகாட்டிடுத லொருதலையே.

இட்டமிகு மிளமைநல மீரையாண்டதனி
விருபதினில் தளர்ச்சியுமுப் பதுவருடத் தழகு
முட்டகைய மேதையு நாற்பது வருடத்துடலி
லொண்பலமு மைம்பதினில றுபதினிற்றுதுங்

திட்டியுமங் கெழுபதினி லெண்பதினிற் செவியுந்
திகழ்மனமுந் தொன்னூறிற் சிவனு நூறளவில்
விட்டகனு மிவ்வியுதித் தொடுங்குவதென் றுணர்ந்தோர்
விணாள்பட் டொழியாமல் விரும்புவர் நற்றவமே.

புல்லர் செயல்.

தன்னைத்தான் புகழ்வோருந் தன் குலமே பெரிதெனவே தான்சொல்வோரும், பொன்னைத்தான் றேடியறம் புரியாமல் புதைத்துவைத்துப் பொன்றினோரும், மின்னைப்போல் மனையாளை விட்டில்வைத்து வேசைசுகம் விரும்புவோரும், அன்னைபிதா பாவலரைப் பகைப்போரு மறிவிலாக் கசடராமே.

புல்லர் குணம்.

குக்கலைப்பிடித்து நாவிக்கூண்டினி லடைத்து வைத்து
மிக்கதோர் மஞ்சட்பூசி மிகுமணஞ் செய்திட்டாலும்
அக்குலம் வேறதாமோ வதனிடம் புனுகுண்டாமோ
குக்கலே குக்கலல்லாற் குலந்தனிற்பெரியதாமோ. 195

தண்டாமரையினுடன் பிறந்துந் தண்டேனு கராமண்டூகம்
வண்டேகானத்திடையிருந்து வந்தேகமல மதுவுண்ணும்
பண்டே பழகியிருந்தாலு மறியார்புல்லோர் நல்லோரைக்
கண்டே களித்தங் குறவாடித் தம்மிற் கலப்பாற் கற்றோரே.

நாய்வாலையளவெடுத்துப் பெருக்கித் தீட்டி
னற்ற மிழையெழுத வெழுத்தாணியாமோ
பேய்வாழுஞ் சுடுகாட்டைப் பெருக்கித் தள்ளிப்
பெரியவிளக் கேற்றிவைத்தால் வீடதாமோ
தாய் வார்த்தைக் கேளாத சகசண்டிக்கென்
சாற்றிடினு முலுத்தகுணந் தவிரமாட்டான்
ஈயாரை யியவொட்டா னிவனுமீயா
னெழுபிறப்பினுங்கடையா மிவன் பிறப்பே. 197

கற்பூரப் பாத்திகட்டிக் கஸ்தூரி யெருப்போட்டுக்
கமழ்நீர் பாய்ச்சிப்
பொற்பூர வுள்ளிதனை விதைத்தாலு மதின்குணத்தைப்
பொருந்தக்காட்டுஞ்
சொற்பேதை யர்க்கறிவிங் கினிதாக வருமெனவே
சொல்லினாலும்
நற்போதும் வாராதாங் கவர்குணமே மேலாக
நடக்குந்தானே. 198

கட்டியடிப் போர்க்குங் கண்மீதி லேற்றுவர்க்கும்
எட்டியடிப் பவர்க்கு மீவரே—திட்டமுடன்
பாடுவோர்க் கீயாரே பல்லுதிரத் தாடையின்மேற்
போடுவோர்க் கீவார் பொருள். 199

கொன்றிலாரைக் கொலச்சொலிக்கூறினோர்
தின்றிலாரைத் தினச்சொலித் தெண்டித்தோர்
பன்றியாய்ப்படி யிற்பிறந் தேழ்நரா
கொன்றுவாரா னணைபி தன்மையே. 200

துட்டரையேன்படைக்க வேண்டுமெனல்.

கன்மனப் பார்ப்பார் தங்களைப் படைத்துக்
காகத்தை யென்செயப் படைத்தாய்
துன்மதி வணிகர்தங்களைப் படைத்துச்
சோரரையென்செயப் படைத்தாய்
வன்மன வடுகர் தங்களைப் படைத்து
வானர மென்செயப் படைத்தாய்
நன்மனை தோறும் பெண்களைப்படைத்து
நமனை யென்செயப் படைத்தனையே. 201

பொருள்கொடுப்பினும்போகா னமனென்பது.

கோடிபொன்னளிப்பனின்றே கோடிமோர் மாத்திரைக்குள்
ஊடிய கிளைக்கோர் வார்த்தை யுரைத்தடை குவனென்றலுந்
தேடிய காலதூதர் சிமிழ்த்தல் விட்டொழிவ ரேகொல்
வாடிய மருங்கு னங்காய் மாண்பொருட் பயன்கண்டாயோ.

நல்லோர்க்குக் கொடாதபொருள் சூனியம், பேய், வேசி, விண்வழக்கு கொள்ளை, குடி, நியாயத்தலம், பிணம், சோரர், அக்கினி முதலியவற்றுலொழியுமெனல்.

நம்பனடியவர்க்கு நல்காத்திரவியங்கள்
பம்புக்காம் பேய்க்காம் பரத்தையர்க்காம் வம்புக்காம்
கொள்ளைக்காங் கள்ளுக்காங் கோவுக்காஞ் சாவுக்காம்
கள்ளர்க்காந் தீக்காகுங் காண். 203

பொருளினுலடையும் பெருமை.

கோதறு கல்வி சாலார்க் குடியிருந்தறியா னேனும்
ஓதருஞ் செல்வமிக்கோ னொருவனை சிறந்தோ னுவான்
காதலின் வேதமுன்னுங்கலைகள் கற்றுணர்ந்தா னேனும்
தீதமை மிடியனுயிற் சிறந்திடான் வேத்த வைக்கே. 204

நற்பொரு ளறத்தையின் னலத்தை ஞானத்தை மிக்க
பற்பல ருறவை நட்டைப் பகைதவிர்த்திடுந் திறத்தை
சொற்பெரும்புகழை யென்றுந் துளியாய் பெருமைதன்னைப்
பொற்புறுங் கதியையெல்லாம் பொருளலாற்றருவதின்றே.

பொன்னொடு மணியுண்டானுற் புலையனுங் கிளைஞனென்று
தன்னையும் புகழ்ந்து கொண்டு சாதியின் மணமுஞ்செய்வர்
மன்னராயிருந்தபேர்கள் வகைகெட்டுப் போவாராயிற்
பின்னையுமாரோவென்று பேசுவா ரேசுவாரே. 206

குணமிருந்தாலுங் குலமிருந்தாலும் கொழுந்தமிழின்
மணமிருந்தாலும் மதியிருந்தாலும் வழுத்திடுவங்
கணமிருந்தாலு மோர்காசும்பெறுது சிங்காரவரைப்
பணமிருந்தாலவர்க் கெல்லாரு மஞ்சலி பண்ணுவரே. 207

கல்லாரே யானுலுங் கைப்பொருளொன்றுண்டாயி
னெல்லாருஞ் சென்றங் கெதிர்கொள்வ—ரில்லானை
இல்லாளும் வேண்டா ளின்றெடுத்த தாய்வேண்டாள்
செல்லா தவன்வாயிற் சொல். 208

வாழ்வுந்தாழ்வு மொருவிடத்து நில்லாதெனல்.

வாழ்வது வந்தபோது மனந்தனின் மகிழவேண்டாம்
தாழ்வது வந்ததானுற் றளர்வரோ தக்கோர்மிக்க
ஊழ்வினை வந்ததானு லொருவரால் விலக்கப்போமோ
ஏழையா யிருந்தோர் பல்லக் கேறுதல் கண்டிலீரோ. 209

நடலை வாழ்வுகொண் டென்செய்தீர் நாவிலீர்
சுடலை சேர்வது சொற்பிர மாணமே
கடலி னஞ்சமு துண்டவர் கைவிட்டால்
உடலினுர் கிடந்தூர்முனி பாண்டமே. 210

சினேகஞ் செய்யத்தகாதவ ரிவரெனல்.

சொல்லுவார் வார்த்தைகேட்டுத் தோழமையிகழ்வார் புல்லர்
நல்லவர் விசாரியாமற் செய்வரோ நரிசொற் கேட்டு
வல்லியும் பசுவுங் கூடி மாண்டதோர்கதையைப் போல
புல்லிய வொருவராலே போகுமே யற்பர் நேசம். 211

ஓரஞ்சொல்வதால் வருந்தீமை.

உள்ள வழக்கிருக்க வூரார் பொதுவிருக்கக்
கள்ளி வழக்கதனைத் தான்பேசி—எள்ளளவும்
கைக்கூலி தான்வாங்குங் காலறுவான் றன்கிளையும்
எச்சமறு மென்று லறு. 212

வழக்குடையா னிற்ப வலியானைக் கூடி
வழக்கை யழிவழக்குச் செய்தோன்—வழக்கிழந்தோன்
சுற்றமுந் தானுந் தொடர்ந்தழுதே கண்ணீரால்
எச்சமறு மென்று லறு. 213

நாரிகள் வழக்கதாயி னடுவறிந்துரைத்தார் சுத்தர்
ஏரிபோற் பெருகி மண்மேலிருகண்ணும் விளங்கிவாழ்வார்
ஓரமே சொல்வாராகி லோங்கிய கிளையுமாண்டு
தீரவே கண்ணிரண்டுந் தெரியாமற் போவர்தாமே. 214

பகைசெய்துகொள்ளத்தகாதவர்.

மன்னவன் கணக்கன் பார்ப்பான் வலியுள்ளோன் மந்த்ரவாதி
பொன்னுள வன்குருக்கள் புலவன் பண்டித னமைச்சன்
அன்னஞ் செய்திடுவோ னென்று மடங்காத திட்டாமிப்
பன்னிருபேரோ டென்றும் பகை கனவினுங் கூடாதே. 215

முயற்சியுடையாரே முன்னுக்கு வருவாரெனல்.

கடவுளீகுவனென் றெண்ணி நித்தியமுங் கருதுறு முயற்சி செய்யானேல், அடலுறு செல்வமடைகுவ னே கோ லருங்கலத் திட்டபாலடிசில், மிடலுறு காத்காலெடுத் துணு தெங்ஙன் வீங்கும் வெம் பசிப்பிணி யொழிப்பன், உடல்பவந் தனக்கோ ராகா மாகுமுடனனிவாட்டு மெய்த்த வத்தோய். 216

மானிடனொருவன் தனக்கருஞ் செல்வம் வாய்க்கவென் றனுதினமுயற்சி, தானுஞற் றுவனேற் கடவுளுமதனைத் தந் தளிக்குவனதா லன்றோ, ஆனபே ரறிஞர் திருவினை முயற்சி யாக்குமம் முயற்சியல்லாமே, ஈனமா ரின்மை புகுத்திடுமா லென்றியாருநன் குணர்ந்தா நவில்வார். 217

வலி, காலம், இடம், இவற்றை யறிவது.

வலியே கால மிடமிவற்றுன் மாற்றான் றனக்கு முனக் குமுள, பலவா நிலையு மவற்குறிப பண்பு மதற்கா மிடையூறும், விலகா ததனை விலக்குவதும் வெல்லு மாறும் வென்ற தனால், உலவாப் பயனு மிவையனைத்து மோர்ந்து தெளிந் தே வினைசெய்க. 218

யானையைச் சலந்தனி லிழுத்த வக்கரா
பூனையைக் கரைதனிற் பிடிக்கப்போகுமோ
தானையுந் தலைவருந் தலம்விட் டேகினால்
சேனையுஞ் செல்வமுந் திபங்கு வார்களே. 219

நிலைகளர்ந் திட்ட போது நீணிலத் துறவு மில்லை
சலமிருந்தகன்றபோது தாமரைக் கருக்கன் கூற்றும்.

பலவன மெரியும்போது பற்றுதீக் குறவாங் காற்று
மெலிவது விளக்கே யாகின் மீண்டுமக் காற்றே கூற்றும்.

வலிமை யறிதல்.

வலியவர் தம்மையும் வரம்பின் மிக்குறின்
மெலியவ ராயினும் வென்று போவரால்
உலகினில் வழக்கமீ துணர்ந்து வாழுவன்
கலையில் கற்புடைக் காவன் மன்னனே. 221

போலிக்குருவினி லக்கணம்.

வேதவாகமசாத்திரபுராணங்கள் விளங்கவே கற்றுணர்ந்
தவற்றைத், தீதற வெவர்க்குந் தெளிவுற வோதிச் செப்பிய
வந்நெறி யதனிற், சாதக மிலாத குருவினை பொருவன் குங்கு
டைந்தானந்தம் வினவல், ஏதமாங் கழுதையினைக் குங்குமத்
தினியல்புகேட் டிடுதல் போலன்றே. 222

சீடனி லக்கணம்.

மாரியை நோக்கும் வனப்புட் போலும்
பாரியை நோக்கும் பாவலர் போலும்
கொழுநனை நோக்குங் குலமகள் போலும்
தேசியை நோக்குஞ் சீடன் றெரிவே. 223

மாயையென்பதின்னின்ன தெனல்.

மாயையே யுடலமாகு மாயையே காணமாகும்
மாயையே புவன மாகு மாயையே போக மாகும்
மாயையே பொறிக ளாகு மாயையே புலன்க ளாகும்
மாயையே யண்டபிண்டம் யாவையு மாயை யாமே.

முப்பிறப்புகளின் றெளிவு.

இறந்த பிறப்பிற்றுஞ் செய்த வினையைப்
பிறந்த பிறப்பா லறிக—பிறந்திருந்து
செய்யும் வினையாலறிக வினிப்பிறந்
தெய்தும் வினையின் பயன். 225

கோயில் வலம் வரும் விதி.

கையசையா தெழுத்தோ ரைந்தன்றிக் கருதி டாது
மையவீ ரடிக்கு நாப்ப ணோடிப் பாப்பே ருதா
செய்யகு லகட்டின் முற்றிச் செல்கின்ற செல்வ மாதர்
தொய்படி நடையிற்சூழும் வலத்தினர் முத்தி சேர்வார். 226

கடவுளை வணங்காத் தலை.

வீட்டுத் தலைவனின் ருள்வணங் கார்தம் விரிதலைசும்
மாட்டுத் தலைபட்டி மாட்டுத் தலைபுன் வராகத்தலை
யாட்டுத் தலைவெறி நாய்த்தலை பாம்பி னடுத்தலைகற்
பூட்டுத் தலைவெம் புலைத்தலை நாற்றப் புழுத்தலையே. 227

பகைக்குச் சம்மந்தந்தானே யன்றி வேறில்லை யெனல்.

தானே தனக்குப் பகைவனு நாட்டானுந்
தானே தனக்கு மறுமையு மிம்மையுந்
தானே தான் செய்த வினைப்பயன் றுய்த்தலாற்
தானே தனக்குக் கரி. 228

இங்கிதம்.

கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத்தும்பி
காமஞ்செப் பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற்றரிவை கூந்தலின்
நறியவு முளவோ நீயறியும் பூவே. 229

புலாலைப் புசிப்பதால் வருமிழிவு.

மலையென்னும் வினைதிர மறுவுற்ற புனல் மூழ்கி
அலைகின்ற முழுமூட ரறிவென்ன வறிவென்ன
புலையன்றன் மலமுண்ணும் மெனையுண்ணும் புலையர்தங்
குலமென்ன நலமென்ன கூகூவென்றன கோழி. 230

நற்குணத்தின் விசேடமுந் தீக்குணத்தின் விசேடமு மிதுவெனல்.

நிலமதிற் குணவான் றோன்றி னீள்குடித் தனரும் வாழ்வார்
நலமெலாம் வாசந்தோன்றுஞ் சந்தன மரத்திற் கொப்பாம்
நலமிலாக் குபவன்றோன்றி னற்குடித் தேசம் பாழாம்
குலமெலாம் பழுதுசெய்யுங் கோடாரிக் காம்பு நேராம்.231

கடல்புடைசூழ் நெடிய வுலகில் கதிரோன் பகலும், மதியோ னிரவும் மாரிமாரித்திரிந்து மன்பதைகளுக்கு மகிழ்ச்சிதந்து மன்னி வாழ்புடவியில் முன்னொருகாலத்தில்,பெண்பானால்வரும் ஆண்பான் மூவருமாகிய எழுபிள்ளைகளையும் பிறந்தவிடங்களிலே வைத்துவிட்டு ஆதியும் பகவனும் அப்புறம் போம்போது ஆதியென்பவள் அப்பிள்ளைகளை நோக்கி இந்தப் பிள்ளைகளை யாவர் காப்பாற்றப்படுவரென இரங்கி ஆகுலமுற்றுநிற்க, அப்போது அவள் மனத்துன்பம் நீங்கற்பொருட்டு அக்குழந்தைகள் கடவுளருளால் உண்மையுணர்ந்து ஒவ்வொன்றுந் தனித்தனி கூறிய பாடல்கள்.

வெண்பா.

(ஔவை)

இட்டமுட னென்றலையி லின்னபடி யென்றெழுதி
விட்டசிவனுஞ் செத்து விட்டானே—முட்டமுட்டப்
பஞ்சமே யானாலும் பாரமவனுக் கன்னாப்
நெஞ்சமே யஞ்சாதே நீ. 232

(உப்பை.)

அத்திமுத லெறும்பீ ரானவுயி ரத்தனைக்கும்
சித்தமகிழ்ந் தளிக்குந் தேசிகன்—முற்றவே
கற்பித்தான் போனானோ காக்கக் கடனிலையோ
வற்பனோ வன்னா யரன். 233

(அதிகமான்.)

கருப்பைக்குண் முட்டைக்குங் கல்லினுட் டேரைக்கும்
விருப்புற் றமுதளிக்கு மெய்ய—னுருப்பெற்றா
னூட்டி வளர்க்கானோ வோகெடுவா யன்னாய்கேள்
வாட்டமுனக் கேன் மகிழ். 234

(உமறுவை.)

சண்டைப்பைக் குள்ளுயிர்தன் ருயருந்தத் தானருந்தும்
அண்டத் துயிர்பிழைப்ப தாச்சரியம்—மண்டி
யலேநின்ற வன்று யானுடைய வுண்மை
நிலேகண்டு நீயறிந்து நில். 235

(கபிலர்.)

கண்ணுழையாக் காட்டிற் கருங்கற் றவளைக்கு
முண்ணும் படியறிந் தூட்டுமவர்—என்னும்
நமக்கும் படியளப்பார் நாரியோர் பாகர்
தமக்குந் தொழிலென்ன தான். 236

(வள்ளியம்மை.)

அன்னை வயிற்றி லருத்தி வளர்த்தவன்று
ளின்னும் வளர்க்கானே வென்றுநீய—மின்னரவஞ்
சூடும் பெருமான் சுடுகாட்டி னின்றுவிளை
யாடும் பெருமா னவன். 237

(திருவள்ளுவர்.)

எவ்வுயிருங் காக்கவொரு வீசனுண்டோ வில்லேயோ
வவ்வுயிரில் யானெருவ னல்லவோ—வவ்வி
யருகுவது கொண்டிங் கலேவதே னன்னே
வருகுவது தானே வரும். 238

இவ்வுலகத்திலறியது விதுவென்பது.

அரியது கேட்கின் வரிவடி வேலோய்
அரிதரிது மானுட ராதல ரிது
மானுட ராயினுங் கூன்குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்த லரிது
பேடு நீங்கிப் பிறந்த காலேயும்
ஞானமுங் கல்வியு நயத்த லரிது
ஞானமுங் கல்வியு நயந்த காலேயும்
தானமுந் தவமுந் தான்செய லரிது
தானமுந் தவமுந் தான்செய்வ ராயின்
வானவர் நாடு வழிதிறந் திடுமே. 239

பெரியதிதுவென்பது.

பெரியது கேட்கி னெரிதவழ் வேலோய்
பெரிது பெரிது புவனம் பெரிது
புவனமோ நான்முகன் படைப்பு
நான்முகன் கரியமா லுந்தியில் வந்தோன்
கரிய மாலோ வலைகடற் றுயின்றோன்
அலைகடல் குறுமுனி யங்கையி லடக்கம்
குறுமுனியோ கலசத்திற் பிறந்தோன்
கலசமோ புவியிற் சிறுமண்
புவியோ வரவினுக் கொருதலை பாரம்
அரவமோ வுமையவள் சிறுவிரன் மோதிரம்
உமையோ விறைவர் பாகத் தொடுக்கம்
இறைவரோ தொண்ட ருள்ளத் தொடுக்கம்
தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே. 240

இனியது விதுவெனல்.

இனியது கேட்கிற் றனிநெடு வேலோய்
இனிது இனிது ஏகாந்த மினிது
அதனினு மினிது ஆதியைத் தொழுதல்
அதனினு மினிது அறிவினர்ச் சேர்தல்
அதனினு மினிது அறிவுள் ளோரைக்
கனவிலு நனவிலுங் காண்பது தானே. 241

கொடியது விதுவெனல்.

கொடியது கேட்கி னெடியவெவ் வேலோய்
கொடிது கொடிது வறுமை கொடிது
அதனினுங் கொடிது இளமையில் வறுமை
அதனினுங் கொடிது ஆற்றொணுக் கொடுநோய்
அதனினுங் கொடிது அன்பிலாப் பெண்டிர்
அதனினுங் கொடிது இன்புற வவர்கையி லுண்பதுதானே.

வேடிக்கைப் பாட்டுகள்.

செருப்பின் குணம்.

கல்லுமுறுத்காது காலின் முட்டைக்காது
எல்லைமார்த் தாண்டன்கு டேறுது—தொல்லைவரும்
மாலையிருளில் வழிநடக்கக் கூசாது
காலிற் செருப்பிருந்தக் கால். 243

(இ-ள்.) காலில்-[ஒருவனது] காலில், செருப்பு இருந்தக்கால்-செருப்பிருந்தால், கல்லும் உறுத்தாது—கற்களும் உறுத்தாது, காலினில் முள்தைக்காது-காலில் முள்தைக்காது, எல்லைமார்த்தாண்டன் குடேறுது - சூரியனது வெப்பமேறுது, தொல்லைவரும் - பலதுன்பங்களுண்டாதற்குரிய, மாலை இருளில் - மாலைக்காலத்திருளில், வழிநடக்கக் கூசாது-வழிநடக்கப்பின்னிடாது. எ-று.

கல்வி கற்கத்தகாத நாட்கள்.

அட்டமியிலோதினு லாசானுக் காகாது
சிட்டருக்குப் பன்னான்கு தீதாகும்—கெட்டவுவா
வித்தைக்கு நாசமாம் வெய்ய பிரதமையில்
பித்தரும் பேசார் பிழை. 244

(இ-ள்.) அஷ்டமியில் படித்தால் குருவுக்காகாது. சதுர்த்தசியில் படித்தால் சிடருக்கு கெடுதிசம்பவிக்கும். கெடுதியாகிய பூரணிமையில் படித்தால் கல்விக்கு கெடுதியுண்டாகும். கொடிய பிரதமையில் படித்தால் குற்றமாகும். [ஆதலின்] பைத்தியக்காரர்களும் அதைக் குறித்து பேசார்கள். எ-று.

சந்திரனுக்கும் கருடனுக்கும் சிலேடை.

வாலைப்பொருந்துதலால் வல்லரவம் பற்றுதலால்
மாலையடுத்துநெடு வானுறலால்—மேலைநிலத்
தும்பர்பூசிக்கவரு மொற்றியூ ரன்வரையில்
அம்புலியு நன்கருட னும். 245

(இ-ள்.) சந்திரன் வாலைப்பொருந்துதலால் - வெண்ணிறமாயிருத்தலால், வல் அரவம் பற்றுதலால் - பலம்பொருந்திய ராகு கேதுக்களென்னும் பாம்புகளால் பிடிக்கப்படுதலால், மாலை அடுத்து நெடுவான் உறலால் - மாலைப்பொழுதில் பெரிய வானத்திலிருத்தலால்;

கருடன் - வாலைப்பொருந்துதலால் - வாலையுடையதாதலால், வல் அரவம் பற்றுதலால்-வலிமையுடைய சர்ப்பங்களைப் பிடிப்பதால்,மாலை அடுத்து நெடுவான்உறலால் - மகாவிஷ்ணுவுடன் வைகுண்டத்துக்குப் போவதால், மேலைநிலத்து - மேலுலகத்திலிருக்கின்ற, உம்பர் பூசிக்க அருள் - தேவர்கள் வந்துதொழ அவர்களுக்கு கிருபைசெய்கிற, ஒற்றியூரன்—திருவொற்றியூரனாகிய சிவபெருமானது, வரையில்—மலையில், அம்புலியும் நன்கருடன் ஆம் — சந்திரனும் நல்ல கருடனாவான். எ—று.

சிவக்ஷேத்திரங்கள் ஆயிரத்தெட்டின் விவரம்.

மூவர்கவி முந்நூறு முன்சோழ னைந்நூறு
நாவலர் மாணிக்கர்தல நாற்பத்தெட்—டோவறுசீர்
நூதன சிவாலயங்க ணூற்றறுபதுங்கூட
ஓதவரு மாயிரத்தெட் டோர். 246

(இ-ள்.) மூவர்கவி—மூவர்பாடப்பெற்ற தலங்கள், முந்நூறு-முந்நூறும், முன்சோழன் ஐந்நூறு - நினைப்பதற்குரிய சோழநாட்டுத் தலங்கள் ஐந்நூறும், நாவலர் மாணிக்கர்தலம் — நாவலராகிய மணிவாசக சுவாமிகளால் பாடப்பட்ட தலங்கள், நாற்பத்தெட்டு - நாற்பத்தெட்டாகும், ஓ அறுசீர்—நீங்காத சிறப்புப்பெற்ற, நூதன சிவாலயங்கள்—பாடிய சிவத்தலங்கள், நூற்று அறுபதுங்கூட - நூற்றறுபதுஞ்சேர, (சிவாலயங்கள்) ஓதவரும்—துதிப்பவற்குரிய, ஆயிரத்தெட்டு - ஆயிரத்தெட்டாம், ஓர்-தெளிவாயாக. எ-று.

விஷ்ணுக்ஷேத்திரங்கள் நூற்றெட்டின் விவரம்.

ஈரிருபதாஞ்சோழ மீரொன்பதாம் பாண்டி
ஓர்பதிமூன்று மலைநாடோ ரிரண்டாம்—சீர்நடுநா
டாறேழெட்டு தொண்டைபவ் வடநாடா றிரண்டு
கூறுதிரு நாடொன்றுக் கொள். 247

(இ-ள்.) சற்சனர்களால் துதிசெய்யப்படுகின்ற சோழநாட்டுத் திருப்பதிகள் நாற்பது, பாண்டிநாட்டுத் திருப்பதிகள் பதினெட்டு, மலைநாட்டுத் திருப்பதிகள் பதின்மூன்று, நடுநாட்டுத் திருப்பதிகள் இரண்டு, தொண்டைநாட்டுத் திருப்பதிகள் இருபத்திரண்டு, வடநாட்டுத்திருப்பதிகள் பன்னிரண்டு, பரமபதம் ஒன்று. எ-று.

கைத்தடியின் குணங்கள்.

முனிபதட்டு முட்டேக்கு முன்னீரளக்கும்
கனியுதிர்க்குங் கவ்வுநாய் காக்கும்—தனிவழிக்குப்
பத்திரமதாகும் பயந்தீர்க்கும் பாம்படிக்கும்
கைத்தலத்திற் றண்டிருந்தக் கால். 248

(இ-ள்.) கையில் தடியிருந்தால், முனியையதட்டும், முள்ளேயெடுத்தெறியும், எதிரேயிருக்கிற நீரை யளவிடும். பழங்களுதிர்க்கும், கறிக்கவரும் நாயைத்தடைப்படுத்தும், தனிவழியே செல்வதற்கு மிக்கவுதவியாகும், பயத்தைநீக்கும், பாம்பை யடித்துக்கொல்லும். எ-று.

கைக்குடையின் குணங்கள்.

பகலோன் றெறுங்கிரணம் பாய்பறவை யெச்சம்
மிகமேலுறாதகற்றும் விண்ணின்—முகிலதனுல்
பெய்யுமழையைத் தடுக்கும் பேரழகுமாமொருவர்
கையிற்குடையிருந்தக் கால். 249

(இ-ள்) ஒருவர்கையில் குடையிருந்தால் வெயில், ஆகாயத்தில் பறந்துதிரிகின்ற பறவை மலம் மேலேவிழாமல் தடுக்கும், மேகத்தினுல் பெய்யும் மழையைத் தடுக்கும், மிகுந்த அழகுமாகும். எ-று

நடுவெழுத் தலங்காரம்.

கட்டோம்புதலெனக் காமாதியாறுங் கரிசறுத்து
விட்டோம்புதவு திறந்தின்ப வீடு புக்குச்செறிந்தோம்
சிட்டோம்புதல்வி மண்ணுருந்தி கஞ்சந்தெளிவுமுன்பின்
விட்டோம்புதவுறு நள்ளெழுத்தான் முலே மேவப்பெற்றே.

(இ-ள்.) சிட்டோம்-சிட்டராகிய யாம், புதல்வி-குமாரி, மண்-காசினி, உந்தி-[ஒருநதி] பாலாறு, கஞ்சம்-தாமரை, தெளிவு-துணிவு, [இவற்றில்] முன்பின் விட்டு-முன்பின்னெழுத்துக்களே விட்டு, ஓம்புதலுறு நள்எழுத்தான்-எஞ்சிநின்றநடுவெழுத்துப் பெயர்கொண்டவாது, முல்லேமேவப்பெற்று-திருமுல்லேவாயிலேயடைந்து, காமாதி ஆறும்-காமமுதலிய ஆறனேயும், புதல் எனக்கூட்டோம்-புதல் களேவதுபோலக் களேந்தோம், கரிசு அறுத்துவிட்டோம்-குற்றங்களெல்லாவற்றையும் சேதித்துவிட்டோம், புதவுதிறந்து-கதவுதிறந்துகொண்டு, இன்ப வீடு புக்கு செறிந்தோம்-பேரின்ப வீட்டிற் புகுந்து நிலே பெற்ருேம். எ-று.

குமாரி, காசினி, பாலாறு, தாமரை, துணிவு என்பவற்றின் நடு வெழுத்துக்களைச் சேர்த்தால் மாசிலாமணி என்றாகும், மாசிலாமணி யீசனது திருமுல்லைவாயிலை யடைந்து காமாதிகளை யறுத்துப் பேரி ன்ப வீட்டைப் பெற்றோம் என்பதாம்.

புதுமை.

நாகத்தை நாகத்தி னாலேமறைத்தொரு நங்கைநல்லாள்
நாகத்திலேறி மலர்கொய்யும் போதொரு நாகம்வந்து
நாகத்தை நாகம்பிடித்துக்கொண்டே யொருநாண் முழுதும்
நாகத்தைநாக மணுக்கண்டஞ்சி நடுங்கினளே. 251

(இ-ள்.) நாகத்தை-[நிதம்பமாகிய] பாம்பை, நாகத்தினாலே மறைத்து-ஆடையால் மறைத்து, ஒரு நங்கைநல்லாள்-ஒருபெண்ணா னவள், நாகத்தில் ஏறி-புன்னை மரத்திலேறி, மலர்கொய்யும்போது பூப்பறிக்கும்போது, ஒருநாகம்வந்து-ஒருகுரங்குவந்து,நாகத்தை நாகம் பிடித்துக்கொண்டு-ஆடையைக்குரங்கு பிடித்துக்கொள்ள, ஒருநாள் முழுதும்-நாகத்தை நாகம் அணுகக்கண்டு-மலையை யானையானது வந் து சேரக்கண்டு, அஞ்சி நடுங்கினள்-பயந்து நடுங்கினாள்-எ-று.

நாகம்-கடிதடம், நாகம்-ஆடை, நாகம்-புன்னைமரம், நாகம்-குரங் கு, நாகம்-மலை.

கிருஷ்ணன் விஷயம்.

குன்று குடையாவெடுத்துக் கோவைக்காத்த,கோபாலா
நின்பெருமை கூறக் கேண்மோ, அன்று மலர்வந்தவள் வீட்
டை விட்டே, ஆயர்மனைவந்ததனா லாயர் மாதர், கன்று கட்டு
ந்தாம்பு கொண்டே யுறலிற் கட்டிக், கரியதிருமேனிசிவப்
பேறமத்தால், என்றழியாப் பெயராற் றிருடனென்றேறு எற்
றியது முன்றலையி லெழுத்தானே. 252

(இ-ள்.) கோவர்த்தனமலையை குடையாகத்தூக்கி, பசுக்களைக் காத்தருளின கண்ணனே, உன்பெருமையை யான்சொல்லக் கேட் பாயாக. அந்நாளில் திருமகளுடைய மனையைவிட்டு [திருப்பாற்கட லைவிட்டு] ஆயர்வீட்டுக்கு வந்ததனால், இடைப்பெண்கள், கன்றைப் பிணிக்குங் கயிற்றினால், உரலிற்சேர்த்துப் பிணித்து உனது கரிய திருமேனியில் செந்நிறமுண்டாகும்படி, மத்தைக்கொண்டு என்று மழியாத பெயரினாலே திருடனென்று புடைத்ததும் உன்தலையில் எழுதப்பட்ட எழுத்தின்பயனே. எ-று.

நிந்தாஸ்துதி.

ஓர்குடிக்கே போர்மகவாஞ் சிறுத்தொண்டன் பிள்ளை பழி யொன்றுபோதும், பார்குடிக்குட் செங்காட்டங் குடி மேவுமுத்தரா பதியாரேநீர், கார்குடிக்குங் கஞ்சுகமுங் கப்பறையும் பொக்கணமுங் கையிற்கொண்டே, ஆர்குடியைக் கெடுப்பதற்கிங் காண்டிவேடங் கொண்டே யலைகின்றீரே.

(இ-ள்) உலகிலுள்ள குடிகளுக்குள்ளே செங்காட்டங்குடியில் வாழ்கின்ற உத்தராபதியாரே ஒருகுடும்பத்துக்கு ஒரேபிள்ளையாகிய சிறுத்தொண்டன் பிள்ளைபழியொன்றுபோதும், நீர் திருமேனியில், கருமையாகிய போர்வையும், கையினிடத்தில் திருவோட்டையும் பொக்கணத்தையும் தாங்கி யார்குடும்பத்தை யழிப்பதற்கு இவ்விடத்தில் ஆண்டிவேடங்கொண்டு அலைகின்றீர். எ-று.

சிறுத்தொண்டன்பிள்ளை—சீராளன், செங்காட்டங்குடி—ஓர்திருப்பதி, உத்தராபதியார்—அத்திருப்பதியி லெழுந்தருளிய சிவபெருமான், பொக்கணம் சோளிப்பை.

பாலனைப்பழித்தல்.

கச்சிருக்கும்போது கரும்பானேன் கைக்குழந்தை
வச்சிருக்கும்போது மருந்தானேன்—நச்சிருக்கும்
கண்ணார் கரும்பானார் காணவும் நான்வேம்பானேன்
அண்ணாமலை யரசுக்கு. 254

(இ—ள்.) அண்ணாமலை யரசனுக்கு கச்சணிந்திருக்கும்போது கரும்பாயிருந்தேன், கைக்குழந்தையை வைத்துக்கொண்டிருக்கும்போது மருந்தாய்விட்டேன், நஞ்சு குடிகொண்டிருக்கிற கண்களையுடைய வேசையர் கரும்பானார், நான் பார்ப்பதற்கும் வேம்பாயினேன். [என் செய்வேன், இப்பாலனால் எனக்கிந்தத்துன்பம் நேரிட்டது.] எ-று.

வேதியர் தீயொழுக்கம்.

ஆரணவாயினர் மாடாடுகளை யறுத்தவித்துப்
பாரணஞ் செய்யப்பழகிக் கொண்டார் மதுபானத்திலும்
பூரணராயின ரின்னவர்க் கிந்தத் துர்ப்புத்திகந்த
காரணங் கண்டயற் கோர்சிரங் கொய்தனன் கண்ணுதலே.

(இ-ள்.) வேதவாயினராகிய பிராமணர், மாட்டையும் ஆட்டையும் அறுத்து, வேவித்து வுண்ணபழக்கஞ்செய்து கொண்டார்கள், மது வைக்குடித்தலிலும் நிறைந்தவராஞர்கள், இவர்களுக்கு இந்தக்கெட்ட புத்தியையுண்டாக்கின காரணத்தைநோக்கி, பரமசிவன் பிரமதேவனு க்கு ஒருதலையை அறுத்துவிட்டான். எ-று.

பாரணம் செய்தல்- உபவாசமிருந்துண்ணல் எனினுமாம் மது- கள் சாராயம் எனினுமாம்.

இன்னதற் கின்னதழகென்றும் மூக்குத்தூளைச்

சிறப்பித்துப் பாடியது.

ஊசிக்கழகு முனைமழுங்காமை யுயர்ந்தபர
தேசிக்கழகிந் திரியமடக்க றிரண்முலைசேர்
வேசிக்கழகின் னிசைபலநூல் கற்றவித்வசனர்
நாசிக்கழகு பொடியெனக் கூறுவர் நாவலரே. 256

(இ-ள்.) ஊசிக்கழகாவது முனைமழுங்காதிருத்தல், உயர்ந்த சந்நி யாசிக்கழகாவது இந்திரியங்களை அடக்கியாளுதல், திரண்ட முலையி னையுடைய வேசைக்கு அழகாவது இனிய இசைநூலில் வல்லவளா யிருத்தல், பலநூல்களைக்கற்ற வித்வான்களுடைய நாசிக்கு அழகா வது பொடியென்று புலவர்கள் சொல்வார்கள் எ-று.

குளக்கரையில் காற்றினால் மோதுகிற கங்கையை
சிவன் சடையில் இருக்குங் கங்கைக்கு
பொருத்தங் கூறியது.

அருக்கன்மதியுதித்துவரு மம்புவியி லதிசயங்க ளன் பாய்க் கேளீர், உருக்குமந்தவுடலீரா றென்றறையு மொன் றறையுமுகந்து கொண்டு, இருக்குமந்த விடந்தனிலே நா லிரண்டு விதமான திருக்கக் கண்டேன், திருக்குளத்துப் படி த்துறையிற் கலுக்கெனவே சிறுக்கி யவள் சிரிக்கின்றாளே.

(இ-ள்.) சூரியனும் சந்திரனும் உதயஞ்செய்து வருகின்ற இவ் வுலகத்தில் புதுமைகள் அன்போடு கேட்கக்கடவீர் [கண்டோரது மனதை] உருகப்பண்ணுகிற, உடல் ஈராறு ஒன்றரையும், ஒன்றறை

யும் ஆக பதினைந்தை யேற்றுக்கொண்டு, இருக்கின்ற அந்த இடத்திலே, நாலிரண்டு விதமானது இருக்கக்கண்டேன், திருக்குளத்துப் படித்துறையில்—பிலுக்கி அவள் கலுக்கெனவே சிரிக்கின்றாளே.எ—று.

பதினைந்து - சோதிநக்ஷத்திரம், சோதியுருவு கொண்டிருக்குமிடம், கோயில், நாலிரண்டு - கன்னி.

முன்னொரு வூரின்பேரா முதலெழுத் தில்லாவிட்டால்
நன்னகர் மன்னன்பேரா நடுவெழுத் தில்லாவிட்டால்
கன்னமா மிருகத்தின்பேர் கடையெழுத் தில்லாவிட்டால்
வுன்னிய தேனின்பேரா மூரின்பேருரைத்திடீரே. 258

(இ—ள்.) [புலவர்களே] முன்னொரு ஊரின் பேராம்—மதுரை, முதலெழுத்தில்லாவிட்டால் நன்னகர் மன்னன் பேராம்—துரை, நடுவெழுத்தில்லாவிட்டால் மரை-மான், கடையெழுத்தில்லாவிட்டால் உன்னிய தேனின்பேராம்—மது, ஊரின்பேர் உரைத்திடீர்—இப்படிப்பட்ட ஊரின்பேரைச்சொல்லுவீராக—எ—று.

நிந்தாஸ்துதி.

சொல்லுக்கினிய கழுக்குன்றரேயுமைச் சொல்லவென்றால்
அல்லற் பிழைப்புப் பிழைத்துவிட்டீர் முப்பு ராதியர்மேல்
வில்லைக்குனித்தெய்யமாட்டாமனீரந்த வேளைதனில்
பல்லைத்திறந்து விட்டீரிது வோநம் படைத்தொழிலே. 259

(இ—ள்.) அன்பர் புகழ்வதற்கினிதாயிருக்கிற கழுக்கின்றநாதரே, உம்மைப்புகழ வேண்டுமென்றால், துன்பமாகியபிழைப்பு பிழைத்துவிட்டீர் திரிபுராந்தகாசுரர்மேல், பலம்பொருந்திய வில்லைக்குனித்து எய்யமாட்டாது நீர் அந்த சமயத்தில் பல்லைத்திறந்துவிட்டீர், உமது போரின்றன்மை யிதுதானோ—எ—று.

பல்லைத்திறத்தல் – சிரித்தல், படைத்தொழில்—ஆயுதப்பயிற்சி எனக்கொள்க.

மதனம்பால் மாதவரும் புகழற்றாரெனல்.

ஒருகோட்டுக்கலை முனியுமொளி திகழும் புலியாடையுடுத்தகோவும், வருமலர் வாழ்திசைமுகனும் வானவர்கணாயகனு மகிடன்றானும், கரிநிறத்திருமாலும் வாலியும் பராசரனுங் காமனம்பால், பெருமையிழந்தனரென்றால் சிறுமனிதர்க்கெப்படியோ பேசுங்காலே. 260

(இ-ள்.) ஒற்றைக்கொம்பையுடைய கலைக்கோட்டு முனிவரும் பிரகாசம்பொருந்திய புலித்தோலையுடைய சிவபெருமானும், வாசனை பொருந்திய தாமரை மலரில் வாழ்கின்ற பிரமனும். தேவராஜனாகிய இந்திரனும், மகிடாசுரனும், கருநிறத்தையுடைய திருமாலும், வாலியும், பராசரனும், காமன்பாணத்தால் தமது பெருமையை யிழந்தார்களானால், சொல்லுமிடத்து அற்பமனிதருக்கு எப்படியிருக்குமோ யோசித்துப் பாருங்கள். எ-று.

வாசவனும் பிறர்நகைக்க வுடலெடுத்தா னொருவனரா வடிவமானான், தேசுபுகழ்க்கலைமதியு முடலிழந்தான் மலர் வேதன் சிரமொன்றற்றான், ஈசனுதல் விழிதிறந்தானிராவண சுந்தோபசுந்தரிறந்தார் மண்மேல். காசினிப்புன்மானிடரோ மோகசாகரமதனைக்கடக்கவல்லார். 261

(இ-ள்.) தேவேந்திரனும் பிறர்நகைக்க உடலெடுத்தான், ஒருவன் பாம்புருவமானான்,பிரகாசமும் கீர்த்தியும் உள்ள கலைகளையுடைய சந்திரனும் உடல்தேய்ந்தான், பிரமன் ஒருதலை அறப்பெற்றான், சிவன் நெற்றிக் கண்ணைத்திறந்தான், இராவணசுந்தோபசுந்தர்கள் இறந்தார், [இவ்விதமிருக்க] மண்மேலுள்ள இந்தவுலகத்தில் அற்பமானிடரோ மோகமாகிய சமுத்திரத்தை நீந்தவல்லார். எ-று.

வாசவன்-இந்திரன், அராவடிவமானவன்-நகுடன், சுந்தோப சுந்தர்-சுந்தன் உபசுந்தன் என்னுமிருவர்.

போன வீரெழுத்தை முடியிலேற்றான் பின்னைவந்த வீரெழுத்தை வடக்கையேற்றான், சீரான வீரெழுத்தை வலக்கையேற்றான் சிறப்பான வீரெழுத்தி லேறிக்கொண்டான், காரான வீரெழுத்தை மிடற்றிற்கொண்டான் கருணைசெயு மீரெழுத்தைப் பாகங்கொண்டான், ஆரானுமிதன்பொருளை யறிந்துசொல்லின் அவர்கடமைப்புலவரென வறையலாமே.

(இ-ள்.) போன வீரெழுத்து-மதி, பின்னை வந்தவீரெழுத்து-மான், சீரானவீரெழுத்து- மழு, சிறப்பான வீரெழுத்து-விடை, காரான வீரெழுத்து-கடு, [விஷம்] கருணைசெயுமீரெழுத்து-உமை. [பார்வதி] எ-று.

நடுவெழுத்தலங்காரம்.

அந்தமுள்ளபுவியிலொரு மரத்தின் பேரும் அலைகடலில் வாழுமொரு சீவன் பேரும், விந்தைபெறுபட்டணப்பேர் வெகுகாலப்பேர் விளங்குமொரு பிள்ளைப்பேர் மெல்லியாள் பேர், சந்ததமுமிந்தவகை யாறுங்கூட்டித் தமிழெழுத்தினடுவெழுத்தைச்சார்ந்து பார்க்கின், சுந்தரஞ்சேர் வைகுந்தந் தன்னில் வாழும் துய்யரங்க நாதனென்றே சொல்லலாமே.

(இ-ள்.) ஒருமரம்-அரசு, கடலில் வாழுமொரு சீவன்-சங்கு, பட்டணப்பேர்-நகர், வெகுகாலப்பேர், அநாதி பிள்ளைப்பேர் - சுதன், மெல்லியாள்பேர்-கன்னி, இவற்றின் நடுவெழுத்து-ரங்கநாதன்.எ-று.

பல்விளக்கத்தக்க கொம்புகள்.

வேலுக்குப் பல்லிறுகும் வேம்புக்குப் பற்றுலங்கும்
பூலுக்குப்போகம்பொழியுமோ-ஆலுக்குத்
தண்டாமரையாளுஞ் சார்வளே நாயுருவி
கண்டால் வசிகரமாங் காண். 264

(இ-ள்.) வேலங்கொம்பினுல் பல்லைத்துலக்கினுல் பல்இறுகும், வேப்பங்கொம்பினுல் துலக்கினுல் பல் ஒளிவிடும், பூலாக்கொம்பினுல் துலக்கினுல் வீரியவிருத்தியாகும், ஆலம்விழுதில் துலக்கினுல் குளிர்ச்சிபொருந்திய தாமரையில்வாழும் திருமகளுஞ் சேர்வாள், நாயுருவி வேரினுல் துலக்கினுல் அவனைக்கண்டா ரெல்லாரும் அவன் வசமாகும்படி செய்யும்-எ-று.

பல்விளக்கத்தகாத வஸ்துக்கள்.

கல்லுமணலுங் கரியுடனே பாளைகளும்
வல்லதொரு வைக்கோலும் வைத்துநித்த-பல்லதனைத்
தேய்த்திடுவா ராயினங்கே சேராளே சிதேவி
வாய்த்திடுவள் மூதேவிவந்து. 265

(இ-ள்.) கல்லையும், மணலையும், கரியுடன் தென்னம்பாளைகளையும், உறுதியாகிய வைக்கோலையும்வைத்து, நாள்தோறும் பல்லையாராயினுந் தேய்ப்பாராயின், அவரிடத்தில் சிதேவி சேரமாட்டாள், மூதேவிவந்துசேர்வாள். எ-று.

பெரியோரை அடுத்தால் பெறுவார் பயனெனல்.

அரிமந்திரம்புகுந்தா லானைமருப்பும்
பெருகொளிசேர் முத்தும் பெறலாம்—நரிநுழையில்
வாலுஞ்சிறிய மயிரெலும்புங் கத்தபத்தின்
தோலுமல்லால் வேறுமுண்டோ சொல். 266

(இ-ள்.) சிங்கத்தின் குகையில் நுழைந்தால், யானைக்கொம்பையும், மிகுந்த ஒளியுள்ள முத்தையும் அடையலாம். [அதைவிட்டு] நரியிருக்குமிடத்திற்குப் போனால், [இழிவாகிய] கழுதையின்வாலையும், சிறியமயிரையும் எலும்பையும் தோலையும் அடைவதல்லால், வேறு உயர்ந்த பொருள்களையும் அடைவதுண்டோ சொல்லுவாயாக. எ-று.

பொருள்கொடுப்பார்க்கே புகழுண்டாமெனல்.

வெய்யகுரற்றோன்றி வெஞ்சினவேறுட் கொளினும்
பெய்யு முகிறன்னைப் பேணுவரால்—வையத்
திருள்பொழியுங்குற்றம் பலவரினும் பார்க்கும்
பொருள் பொழிவார் மேற்றேபுகழ். 267

(இ-ள்.) மேகத்தினிடத்தில் முழக்கம் முதலான பயங்கரமான குறிகள் முன்னே காணப்பட்டாலும், பின்னே மழைபெய்து உலகத்துக்கு நன்மைசெய்தலால் அதனையெல்லாரும் விரும்புகிறார்கள். [அதுபோல] முன்னே பொருளுடையோரிடத்தில் சில துர்க்குணங்கள் காணப்பட்டாலும் பின்னே பொருள்வழங்கி மனங்குளிர்விக்கிறார்களாதலால் அவர்களை யெல்லாரும் விரும்புகிறார்கள் என்பது கருத்து.

காக்கைக்காகாகூகை கூகைக்காகாகாக்கை
கோக்குக்கூகாக்கைக்குக்கொக்கொக்க-கைக்கைக்குக்
காக்கைக் குக்கைக்கைக் காகா. 268

(இ-ள்.) காக்கைக்கு-காக்கைக் கூட்டத்திற்கு,ஆகா-ஆற்று, கூகை கூகைக்கூட்டம், கூகைக்கு,ஆகா-ஆற்று, காக்கை-காக்கைக் கூட்டம், [காலவசத்தாலாதலால்] கோக்கு அரசர்க்கு, கூகாக்கைக்கு-பூமியைக் காத்தற்கும், கொக்கு ஒக்க-கொக்கை நிகர்க்கு இருந்து, கைக்கைக்கு-பகைவரையழித்தற்கும், [சமயம்நேரவேண்டும், அச்சமயம்நேராதாயின்]காக்குகைக்கு—கற்பகச்சோலைக்குத் தலைவனாகிய இந்திரனுக்கும், கைக்கைக்கு ஆகா—பகைவரை யழித்தற்குக் கூடாது. எ—று.

இதில் காலம், பகை என்னுஞ் சொற்கள் மிகுதியாய் நின்றன, இது ககரவிகற்பத்தான் வந்தது.

தத்தித்தாதூதிதா தூதித்தத்துதி
துத்தித்துதைதிது தைத்ததாதூதி
தித்தித்ததித்தித்த தாதெது தித்தித்த
தெத்தா தோதித்தித்த தாது. 269

(இ-ள்.) தத்தி-பாய்ந்து, தாதூதி-பூந்தேனையுண்ணாநின்றாய் தாதூதி-பூந்தேனையுண்டு, தத்துதி - வேறொரு பூவிற் பாயாநின்றாய், துத்தி-அங்ஙனமுண்டு, துதைதி-வேறொரு பூவிற்செறியாநின்றாய், துதைத்த-செறிந்த தாது-வேறொரு பூவின்றாதினை, ஊதுதி-யுண்டாநின்றாய், தித்தித்தது [இப்பூக்களில்] இனித்ததும் இத்தித்தது-விருப்பைத்தருவதும், ஆகியதாது எது பூ, எது தித்தித்தது எத்தாது-தித்தித்தது எந்தமலர், இதித்தித்ததாது-இதினுந்தித்தித்தமலர் எது, ஓது-எமக்குச் சொல்லுவாயாக.

இதில் வண்டென்னும் முன்னிலைச்சொல்மிகுந்து நின்றதும் இது தலைவி யவயங்களை வியந்ததலைவன் தலைவிகேட்க வண்டினை நோக்கிக் கூறியது, இது-தகரவிகற்பத்தான் வந்தது.

ஒருவர் ஒருவெண்பாவில் ஐந்துடுவரப் பாடவேண்டுமெனப் பாடியது.

ஓ கா மா வீ தோடு நரொக்க டுடுடுடு
நாகார் குடந்தைநகர்க்கிறைவர்—வாகாய்
எடுப்பர் நடமிடுவரேறுவரன்பர்க்குக்
கொடுப்பரணிவர் குழை. 270

(இ-ள்.) நாகு ஆர் குடந்தை நகர்க்கு இறைவர்-இளமரச்சோலைகள் நிறைந்த திருக்குடந்தை நகரத்துக்குத் தலைவராகிய சிவபெருமானவர், ஓகாமாவீதோ-ஓகாமாவீதோ என்னுமிவ்வைந்தெழுத்துக்களும், டுடுடுடுடு-டுடுடுடுடு என்னு மிவ்வைந்தெழுத்துக்களையும், நேர் ஒக்க-முறையே பொருந்தலால் [உண்டாகிய ஓடுகாடு மாடுவீடுதோடு என்னும் ஐந்தனுள் ஒன்றாகிய] ஓடு-ஓட்டை, வாகுஆய்-அழகாக, எடுப்பர்-கைக்கொள்வர்-[ஒன்றாகிய] காடு-சுடுகாட்டில், நடம்புரிவர்-நடனம் பண்ணுவர், [ஒன்றாகிய] மாடு இடபத்தின்மேல்-ஏறுவர்-ஊர்வர் [ஒன்றாகிய] வீடுமுத்தியை, அன்பர்க்குக்கொடுப்பர் தம்மடி

யார்க்குத் தந்தருளுவர், [ஒன்றாகியதோடு-காதணியை [குழையை] அணிவர் காதில்தரிப்பார். எ-று.

நாகு ஆர் என்பதற்கு வயல்களில் சங்குகள் நிறைந்த எனினுமாம், குடந்தைநகர்-கும்பகோணம்.

விநாயகர், முருகர், பரமசிவ னிம்மூவருக்கும் சிலேடை.

சென்னிமுக மாறுள தாற் சேர்கா முன்னாலுகையால்
இன்னிலத்திற் கோடொன் றிருக்கையால்—மன்னுகுளக்
கண்ணுறுதலாலுங் கணபதியுஞ் செவ்வேளும்
எண்ணரனு நேராவரே. 271

விநாயகர்.

(இ-ள்.) சென்னி முகமாறு உளதால்-தலையும் முகமும் மாறாயிருத்தலால், சேர்கரம் முன்னாலுகையால்-பொருந்தியதுதிக்கையானது முற்புறத்தில் தொங்குதலால், இந்நிலத்தில் கோடு ஒன்று இருக்கையால்-இவ்வுலகத்தில் ஒற்றைக்கொம்பு உண்டாயிருத்தலால், மன்னு குளக்கண் உறுதலால்-நிலைபெற்ற வெல்லத்தினாற் செய்த நிலத்தில் ஆவிர்ப்பவித்தலால்.

முருகர்.

சென்னிமுகம் ஆறு உளதால்-முடியும் முகமும் ஆறுண்டாதலால், சேர்கரம் முந்நாலுகையால்—சேர்ந்த ஒளியுள்ள பன்னிரண்டு கைகளுண்டாதலால், இந்நிலத்தில் கோடுஒன்று இருக்கையால்-இவ்வுலகத்தில் திருச்செங்கோடு என்னுந்தலமொன்றுண்டாயிருத்தலால், மன்னு குளக்கண் உறுதலால்—நிலைபெற்ற சரவணப்பொய்கையில் அவதரித்தலால்.

பரமசிவன்.

சென்னிமுகம் ஆறு உளதால்-சிரசில் கங்காநதியிருத்தலால், முன் சேர்கரம் நாலுகையால்—முற்பக்கத்திற் சேர்ந்த ஒளியுள்ள நான்குகைகளுண்டாதலால், இந்நிலத்தில் கோடுஒன்று இருக்கையால்—இவ்வுலகத்தில் [கைலாச] மலையொன்றுண்டாயிருத்தலால், மன்னுகுளக்கண் உறுதலால்—நிலைபெற்ற நெற்றிக்கண்ணையுடைத்தாயிருத்தலால்.

இன்னிலம் என்பதில் பொருளுக்கிணங்க நகரனகரங்களை யேற்ற பெற்றிகொள்க.

போவாள் வருவாள் புகுவாள் புறப்படுவாள் ஆவாள் இவாள் அவாளாம் என்று பாடினது.

செற்றலரைவென்ற திருமலைராயன் கரத்தில்
வெற்றிபுரியும் வாளே வீரவாள்—மற்றையவாள்
போவாள் வருவாள் புகுவாள் புறப்படுவாள்
ஆவாளி வாளவாளாம். 272

[இ-ள்.] செற்றலரை.வென்ற - பகைவரைவென்ற, திருமலைராயன் கரத்தில் - திருமலைராயன் கையிலுள்ள, வெற்றிபுரியும் வாளே-வெற்றியைக் கொடுக்கிறவாளே, வீரவாள்-வீரவாளாகும், மற்றையவாள்-மற்றையவாட்கள், போவாள் வருவாள் புகுவாள் புறப்படுவாள் ஆவாள் இவாள் அவாள்—ஆம், ஆகும். எ-று.

திருமலைராயன்கையிலுள்ள வீரவாளே வாளாகும், மற்றையர் கையிலுள்ளவாட்களெல்லாம் போவாள் வருவாள் முதலியவாகப் பரிகசித்தற் குரியனவேயா மென்பது கருத்து.

சிவன், முருகன், விநாயகன், திருமால், சிவனடியார் இவர்களுக்குத் தனித்தனியே ஆறுதலையுண்டென்று சொன்னயம்வைத்துப் பாடியது.

சங்கரற்கு மாறுதலை சண்முகற்கு மாறுதலை
ஐங்கரற்கு மாறுதலை யானதே—சங்கைப்
பிடித்தோர்க்கு மாறுதலை பித்தா நின்பாதம்
படித்தோர்க்கு மாறுதலை பார். 273

(இ-ள்.) சங்கரற்கும் ஆறுதலை-சிவபெருமானுக்கும் கங்காநதி சிரசில் உண்டு, சண்முகற்கும் ஆறுதலை--முருகக்கடவுளுக்கும் ஆறு சிரங்கள் உண்டு, ஐங்கரற்கு மாறுதலை--ஐந்துகைகளையுடையவராகிய விநாயகருக்கு மாறுபட்ட யானைத்தலையுண்டு, சங்கைப்பிடித்தோர்க்கும் ஆறுதலை-சங்கத்தைக் கையிற்பற்றியிருப்பவராகிய திருமாலுக்கும் பிரளயவெள்ளம் இருக்குமிடமாகும், பித்தா--பித்தனே[பரமசிவனே] நின்பாதம் படித்தோர்க்கும் ஆறுதலை-உன்திருவடியை துதித்தோர்க்கும் மனோதுக்கங்கள் தணிதலுண்டு, பார்--நோக்கு. எ-று.

திருமால் பிரளயவெள்ளத்தில் ஆலிலைமேல் பள்ளிகொள்பவராதலால் சங்கைப்பிடித்தோர்க்கு மாறுதலையென்றார். ஆறு-நதி, அது இங்கு பிரளயவெள்ளத்துக்காயிற்று. தலை--இடம்.

முன்னொருகாலத்தில் சோழன் ஆனந்தமேலீட்டால் தாசிகளை யழைப்பித்து நாட்டியஞ் செய்யும்படி சொல்ல, அவர் நடிக்குந்தருணம் கம்ப ரவ்விடம் வர, பெண்கள் விஷயமாக ஒருபாடல் பாடவேண்டுமென அரசன் கூறியபோது பாடியது.

கங்கை நன்னதியிற் றூய்து கருதிடல் வேறொரு நதியுமில்லை
வெங்கதி ரொளியை யல்லால் வேறொரு வொளியுமில்லை
எங்கணுந் தாயைப்போன்ற யினியதோ ருறவுமில்லை
மங்கையர் சுகமேயல்லால் மறுசுகமில்லை மன்னா. 274

(இ-ள்.) பரிசுத்தமாகிய கங்கைநதியில் ஸ்நானம் செய்து யோசித்துப் பார்க்கில் அதற்கீடாக வேறொரு நதியுங்கிடையாது. உலகத்தில் வெப்பத்தைத்தந்து ஒளிவீசுகிற சூரியனுடைய பிரகாசத்தைப்போல் வேறொருபிரகாசமுமில்லை. எங்குபார்க்கினுந் தாயைப்போன்ற அன்பான தயையுடையாரில்லை, உலகத்திலுள்ள இன்பங்கட்கெல்லாம் பெண்களுடைய யின்பத்திற் கீடெதுவுமில்லை அரசனே. எ-று.

மேற்கூறிய செய்யுளில் நான்காவதுஅடி கம்பர்முடிக்குந் தருணம் ஔவையார் அவ்விடம்வந்து மறுபடியு மந்தச் செய்யுளை சொல்லும்படிகேட்டு அதுதவறெனத் தான்கூறிய பாடல்.

விண்ணினின் மழையேயல்லால் வேறொரு நதியுமில்லை
கண்ணினின் ஒளியேயல்லால் காணும்வே றொளியுமில்லை
எண்ணிடிற் பொருளேயல்லா வினியதோ ருறவுமில்லை
உண்ணிடிற் சுகமேயல்லாலுறு சுகமில்லை மன்னா. 275

(இ-ள்.) ஆகாயத்திலிருந்து விழும்படியான மழையில்லாவிடின் வேறுநதிகிடையாது. கண்ணொளி யிலாவிட்டால் வேறு பிரகாசத்தைப் பார்க்கமுடியாது ஆழ்ந்துயோசித்துப்பார்க்கில் பொருளிருந்தால் சென்றவிடமெல்லாம் தாய்க்குமேலன்புள்ளவராவார்கள். தன்னுடலுக்கு சுவையான உணவுகளைப் புசிப்பதே சுகமாகுமன்றி வேறு சுகமிதற்குச் சமானமாகாது அரசனே. எ-று.

ஒருவர் இவர் அத்தைமகள் சமைத்த கறிவகைகளில் உப்பு அதிகரித்திருந்ததைக் குறித்துப் பாடியதாய்ப் பாடுகவெனப் பாடியது.

கரிக்காய்பொரித்தாள் கன்னிக்காயைத் தீத்தாள்
பரிக்காயைப் பச்சடியாப்பண்ணாள்-உருக்கமுள்ள
அப்பைக்காய் நெய்துவட்ட லாக்கினா ளத்தைமகள் 276
உப்புக்காண் சீசீயுமி.

(இ-ள்.) அத்தைமகள்-அத்தைமகளானவள், கரிக்காய்பொரித்தாள்-கரிக்காயைப் பொரித்தாள், கன்னிக்காயைத்தீத்தாள்-கன்னிக்காயை வறுத்தாள், பரிக்காயை பச்சடியாப்பண்ணாள்-பரிக்காயைப் பச்சடியாகச்செய்தாள், உருக்கமுள்ள அப்பைக்காய் நெய்துவட்டல் ஆக்கினாள், [எனக்கு] பிரீதியான அப்பைக்காயை நெய்துவட்டல் ஆக்கினாள், [ஆயினும்] உப்பு-உப்பு மிகுதியாயிற்று, [ஆதலால்] சீசீ உமி-சீசீ உமிழ்ந்துவிடு. எ-று.

கரி-யானை இதற்குப்பரியாயம் அத்தி ஆதலால் கரிக்காய்-என்றது அத்திக்காயை, கன்னி-தெய்வப்பெண், இவளுக்குப்பரியாயம் அரம்பை-அரம்பை, வாழையாதலால் கன்னிக்காய்என்றது வாழைக்காயை.

பரி-குதிரை இதற்குப்பரியாயம் மா ஆதலால், பரிக்காய் என்றது மாங்காயை.

பை-படம், இடபடத்தையுடைய பாம்புக்காயினமையால் சினை ஆகுபெயர். பாம்பில் கத்திரிஎன்பது ஓர்வகைப்பாம்பு ஆதலால், அப்பைக்காய் என்றது அந்தக்கத்திரிக்காயை.

என்னையிருக்கடி, பாயைச்சுருட்டடி, ஏகடியம்பலத்தே என்று பாடியது.

தடக்கடலிற் பள்ளிகொள்வோமிதனை நற்சங்கரனார்
அடற்புலிக்குட்டிக் களித்தனராமது கேட்டுநெஞ்சில்
நடுக்கம்வந்துற்றது கைகாலெழா நளினத்தி யென்னை 277
இடுக்கடி பாயைச்சுருட்டடி யேகடி யம்பலத்தே.

(இ-ள்.) தடக்கடலில்-விசாலமாகிய இந்தக்கடலில், பள்ளிகொள்வோம் [இதுவரையில்] உறங்காநின்றோம், [இப்போது] இதனை-இந்

தக்கடலே, நல்சங்கரனர்-நன்மையுள்ள சிவபெருமானனவர், அடல் புலிக்குட்டிக்கு, வலியுள்ள புலிக்குட்டிக்கு, அளித்தனராம்-கொடுத்தனராம். அதுகேட்டு-அந்தச்செய்தியைக்கேட்டு, நெஞ்சில்நடுக்கம்வந்து உற்றது-மனத்தில் நடுக்கம்வந்தடைந்தது, கைகால் எழா-கைகால்கள் எழாவாயின, [ஆதலால்] நளினத்தி-கமலாஸனையாகிய திருமகளே, என்னை இடிக்கடி-என்னைக்கக்கத்தில் இருக்கிக்கொள்ளடி, பாயைச்சுருட்டடி-பாம்பணையைச் சுருட்டிக்கொள்ளடி, அம்பலத்துஏகடி-அம்பலத்திற்செல்லடி. எ-று.

புலி-கௌதமர், புலிக்குட்டி-உபமந்யர்.

காளமேகப்புலவர் காஞ்சிபுரம் வரதராஜர் கருடோற்சவத்தைச் சேவித்து நிந்தாஸ்துதியாகப் பாடியது.

பெருமாளு நல்ல பெருமாளவர்தம்
திருநாளு நல்லதிருநாள்—பெருமாள்
இருந்திடத்திற் சும்மா விராமையினாலேயோ
பருந்தெடுத்துப் போகிறதைப் பார். 278

(இ-ள்.) பருந்து-ஓர்பறவை. அது பெருமாளை எடுத்துப் போகிறது என்றமையால் கருடனை யுணர்த்திற்று.

காளமேகப்புலவர் தில்லைச்சபாநாயகர் உற்சவத்தைத் தரிசித்து நிந்தாஸ்துதியாகப்பாடியது.

நச்சரவம் பூண்டதில்லை நாதரே தேவரீர்
பிச்சை யெடுத்துண்ணப் புறப்பட்டும்—உச்சிதமாம்
காளமேன் குஞ்சரமேன் கார்க்கடல்போற்றுன்முழங்கும்
மேளமேன் ராஜாங்க மேன். 279

(இ-ள்.) விஷத்தையுடைய பாம்பை ஆபரணமாக வணிந்த தில்லை நாயகரே, தேவரீர் பிட்சை யேற்றுண்ண வெளிப்பட்டும் [உமக்கு] மேன்மையாகிய திருச்சின்னம்யாதுக்கு, யானையாதுக்கு, மழைக்காலத்தில் சப்திக்கின்ற சமுத்திரம்போல் சப்திக்கின்றமேளம் யாதுக்கு [மற்றுமுள்ள] ராஜ சிங்கங்கள் யாதுக்கு. எ-று.

ஓரூரில் சர்க்கார் அலுவலிலிருந்த விகடராமன் என்னும் பிராமணன், ஒரு மெலிந்த குதிரைமீதேறிச் செல்லும் போது நடவாதது கண்டு தனக்குக் கீழ்ப்பட்டிருந்த வேலைக்காரர் இருவர் பின்னேயிருந்து தள்ளவும் மூன்றுபேர் முன்னே நின்று கடிவாளத் தைப்பற்றி யிழுக்கவும் உத்தரவுசெய் தான் அப்படியே அவர்கள் செய்து கொண்டு போகக்கண்டு

பாடியது.

முன்னே கடிவாள முன்றுபேர் தொட்டிழுக்கப்
பின்னே யிருந்திரண்டு பேர்தள்ள—எந்நேரம்
வேதம்போம் வாயான் விகடராமன் குதிரை
மாதம்போங் காதவழி. 280

(இ-ள்.) எப்போதும் வேதம் பயிலுகின்ற வாயையுடையவனு கிய விகடராமையனது குதிரையானது, மூன்றுபேர் முற்புறத்தில் நின்று கடிவாளத்தைத் தொட்டுவலிக்க இரண்டுபேர் பிற்புறத்தில் தள்ள மாதமொன்றுக்குக் காதவழி செல்லும். எ-று.

தில்லைநடேசரைத் தரிசித்துப்பாடிய நிந்தாஸ்துதி.

நாட்டுளாட்டுக்குநாலு காலைபாநின்
ஆட்டுக்கிரண்டு காலானாலும்—நாட்டமுள்ள
சீர்மேவு தில்லைச்சிவனே யிவ்வாட்டைவிட்டு
போமோ சொல்லாயப்புலி. 281

(இ-ள்.) யாவரும் நாடுந்தன்மையுள்ள சிறப்புப்பொருந்திய, தில் லைச்சிவபிரானே உலகிலுள்ள ஆட்டுக்கு நால்கால்களுண்டு, அழகாகிய உன் ஆட்டுக்குமாத்திரம் இரண்டுகால்களே யுள்ளன ஆயினும் இந்த ஆட்டின்மீது நெடுங்காலமாக விருப்பம் வைத்திருந்த அந்தப்புலியா னது இந்த ஆட்டைவிட்டுப் போகுமோ சொல்வாய். எ-று.

ஐயா என்பதனை ஐயனே யெனவிளியாக்கினும் பொருந்தும் நின் ஆட்டுக்கு உன் நடநத்துக்கு, இவ்வாட்டை-இந்த நடநத்தை, புலி வியாக்கிரபாதர்.

நாகப்பட்டணம் தேவிடியாளொருத்தி பாடிக்கொண் டிருப்பதைக் கேட்டுத்தன் செவிக்கினிமையாயிராமை யினால் அவளைப் பரிகசித்துப் பாடியது.

வாழ்த்துதிருநாகை வாகான தேவடியாள்
யாழ்த்தகுரலெடுத்துப் பாடினாள்—நேற்றுக்
கழுதைகெட்டவண்ணான் கண்டேன் கண்டேனென்று
பழுதையெடுத்தோடிவந்தான்பார். 282

(இ-ள்.) யாவராலும் வாழ்த்துதல் பெற்ற திருநாகையிலிருக்கும் அழகாகிய தேவடியாள் தன் பாழான குரலையெடுத்துப்பாடினாள். [அக்குரலைக்கேட்டவுடன்] நேற்றுத்தன் கழுதையை யிழந்த வண்ணான். [நேற்றுக்காணமற்போன என் கழுதையை கண்டேன் கண்டேனென்று கயிற்றையெடுத்தோடிவந்தான் பார்] எ-று.

அவள் குரலுக்கும் கழுதையின் குரலுக்கும் பேதமில்லையென் பது கருத்து.

பதினாறுபேறு இவை யென்பது.

துதிவாணிவீரம்விசயஞ் சந்தானந்துணிவுதனம்
அதிதானியஞ் சவுபாக்கியம் போகமறிவழகு
புதிதாம் பெருமையறங்குல நோயின்மை பூண்வயது
பதினாறு பேறுந்தருவாய் மதுரைப் பராபரனே. 283

(இ-ள்.) துதி-புகழ், வாணி-கல்வி, வீரம்-வீரத்தன்மை, விசயம்-வெற்றி, சந்தானம்-பிள்ளைகள், துணிவு-துணிதல், தனம்-பொன், அதிதானியம்-மிகுதியாகியதானியம், சவுபாக்கியம்-சிறந்தபாக்கியம், போகம்-[மாதரது] அநுபவம், அறிவு-ஞானம், அழகு-சௌந்தரியம், புதிது ஆம்பெருமை-நூதனமாகிய பெருமை, அறம்-தருமம், குலம்-உயர்குலம், நோயின்மை-ஆரோக்கியம், பூண்-ஆபரணம்,வயது-ஆயுள், என்னும், பதினாறுபேறும்தருவாய்-பதினாறுபேற்றையுந்தந்தருள்வாய்—மதுரையிலெழுந்தருளி யிருக்கின்ற பராபரனே.

ஒருவைணவர் திருமால் உலகத்தையுண்டருளியபோது சிவன் எங்கேயிருந்தார் என்றதற்கு விடையாகச் சொல்லியது.

அருந்திறனண்டமெலாமன்று மாலீசன்
இருந்தபடியே தென்றியம்பின்-பொருந்தி
பருங்கவளம் யானைகொளப்பாகனதன்மீதே
இருந்தபடி யீசனிருந்தான். 284

(இ-ள்.) அக்கடைகாலத்தில், திருமாலானவன் உலகங்களையெல்லாம் உண்டான, [அப்பொழுது] சிவனிருந்தவிதம்யாது, என்று கேட்பின் யானையானது பெரியகவளத்தையுட்கொள்ள [அதைச்செலுத்தும்] பாகன், அதின்மீதிற்றானே பொருந்தி யிருந்தாற்போல, சிவபெருமானிருந்தான். எ-று.

யானை கவளங்கொள்ளும்போது பாகன் அதின்பிடர்மீதிருந்தாற்போல திருமால் உலகத்தையுண்ணும்போது சிவபெருமான் அவன்மீது தங்கியிருந்தார் என்பது கருத்து.

நடேசர்மீது பாடிய நிந்தாஸ்துதி.

வில்லாலடிக்கச் செருப்பாலுதைக்க வெகுண்டொருவன்
கல்லாலெறியப் பிரம்பாலடிக்க விக்காசினியில்
அல்லார் பொழிற்றில்லையம் பலவாணற் கொரன்னைபிதா
இல்லாத தாழ்வல்லவோ விங்ஙனே யெளிதானதுவே. 285

(இ-ள்.) இந்தப்பூமியில் இருண்ட சோலைசூழ்ந்த சிதம்பரத்தின்கண்உள்ளபொன்னம்பலத்தில் வாழ்பவனாகிய நடேசப்பெருமானுக்கு ஓர்தாயும் தகப்பனும் இல்லாதகுறைவினால் அல்லவா, ஒருவன் கோபித்து வில்லால் அடிக்கவும், செருப்பாலுதைக்கவும், கல்லால்வீசவும், பிரம்பாலடிக்கவும், இவ்வாறு எளிதாய்முடிந்தது. எ-று.

வில்லால் அடித்தவன்-அர்ச்சுனன், இவன்பாசுபதாஸ்திரம் பெறச்சிவபெருமானை நோக்கித் தவஞ்செய்கையில் துரியோதனனுடையஏவுதலால் அத்தவத்தை அழிக்கப் பன்றியின் உருவங்கொண்டுவந்த மூகாசுரனைக்கொன்று அர்ச்சுனனைக் காக்கச் சிவபெருமான் வேட

ரூபந்தரித்து, அப்பன்றியைத் துரத்திக்கொண்டுபோய் அர்ச்சுனனோடு விளையாட்டாகப் போர்புரிகையில் அர்ச்சுனன் சிவபெருமான் விட்டகணையால் தன்வில்லின் நாணற்றபோது வெகுண்டு சிவபெருமானை வில்லால் அடித்தனன். செருப்பாலுதைத்தவர் கண்ணப்பநாயனார், கல்லாலெறிந்தவர் சாக்கியநாயனார், பிரம்பாலடித்தவன் பாண்டியன்.

உத்தமர் மத்திமர் அதமர் என்னுமூவரையும் உவமை முகத்தாற் கூறியது.

சொல்லாமலே பெரியர் சொல்லிச் சிறியர்செய்வர்
சொல்லியுஞ் செய்யார் கயவரே—நல்ல
குலாமாலை வேற்கண்ணாய் கூறுவமை நாடிற்
பலா மாவைப் பாதிரியைப் பார். 286.

(இ—ள்.) பெரியோர் சொல்லாமலேயிருந்து ஒரு (உபகாரத்தைச்) செய்வர், சிறியோர் சொல்லிச்செய்வர், கீழ்மக்கள் சொல்லியுஞ் செய்யமாட்டார்கள், அழகோடு விளங்குகின்ற பூமாலையையணிந்த வேல்போலுங்கண்களையுடையாளே (இம்மூவருக்கும்) முறையே சொல்லுதற்குரிய உவமைப்பொருள்களை ஆராயின், பலாமரத்தையும் மாமரத்தையும் பாதிரிமரத்தையும் நோக்கு. எ-று

பலா பூவாது பயன்தருவது, மா பூத்துப் பயன்தருவது, பாதிரி பூத்தும் பயன்தராதொழிவது.

இன்னின்ன செயல்கள் சிறந்தன என்று பாடியது.

மதியாதார் முற்றமதித் தொருகாற் சென்று மிதியாமை கோடிபெறும், உண்ணீருண்ணீ ரென்றுபசரியார் தம் மனையிலுண்ணாமை கோடிபெறும்,கோடி கொடுத்துங் குடிப்பிறந்தார் தம்மோடு கூடுதல் கோடிபெறும், கோடானு கோடி கொடுப்பினுந் தன்னுடைநாக் கோடாமை கோடி பெறும். 287

(இ-ள்.) [நம்மை] மதிக்காதவருடைய வாசலில் மதித்தலைச்செய்து ஒருதரம் போய் மிதியாதிருத்தல் கோடி பொன்பெறும், புசியும் புசியும் என்று உபசரிக்காதவருடையவீட்டில் புசியாதிருத்தல் கோடி

பொன் பெறும், கோடி பொன்னைக் கொடுத்தாயினும் உயர்குடியிற் பிறந்தவரோடு சேர்தல் கோடி பொன்பெறும், கோடானு கோடி பொன்னைக் கொடுத்தாலும் தனது நாவானது சொன்ன சொல் தவறு திருத்தல் கோடி பொன்பெறும். எ-று.

இன்னாரை இன்ன இடத்திற் புகழவேண்டுமெனல்.

நேசனைக்காணு விடத்தி னெஞ்சாரவே துதிர்தல்
ஆசானை யெவ்விடத்து மப்படியே—வாச
மனையாளைப் பஞ்சணையில் மைந்நர்தமை நெஞ்சில்
வினையாளை வேலை முடிவில். 288

(இ-ள்.) நண்பனை காணாத இடத்தில் மனமாரப் புகழ்க, குருவை எவ்விடத்திலும் அவ்வாறே புகழ்க, மனைவியை பரிமளம்பொருந்திய பஞ்சணை மீது புகழ்க, புதல்வரை மனத்திற் புகழ்க, தொழிலாளியை தொழிலின் முடிவில் புகழ்க. எ-று.

இதனோடு இது நீங்குமென்று பாடியது.

தாபோ டறுசுவைபோந் தந்தையொடு கல்விபோம்
சேயோடு தான்பெற்ற செல்வம்போம்—ஆயவாழ்
வுற்றாருடன் போ முடற்பிறப்பாற் றோள்வலிபோம்
பொற்றாலி யோடெவையும் போம். 289

[இ-ள்.] தாய்முதலியோர் நீக்கத்தில் ஒவ்வொரு நலம் நீங்கும், மனைவி நீக்கத்தில் எல்லாநலங்களும் நீங்கிப்போகும். எ-று.

பரத்தையிற் பிரிந்துவந்த தன் நாயகனைநோக்கிப் பாண்டியன் மனைவி கூறியது.

வேண்டியபோ தின்பம் விளைக்குமடந்தையரைத்
தீண்டியகைபாலென்னைத் தீண்டாதே—பாண்டியா
முல்லைக்கதிபாகமும் பார்த்தகலநின்று
சொல்லக்கடவ வெல்லாஞ் சொல். 290

இதுவுமது.

கலையான் முலைமுடிக் கன்வலைக்குள்ளாக்கும்
விலைமாதர்காம் வாவிட்டாரோ——விலைமாதர்
கொங்கையிலே தோய்ந்த குறைதீரத்துய்யசிவ
கங்கையிலே நீராடிவா. 291

ஒருவித்துவான் வழிப்பிரயாணஞ்செய்கையில் கையிலிருந்த கட்டுச்சோற்றை பறிகொடுத்துவிட்டு பாடியது.

சீராடையற்றிடும் வைரவன் வாகனம் சேரவந்து
பாராருநான்முகன் வாகனந்தன்னை முன்பற்றிக்கொண்டு
நாராயணனுயர்வாகனமாயிற்று நம்மைமுகம்
பாரான்மைவாகனன்வந்தே வயிற்றிற் பற்றினனே. 292

(இ-ள்) சிறப்புள்ளவஸ்திரமில்லாத வைரவக்கடவுளின் வாகனமானது நெருங்கவந்து உலகிலுள்ள பிரமனது வாகனத்தைப்பற்றிக் கவ்விக்கொண்டு திருமாலின் உயரப்பறக்கின்ற வாகனமாய்விட்டது அதனால்ஆட்டைவாகனமாகவுடையவன் எம்மைதாட்சணியம் பாராதவனுகி வந்துவயிற்றில் பற்றி யெரியாநின்றான். எ-று.

வைரவன் வாகநம்-நாய், நான்முகன்வாகனம்-அன்னம் [சோறு] நாராயணன் வாகநம் [கருடன்போலப் பறந்தோடிவிட்டது] மைவாகநன்-அக்னிதேவன், அவன் வயிற்றினிற்பற்றினன் என்றது பசி அதிகரித்தது என்றபடி.

மூடர்முன்பாடல் மொழியவொண்ணு தென்பது.

மூடர்முன்னேபாடல் மொழிந்தாலறிவரோ
ஆடெடுத்த தென்புலியூரம்பலவா——ஆடகப்பொன்
செந்திருவைப் போலணங்கைச்சிங்காரித் தென்னபயன்
அந்தகனே நாயகனுனல். 293

(இ-ள்.) நடனத்தை மேற்கொண்ட தென்புலியூரில் பொன்னம்பலத்தையுடையவனே கணவன்குருடனுனல் பொன்போன்றதிருமகளை யொத்தபெண்ணை அலங்கரித்ததினுல் பிரயோஜநம்யாது,

றென்றுமில்லை அதுபோல என்று ஒருவர் சொல்ல அதற்கு மற்றொருவர்] மூடருக்கெதிரில் கவியைச்சொன்னால், அறிவரோ-[அதின்சாரத்தை அவர்] அறியவல்லரோ, என்றார். எ-று.

முடியாதகாரியங்கள் இவையெனப்பாடியது.

பொல்லாத மூர்க்கருக்கெத்தனை தான்புத்திபோதிக்கினும்
நல்லார்க்குண்டான குணம்வருமோ நடுச்சாமத்திலே
சல்லாப்புடவை குளிர்தாங்குமோ பெருந்சந்தையினில்
செல்லாப்பணஞ் செல்லுமோ தில்லைவாழுந் சிதம்பரனே.

முன்போலச்சிறந்த வித்வான்கள் இப்பொழுதில்லை யென்பதை யுணர்த்தற்குப் பாடியது.

குட்டுதற்கோ பிள்ளைப்பாண்டியனிங்கில்லைக்
குறும்பியளவாய்க் காதைக்குடைந்து தோண்டி
எட்டின மட்டறுப்பதற்கோ வில்லியில்லை
இரண்டொன்றாய் முடிந்து தலையிறங்கப்போட்டு
வெட்டுதற்கோ கவியொட்டக் கூத்தனில்லை
விளையாட்டாய்க் கவிதைதனை விரைந்துபாடித்
தெட்டுதற்கோவறிவில்லாத்துரைகளுண்டு
தேசமெங்கும் புலவரெனத்திரியலாமே. 295

நற்குண நற்செய்கைகளில்லாத மனைவியாளோடு கூடிவாழ்தலினும் இல்வாழ்க்கையைத் துறப்பதே நன்றெனப் பாடியது.

பத்தாவுக் கேற்ற பதிவிரதை யுண்டானால்
எத்தாலுங் கூடி யிருக்கலாம்—சற்றேனும்
ஏறுமாறாக விருப்பாளே யாமாயில்
கூறுமற் சந்நியாசங் கொள். 296

(இ-ள்) கணவனுக்குத்தக்க கற்புடைய மனைவியுண்டாயிருந்தால் எவ்வழியாலும் சேர்ந்திருக்கலாம், சிறிதாயினும் ஏறுமாறாக யிருந்தாளேயாமாயின் ஒருவரோடுஞ்சொல்லாமல் துறவைக்கைக்கொள்வாய். எ-று.

கம்பரால் பாடல்பெறவிரும்பிய ஒரு கைக்கோளன் மனைவி தன்புருஷனை ஒளித்துவைத்துக் கம்பரைத் தன்னிடந்துவரும்படிசெய்தனள். கம்பர்வீட்டில் வருதலும் அந்தக் கைக்கோளன் ஒரு குறுந்தடியை கைக்கொண்டு கம்பரை அடிக்கவரும்போது அவர் பாடியது.

மய்க்கிணையான விழிக்கணைகொண்டு மருட்டியழைத்திடலால், பொய்க்களவாகப் புகுந்ததுமுண்டு புணர்ந்தது மில்லையடா, கய்க்கிசைவான குறுந்தடிகொண்டு கழுத்தை நெரிக்கவரும், கய்க்களவாவென் றங்கையடா நின்றாரமடா விடடா. 297

[இ-ள்.] அஞ்சனத்துக்கு நிகரான கண்களாகிய பாணங்களைக்கொண்டு என் மனத்தை மருளச்செய்து பொய்யாகிய களவுப் புணர்ச்சிக்காக அழைத்ததினால், இருளாகியவீட்டில் புகுந்ததுமுண்டு புணர்ந்ததுமில்லையடா கைக்கிசைவாகிய குறுந்தடிகொண்டு கழுத்தை முறிக்கவருகிற கைக்கோளனே இவள் என் தங்கையடா உன் மனைவியடா என்னைவிடடா. எ-று.

விநாயகர்மீது நிந்தாஸ்துதியாகப் பாடியது.

வீரஞ்சொரிகின்ற பிள்ளாயுனக்குப் பெண்வேண்டுமென்றால்
ஆருங்கொடா ருங்களப்பன் கபாலி யம்மான்றிருடன்
ஊருஞ்செங்காடு நின்றன்முகம் யானை யுனக்கிளையோன்
பேருங்கடம்ப னுன்றாய்நீலி நிற்கும்பெருவயிறே. 298

(இ-ள்.) வீரத்தன்மை பொழிகின்ற பிள்ளையாரே உனக்குப் பெண்வேண்டுமானால் ஒருவருங்கொடுக்கமாட்டார் ஏனெனில், உங்கள் தந்தை கபாலி, அம்மானாகிற கிருஷ்ணன் வெண்ணெய்திருடி, ஊரும் செங்காடு, உன்முகம் யானைமுகம், உன் தம்பிபேரும் கடம்பன், உன்தாய் நீலி, உனக்கும் பெரும்வயிறு மகோதரம். எ-று.

கபாலி-கபாலத்தையேந்தினவன், கடம்பன்-கடப்பமலர் மாலையை யணிந்தவன், நீலி-நீலநிறமுள்ளவள்.

முன்னொருகாலத்தில் கம்பர் பசிக்கொடுமையால் செட்டிகள் முதலியோரிடத்திற் சென்று அவரால் மதிக்கப் பெருமையால் அவர்களையிகழ்ந்தும் வேளாளரைப் புகழ்ந்து பாடியது.

செட்டிமக்கள்வாசல்வழி செல்லோமே செக்காரப்
பொட்டிமக்கள்வாசல்வழிப் போகோமே—முட்டிபுகும்
பார்ப்பாரகத்தை யெட்டிப்பாரோமே யெந்நாளும்
காப்பாரே வேளாளர்காண். 299

(இ-ள்.) சோழன் தன்தேசத்தை விட்டுப்போவென்று கடிந்து சொல்லக்கோபித்துப் போகும்போது தமது வீட்டாருடன் சொல்லாமலும், வஸ்திரம் வழிச்செலவுக்குவேண்டும் பணம் உணவுக்குவேண்டும் சாமக்கிரிகள் முதலானவைகளைக்கொண்டு போகாமலும் வெறுங்கையுடனே போகிறவழியில், மிகுந்த பசியாயிருந்தமையால் ஒருசெட்டிகடையில்போய் எனக்குக் கொஞ்சம் அவல்கொடும் என்றார். அவன் கடைபோணியாவதற்குமுன் கொடேன் போ என்றான். அப்புறம் கொஞ்சதூரம்போய் ஓர் வாணியன் எள்ளாடுவது கண்டு கொஞ்சம் பிண்ணாக்குக் கொடுவென்றார். அவனும் கொடுக்கவில்லை. அப்பால் ஒருபிராமணன் வீட்டைக்கண்டு தாகத்திற்குக் கொஞ்சம் தண்ணீர் தரவேண்டுமென்றார். அவனும் தண்ணீர்கொடேன் என்றான். இவர்பசியும் தாகமும் சகிக்கமுடியாமல் மிகவும் இளைத்து ஒரு மரநிழலிற் படுத்திருந்தனர், அங்கே ஏர்வுழுகிற வேளாளனொருவனுக்கு பழயது வந்தது. அவன் அதைச் சாப்பிடப்போகும் தருணத்தில் இவர்போய்க்கையேந்த, அவன் அந்தப் பழஞ்சோற்றை இவருக்கு இட்டு உபசரிக்க, இவர் உண்டு பசி தீர்ந்தபிறகு மனமகிழ்ந்து பாடியது.

அம்பிகாபதி அரசன்மகளை புகழ்ந்து பாடியது.

மய்வடிவக்குழலியர்கம் வதனத்தை நிகரொவ்வாமதியே மானே, செய்வடிவைச் சிற்றிடைபைத்திருநகையை வேய்த்தோளைத் தெய்வமாக, இவ்வடிவைப் படைத்தவடிவெவ்வடிவோயான றியேனுண்மையாகக், கய்படியத் திருமகளைப் படைத்திவளைப் படைத்தனனற் கமலத்தோனே. 300

(இ-ள்) மேகத்திலுருவாகிய கூந்தலையுடைய இம்மாதாது முகத்தை யொவ்வாத சந்திரனே, பெண்ணே, செய்யப்பட்ட உருவத்

தையும், சிறியயிடையையும், அழகியாகைத்தலையும் மூங்கில்போன்ற தோள்களையும் படைத்ததெய்வம் எந்தெய்வமோ உண்மையாக நானறியேன் ஒருக்கால் பிரமன்கைபடிய இலக்குமியைப்படைத்து இவளைப்படைத்தனன். எ-று.

நற்காலம் வரும்பொழுது எல்லாக்காரியமுங் கைகூடுமேன்பது.

ஆகும்போதாகு மனைத்துமதுவொழிந்து
போகும்போதெல்லாமும் போகுமே—வேக
நவசரம்பட்டாற்போ னலிந்துமடநெஞ்சே
அவசரம்பட்டா லாகுமா. 301

(இ-ள்.) அறியாமையுள்ள மனமே, எல்லாக் காரியங்களும் முடியும்போதுமுடியும், அதுநீங்கிப்போகும்போது எல்லாக்காரியங்களும் அழியும், (ஆதலால்) வேகங்கொண்ட நூதனமாகிய அம்புதைத்தாற்போல வருந்தி அவசரப்பட்டால் முடியுமா (முடியாது) எ-று.

எல்லார்க்கும் போதுப்போருள்க ளிவையேனல்.

ஆறுகுளந்தோப்பு மணிகியமஞ்சத்திரமும்
கூறுவழித்தாறுநிழல் கோட்டமுடன்—மாறுமன
வேசிசபைநீர்ப்பந்தல் வேந்தன் மடமபிலே
காசினிக்குள்ளேபொதுவாங் காண். 302

(இ-ள்.) மயில்போன்றவளே! ஆறு, குளம், தோப்பு, அழகியதெருவு, சத்திரம், மரத்தின் நிழல், கோயில், மாறுபாடுள்ள, மனமுடைய வேசி, பலர்கூடும் சபை, தண்ணீர்ப்பந்தல், அரசன் மடம், (இவைகளெல்லாம் உலகத்தி லுள்ளவர்க்கு பொதுவாயுள்ளபொருள்கள்) எ-று.

நல்லோர்க்குண்டானபுகழ் துர்க்குணருக்கில்லை யென்பது.

ஞானப்பெருமை நயங்கருணையுண்மைய பி
மானம்பொறுமை வணக்கமுயர்—தானமுடன்
சற்குணமாசாரந் தருகல்விநீதிநெறி
துர்க்குணருக்கில்லென்றே சொல். 303

(இ-ள்) ஞானம், பெருமை, நயம், கருணை, உண்மை, அபிமானம், பொறுமை, வணக்கம், உயர்தானமுடன், சற்குணம், ஆசாரம், தருகல்வி, நீதிநெறி, (இவையாவும்) துர்க்குணருக்கு இல்லையென்று சொல்வாய். எ-று.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

அறப்பளீசுர சதகம்

உயிர் பிறப்பு.

கடலுலகில் வாழுமுயி ரெழுபிறப் பினும்மிக்க காட்சிபெரு நரசென்மமாய்க், கருதப் பிறத்தலறி ததினுமுயர் சாதியிற் கற்புவழி வருத லரிது, வடிவமுட னவயவங் குறையாது பிழையாது வருதலதுதனினுமரிது, வந்தாலு மிதுபுண்ய மிதுபாவ மென்றெண்ணி மாசில்வழி நிற்ற லரிது, நெடியதன வானாத லரிததி னிரக்கமுள நெஞ்சினோ னாத லரிது நேசமுட னன்பத் தன்பனாய் வருதலிந் நீணிலத் ததினு மரிதாம், அடியவர்க் கமுதமே மோழைபூ பதிபெற்ற வதிபனெம தருமை மதவே, ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள ரறப்பளீ சுரதேவனே. (1)

மனையாட்டி சிறப்பு.

கணவனுக் கினியளாய் மருதுபாஷி யாய்மிக்க கமலைநிக ரூபவதியாய்க், காய்சினமி லாளுமாய் நோய்பழியி லாததோர் கால்வழியில் வந்த வளுமாய், மணமிக்க நாணமட மச்சம் பயிர்ப்பென்ன வருமினிய மார்க்க வதியாய், மாமிமா மற்கிதஞ் செய்பவளு மாய்வாசல் வருவிருந் தோம்பு பவளாய், இணையின்மகிழ் நன்சொல்வழி நிற்பவளு மாய்வந்தி யென்பெயரி லாதவளுமா, யிரதியென வேலீலை புரிபவளு மாய்ப்பிறர்த மில்வழிசெ லாத வளுமாய், அணியிழை யொருத்தியுண் டாயினவள் கற்புடைய ளாகுமெம தருமை மதவே, ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள ரறப்பளீ சுரதேவனே. (2)

சகோதர ரோருமை.

கூடப் பிறந்தவர்க் கெய்துதுயர் தமதுதுயர் கொள் சுகந் தஞ்சுக மெனக், கொண்டுதாந்தேடுபொருளவர்தேடு பொருளவர்கொள் கோதில்புகழ் தம்புக ழெனத், தேடு ற்ற வவர்நிந்தை தந்நிந்தை தந்தவந் தீதிலவர் தவமா மெ னச், சீவனொன் றுடல்வே றிவர்க்கென்ன வைந்தலைச் சீற ரவ மணிவாய்தொறும், கூடுற்ற விரையெடுத் தோரு—னி றைத்திடுங் கொள்கைபோற்பிரி வின்றியே, கூடிவாழ் பவ ர்தம்மை யேசகோ தரரெனக் கூறுவது வே தருமமாம்; ஆடிச் சிவந்தசெந் தாமரைப் பாதனே யண்ணலெம தரு மைமதவே, ளனுதினமுமனதினினை தருசதுர கிரிவளரறப் டளீசுர தேவனே. (3)

பொருள் செயல் வகை.

புண்ணிபவசத்தினுற் செல்வமது வரவேண்டும் பொரு ளை ரட்சிக்க வேண்டும், புத்தியுட னதுவொன்று நூறுகவே செய்து போதவும் வளர்க்க வேண்டும், உண்ண வேண்டும் பின்பு நல்லவஸ்த் ராபரண முடலிற் றரிக்கவேண்டு, முற்ற பெரி யோர்கவிஞர் தமரா துலர்க்குதவி யோங்குபுகழ் தேடவேண்டும், மண்ணில்வெகு தருமங்கள் செயவேண்டு முயர்மோக்ஷ வழிதேட வேண்டுமன்றி வறிதிற் புதைத்து வைத் தியாத பேர்களே மார்க்மறி யாக் குரு—ராம், அண் ணலே கங்கா குலத்தலைவன் மோழைதரு மழகனெம தரு ன மமதவே ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவளரறப் டளீசுர தேவனே. (4)

தீவழி விலக்கு.

வஞ்சகர் தமைக்கூடி மருவொணு தன்பிலார் வாசலிற் செல்லொணுது, வாதெவ ரிடத்திலும் புரியொணுதறிவிலா மடையர்முன் னிற்கொணுது, கொஞ்சமே னுந்தீது செய் யொணு தொருவர்மேற் குற்றஞ்சொ லொண்ணு தயற், கோதையர்க ளோடுபரி காசஞ்செயொண்ணுது கோளு ரைகள் பேசொணுது, நஞ்சுதரு மரவொடும் பழகொணு

திருள்வழி நடந்துதனி யேகொணாது, நதிபெருக் காகினதி னீஞ்சல்செய் யொண்ணாது நல்வழி மறக்கொணாது, அஞ் சாம லரசர்முன் பேசொணா திவையெலா மறியுமெம தரு மைமதவே, எனுதினமு மனதினிலே தருசதுரகிரிவளரறப் பளிசுர தேவனே. (5)

ஒன்றில்லாமையாற் பயன்படாதவை.

கோவிலில் லாதவூர் நாசியில் லாமுகங் கொழுநனில் லாத மடவார், குணமதில்லா வித்தை மணமதில் லாதமலர் குஞ்சர மிலாதசேனே, காவலில் லாதபயிர் பாலரில் லாத மனேகதிர் மதி யிலாதவானம், கவிஞரில் லாதசபை சுதிலயை யிலாதபண் காவலரிலாத தேசம், ஈவதில் லாததன நியம மில் லாதசெப் மிசைலவண மில்லாதவூ ணிச்சையில் லாத பெண் போககல மிவைதம்மி னேதுபல னுண்டு கண்டாய், ஆவியனே யாட்கிடந் தந்தவா கற்பதரு வாகுமெம தருமை மதவே எனுதினமு மனதினிலே தருசதுர கிரிவள ரறப்ப ளிசுர தேவனே. (6)

ஒன்றற்கொன்று தகாத சேர்க்கை.

பூததயை யில்லாத லோபிபரிடத்திலே பொருளேயரு ளிச்செய்தனே, புண்ணியஞ் செய்கின்ற சற்சன ரிடத்திலே பொல்லாத மிடிவைத்தனே, நீதியகண் மூடர்க் கருந்ததியெ னத்தக்க நெறிமா தரைத் தந்தனே, நிதானமுள வுத்தமர்க் கிங்கித மிலாதகொடு நீலியைச் சேர்வித்தனே, சாதியி லுயர் ந்தபே ரீனர்பின் னேசென்று தாழ்ந்துபரவச் செய்தனே, தமிழருமை யறியாதபுல்லர்மேற் கவிவாணர் தாம்பாடவே செய்தனே, ஆதரவி லாமலிப் படிசெய்த தென்சொலா யம லவெம தருமைமதவே, எனுதினமு மனதினிலே தருசதுர கிரியள ரறப்பளிசுர தேவனே. (7)

உத்தமராவோர்.

அடைக்கல மெனத்தேடி வருவோர் தமைக்காக்கு மவனே மகா புருடனு, மஞ்சாம லெதுவரினு மெதுபோ

கினுஞ்சித்த மசைவிலான் மகாதீரனும், தொடுத்தொன்று சொன்னசொற் றப்பாது செய்கின்ற தோன்றலே மகா ராஜனாக், தூறிக்கலைக்கின்ற பேர்வார்த்தை கேளாக துரையே மகா மேருவாம், அடுக்கின்ற பேர்க்குவரு மிடர்தீர்த் திரட்சிக்கு மவனே மகா த்யாகியா, மவரவர் தராதர மறிந்துமரி யாதைசெயு மவனே மகா வுசிதனும், அடர்க்கின்ற மூத்தலைச் சூலனே லோலனே யமலனே யருமை மகவே, எனுதினமு மனதினினை தருசதுர கிரிவள ரறப்பளீசுர தேவனே. (8)

திருமங்கை யிருப்பிடம்.

நற்பரி முகத்திலே மன்னவ ரிடத்திலே நாகரிகர் மாமனையிலே, நளினமலர் தன்னிலே கூவிளந் தருவிலே நறைகொண்ட பைந்துளவிலே, கற்புடையர் வடிவிலே கடலிலே கொடியிலே கல்யாண வாயி றனிலே, கடிநகரிடத்திலே நற்செந்நெல் விளைவிலே கதிர்பெறு விளக்க தனிலே, பெற்புடைய சங்கிலே மிக்கோர்கள் வாக்கிலே பொய்யாத பேர் பாலிலே, பூந்தடந் தன்னிலே பாற்குடத்திடையிலே போதகத்தின் சிரசிலே, அற்பெருங் கோதைமலர் மங்கைவாழிடமென்ப ரண்ணலெம தருமைமகவே, எனுதினமு மனதினினை தருசதுர கிரிவள ரறப்பளீசுர தேவனே. (9)

மூதேவி யிருப்பிடம்.

மிதமின்றி யன்னம் புசிப்போரிடத்திலும் மிகுபாஷையோரிடத்தும், மெய்யொன் றிலாமலே பொய்பேசியேதிரியு மிக்கபாதக ரிடத்தும், கதியொன்று மிலர்போல மசினங் கொளும்பழைய கந்தையணிவோ ரிடத்துங், கடிநாயெனச்சீறி யெவரையுஞ் சேர்க்காத கன்னிவாழ் மனையகத்தும், தநிசேர் கடத்திலுங் கர்த்தபத் திடையிலுஞ் சார்ந்தவாட் டின்றிரளிலுஞ், சாம்பிண முகத்திலு, மிவையெலாங் கவலைபுரி தௌவைவா ழிட மென்பர்காண், அதிரூப மலைமங்கை நேசனே மோழைதரு மழனநனெம தருமை மதவே எனுதினமு மனதினினை தருசதுர கிரிவள ரறப்பளீசுர தேவனே. (10)

அவாவரிடத்து நடக்குமுறை.

மாதா பிதாவினுக் குள்ளன்புடன்கனிவு மாறாத நல்லொழுக்கம், மருவுகுரு வானவர்க் கினியவுபசாரமுள வார்த்தைவழிபா டடக்கம், காதார் கருங்கண்மனை யாடவைக் கோசயன காலத்தி னய பாஷணங், கற்றபெரி யோர்முதியர் வருமாதுலர்க்கெலாங் கருணைசே ரருள் விதானம், நீதிபெறு மன்னவரிடத்ததிக பயவிநய நெறியுடைய பேர்க்கிங்கிதம். நேயமுள தமர்தமக் ககமகிழ்வு டன்பரிவு நேரல ரிடத்தில் வயிரம், ஆதிமனு நூல்சொலும் வழக்கமிது வாகுமெமை யையனே யருமை மதவே, ளனுதினமுமனதினினை தருசதுர கிரிவள ரறப்பளீசுர தேவனே. (11)

குணங்காண் குறி.

கற்றோர்க ளென்பதைச் சீலமுட னேசொலுங் கனவாக்கினாற் காணலாங், கற்புளா ரென்பதைப் பார்க்கின்ற பார்வையொடு கானடையி னுங் காணலாம், அற்றோர்களென்பதனை யொன்றிலும் வாரா வடக்கத்தினா லறியலா, மறமுளோ ரென்பதைப் பூததயை யென்னுமில்லை யதுகண்டு தானறியலாம், வித்தோங்கு பயிரைக் கிளைத்துவரு துடியினால் விளையுமென்றே யறியலாம், வீரமுடை யோரென்ப தோங்கிவரு தைரிய விசேடத்தினா லறியலாம், அத்தா குணத்தினாற் குலநலந் தெரியலா மண்ணலே யருமைமதவே, ளனுதினமு மனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுர தேவனே. (12)

கூடிற் பயன்படல்.

செத்தைபல கூடியொரு கயிறாயி னதுகொண்டு திண்கரியையுங் கட்டலாங், திகழ்க்கபல துளிகூடி யாறாயின் வலியொடு திரளேரி நிறை விக்கலாம், ஒத்தநாண் பஞ்சுபல சேர்ந்துநூ லாயிடி லுடுத்திடுங் கலையாக்கலா, மோங்கிவரு கோலுடன் சிலையுங் கூடினா லுயர்கனிகை யாக் கொள்ளலாம், மற்றுமுயர் தண்டுலத் தோடுதவி டுமிகூடின் மல்குமுளை விளைவிக்கலாம், மனமொத்தநேயமொடு கூடியொரு

வர்க்கொருவர் வாழின்வெகு வெற்றி பெறலாம், அற்ற கனி பைப்பொருத் தரிபிரமர் தேடரிய வமலனே யருமை மகவே, எனுதினமு மனதினினே தருசதுர கிரிவள ரறப்ப ளீசுர தேவனே. (13)

ஒன்றனில்லாமையாற் பாழ்படல்.

தாம்பூல தாரண மிலாததே வருபூர்ண சந்த்ரனிகர் முக சூனியஞ், சற்சனரிலாததேவெகுகனஞ் சேர்ந்துவாழ் தரும்பெரிப நகர் சூனியம், மேம்பா டிலாதமன் னவர்கள் வந்தாள்வதே மிக்கதேசச் சூனியம், மிக்கசற் புத்திர னிலா ததே னலமான வீடுசேர் க்ரக சூனியம், சோம்பாத தலை வரில்லாததே வளமுடன் சொல்லுபர் சபாசூனியந், தொல் லுலகி லனைவர்க்கு மாநிதிய மில்லதே சுத்தசூனியமென்பர் காண், ஆம்பல்வதனத்தனைக் குகனையின் றருள்செய்த வத் தனே யருமை மதவே, எனுதினமு மனதினினே தருசதுர கிரிவள ரறப்பளீ சுர தேவனே. (14)

இதற்கிது வேண்டுமெனல்.

தனக்குவெகு புத்தியுண் டாகினும் வேறொருவர் தம் புத்தி கேட்க வேண்டுந், தானதிக சூரனே யாகினுங் கூட வே தளசே கரங்கள் வேண்டும், கனக்கின்ற வித்துவா ளுகி னுந் தன்னினுங் கற்றோரை நத்த வேண்டுங், காசினியை யொருதடையி லாண்டாலும் வாசலிற் கருத்துள்ள மந்த்ரி வேண்டும், தொனிக்கின்ற சங்கீத சாமர்த்திய ளுகிலுஞ் சுதிகூட்ட வொருவன் வேண்டும், சுடர்விளக் காயினு நன் ருய் விளக்கிடத் தூண்டுகோ லொன்று வேண்டும், அனற் கண்ண னேபடிக சங்கநிகர் வண்ணனே யையனே யருமை மதவே, எனுதினமு மனதினினே தருசதுரகிரிவள ரறப்பளீ சுர தேவனே. (14)

தேவர்கள் காலவளவை.

சதுரயுக மோரிரண் டாயிரம் பிற்படிற் சதுர்முகற் கொரு தினமதாஞ், சாற்றுமித் தினமொன்றி லேயிந்த்ர

பட்டங்க டாமுமீ ரேழ் சென் றிடும், மதிமலியு மித்தொகை யினயனுயு னாறுபோய் மாண்டபோ தொரு கற்பமாம், மாறிவரு கற்பமொரு கோடிசென் றுநெடிய மாறனக் கோர் தினமதாம், துதிபரவு மித்தொகையி லொருகோடி நெடியமா ரேன்றியே போய் மறைந்தா, ரேகையோர் பாகனே நீநகைத் தணிமுடி துளக்கிடுங் காலமென்பார், அதிகமுள பலதேவர் தேவனே தேவர்கட் கரசனே யரு மைமதவே, எனுதினமு மனதினிலினை தருசதுரகிரிவளரறப் பளிசுர தேவனே. (15)

தூய்மையிடமுந்தூய்மை செய்வனவும்.

வாம்பரி தனக்கதிக புனிதமுக மதனிலே மறையவர்க் குயர் புனிதமோ, மலரடியி லேபுனித மொளிகொள்கன் றுடிக்கு மாசின்முற்புற மதனிலே, மேம்படும் பசுவினுக் குப்பிற் புறத்திலே மிக்கமட மாதருக்கோ, மேனியெல் லாம்புனித மாகுமா சௌசமொடு மேவு வனிதையர் தமக் கும், தாம்பிரம தற்குமிகு மெள்ளிவெண் கலமயங் தங்கமீ யங் தமக்குஞ், சரும்புனிதம் வருபெருக் கொடுபுளி சுணஞ் சாம்பல் சாருமண் டாது சாணம், ஆம்புனித மிவையென் பர் மாமேரு வில்லியே யனகனே யருமைமதவே, எனுதி னமு மனதினிலினை தருசதுர கிரிவள ரறப்பளீசுர தேவனே.

அடங்காதவற்றை யடக்குமுபாயம்.

கொடியபொலி யெருதையிரு மூக்கிலுங் கயிறூன்று கோர்த்துவச விர்த்தி கொள்வார், குவலயந் தனின்மதக் களிறதனை யங்குசங் கொண்டுவச விர்த்தி கொள்வார், படி விட வரவைமந் திரதந் திரத்தினாற் பற்றிவச விர்த்திகொள் வார், பாய்பரியை நெடியகடி வாளமது கொடுநடை பழக் கிவச விர்த்தி கொள்வார், விடமுடைய துட்டரைச் சோர் பந்து கைக்கொண்டு வீசிவச விர்த்திகொள்வார், மிக்கபெரி யோர்களுங் கோபத்தை யறிவால் விலக்கிவச விர்த்தி கொள்வார், அடியவர் துதிக்கவரு செந்தாமரைப்பதத் தை யனே யருமை மதவே, எனுதினமு மனதினிலினை தருசதுர கிரிவள ரறப்பளீ சுர தேவனே. (18)

கோடி யுடுக்குநாள்.

கறைபடா தொளிசேரு மாதிவா ரந்தனிற் கட்டலாம் புதிய சீலை, கலைமதிக் காகாது பலகாலு மழையினிற் கடிது நனை வுற் றழிதரும், குறைபடா திடர்வரும் வீரியம் போமரிய குருதிவா ரந்தனக்குச், கொஞ்சநா ளிற்கிழியும் வெற்றிபோம் புந்தியிற் குருவார மதிலணிந் தால், மறைபடா தழகுண்டு மேன்மேலு நல்லாடை வருமினிய சுக்கிரற்கோ, வாழ்வுண்டு திருவுண்டு பொல்லாத சனியற்கு வாழ்வுபோமரண முண்டாம், அறைகின்ற வேதாகமத்தின்வடி வாய் விளங் கமலனே யருமை மதவே, ளனுதினமு மனதிலினை தருசதுர கிரிவள ரறப்பளீ சுர தேவனே. (19)

சகுனம்.

தலைவிரித் தெதிர்வருத லொற்றைப் பிராமணன் றவசி சன் னுசி தட்டான், றனமிலா வெறுமார் பி மூக்கறைபுல் விறகுதலை தட்டைமுடி மொட்டைத் தலை, கலன்கழி மடந்தையர் குசக்கலஞ் செக்கான் கதித்தநில தைலமிவைகள், காணவெதிர் வரவொண் ணேர்க்குட மெருக்கூடை கனிபுலா லுபய மறையோர், நலமிகு சுமங்கலை யிழங்குரு தகமன்னை நாளும்வண் ணனழுக் கும், நசை பெருகு பாற்கலச மணி வளையன் மலரிவைக ளெதிர் வர நன்மையாம், அலை கொண்ட கங்கைபுனை வேணியாய் பரசணி மண்ணாலை யருமை மதவே, ளனுதினமு மனதினிலினைதருசதுர கிரிவள ரறப்பளீ சுர தேவனே. (20)

நற்பொருளிற் குற்றம்.

பேரான கங்கா நதிக்குமதன் மேல்வரும் பேனமே தோஷ மாகும், பெருகிவளர் வெண்மதிக்குள்ளுட் களங்கமே பெரிதான தோஷ மாகும், சீரான்த போனதர்க் கொருவர்மேல் வருகின்ற சீற்றமே தோஷ மாகுந், நீதின் முடி மன்னவர் விசாரித் திடாதொன்று செய்வதவர் மேற் றோஷமாம், தாராளமாமிகத் தந்துளோர் தாராமை தானி

ரப் போர்தோஷ மாஞ், சாரமுள நற்கருப் பஞ்சாறு கைப்பதவர் நாலஞ்செல் தோஷ மாகும், ஆராபு மொருநான் மறைக்குமெட் டாதொளிரு மண்ணலே யருமை மதலே, னனுதினமு மனதினினை தருசதுர கிரிவள ரறப்பளீசுர தேவனே. (19)

இதனை யுடையவர்க் கிது வில்லையெனல்.

பொன்னுசை யுள்ளவர்க் குறவேது குருவேது பொங்குபசியுள்ள பேர்க்குப், போதவே சுசியேது ருசியேது மயல்கொண்டு பொதுமாதர் விழி வலையிலே, என்நாளு மலைபவர்க்கச்சமொடு வெட்கமே தென்றென்று முறுகல்வி மே, லிச்சையுள பேர்க்கதிக சுகமேது துயிலேது வெளிதா யிருந்து கொண்டே, பன்னாளு மலைபவர்க் கிகமேது புகழேது பாரிலொரு வர்க் கதிகமே, பண்ணிபிடு மூடருக்கறமேது மறமலாற் பகர்கிரைய மொன்றுளது காண், அன்னை வருகரியுரித்தணிபு மெய்யனே யமலனே யருமை மதவே, னனுதினமு மனதினினை தருசதுர கிரிவள ரறப்பளீசுர தேவனே. (20)

மறையோர் சிறப்பு

ஓராறு தொழிலையுங் கைவிடார் சௌசவிதி யொன்றுதப் பாது புரிவார், ருதயாதி யிற்சென்று நீர்படிகுவார்கால மொருமூன்றி லுக்கு மறவார், தாராய்ந்து காயத்ரி யதுசெபிப் பார்நாளு மதிதிபூசைகள் பண்ணுவார், யாகாதிகருமங்கள் மந்த்ரகிரி யாலோப மின்றியே செய்து வருவார், பேராசை கொண்டிடார் வைதிகநன் மார்க்கமே பிழையாதிருக்கு மறையோர், பெய்யெனப்பெய்யுமுகி லவர்மகிமையெவர்களும் பேசுதற் கரிதரிது காண், ஆரார் நெடுஞ்சடிலவமலனே யெனையாளு மண்ணலே யருமை மதவே, னனுதினமு மனதினினை தருசதுர கிரிவள ரறப்பளீசுர தேவனே.

அரசர் சிறப்பு.

மநுநீதி முறைமையும் பரராசர் கொண்டாட வருமதிகரண வீரமும், வான்விஜப மொடுசேரசசாதனவி சேஷமும்

வாசிமதசரியேற்றமுர், கனமா மமைச்சரும் பலமான தூர்க்கமுங் கைகண்டபோர்ப் படைஞருங், கஜரதபதாதி புரந்தாகப்ர வாகமுங் காலதேசங்க ளெவையும், இனிதா யறிந்தஸ்தானுபதிக ளொடுசமர்க் கிளையாத தளசர்த்தரு, மென்றும்வற் றாதநதன தானிய சமுத்திரமு மேற்றமுள குடிவர்க்கமும், அனைவோரு மெச்சவிங்கிவையெலா முடையபேரரசரா மருமை மதவே, எனுதினமு மனதினினைதரு சதுரகிரிவள ரறப்பளீசுர தேவனே. (22)

வைசியர் சிறப்பு.

நீள்கடல் கடந்திடுவர் மலையாளமும்போவர் நெடிதுதூரந் திரிந்து, நினைவுதடு மாறுர்கள் சலியார்கள்பொருடேடி நீணிலத் தரசுபுரியுர், வாளுழவ ரைத்தமது கைவசஞ் செய்வார்கள் வருமிடம் வராதவிடமும், மனதையு மறிந்துதவி யொன்றுநா றாயிட வளர்ப்பர்வரு துலைதுலக்கும், ஆள்விடுவர் மலிவுகுறை வதுவிசா ரித்திடுவ ரளவில்பற்பல சரக்கு, மமைவுறக்கொள்வர்விற் பார்கணக் கதிலணுவு பறவிடார் செலவுவரிலோ, ஆளியொத் தேமலையி னளவுங் கொடுத்திடுவ ரருள்வைசிய ரருமை மதவே, எனுதினமு மனதினினை தருசதுர கிரிவள ரறப்பளீசுர தேவனே. (24)

வேளாளர் சிறப்பு.

யசனுதி கருமமுந் தப்பாமல்வேதியரியற்றிநல் லேர் பெறுவதும், ராச்யபா ரஞ்செய்து முடிமன்னர் வெற்றிகொண் டென்றுநல் லேர்பெறுவ தும், வசனுதி தப்பாது தனதானி யந்தேடி வசியர்நல் லேர்பெறுவதும், மற்றுமுள பேரெலா மிடியென் றிடாததிக வளமைபெற் றேர்பெறுவதும், திசைதோறு முள்ளபல தேவா லயம்பூசை செய்யநல் லேர்பெறுவதுஞ், சீர்கொண்ட பைங்குவளை மாலைபுனை வேளாளர் செய்யுமே ழிப்பெருமை காண், அசையாது வெள்ளிமலை தனின்மேவி வாழ்கின்ற வண்ணலே யருமை மதவே, எனுதினமு மனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுர தேவனே. (25)

இராயச கருணீகர் சிறப்பு.

வருமோலை யத்தரத் தெழுதிவரு பொருளினல் வரவி டுப் போன் மனதையும், மருவிவரு கருமமுந் தேசகாலத் தையும் வருகர தலாம லகமாம், விரைவர யறிந்தரச ரெண் ணிலெண் ணிலையள விடவெழுத வாசிக்கவும், வெற்றிகொ ண்டிடபெரிய புத்தியிடை யோன்புவியின் மேன்மைரா யச காரனும், கருவா யறிந்து தொகை யிராறு நொடியினிற் கடிதேற் றிடக்குறைக்கச், கடுகையொரு மலையாக மலையை யொரு கடுகுமாக் காட்டுவோன் கருணிக னும், அருவாகி யுருவாகி யொளியாகி வெளியாகு மண்ணலே யருமை மதவே, ளனுதினமு மனதினிலே தருசதுரகிரிவள ரறப்பளீ சுர தேவனே. (26)

இல்லறம்.

தந்தைதாய் சற்குருவை யிட்டதெய் வங்களைச் சன்மா ர்க்க முள மனைவியைத், தவறுத சுற்றத்தை யேவாத மக்க ளைத் தனைநம்பி வரு வோர்களைச், சிந்தைமகிழ் வெய்தவே பணிவிடைசெய் வோர்களைத்தென்புலத்தோர் வறிஞரைத், தீதிலா வதிதியைப் பரிவுடைய துணைவரைத் தேனுவைப் பூசுரர் தமைச், சந்ததஞ் செய்கடனை யென்றுமிவை பிழை யாது தான்புரிந் திட லில்லறஞ், சாருநல முடையராந் துற வறத்தோருமிவர் தம்முடன் சரியா யிடார், அந்தரி யுயிர் க்கெலாந் தாய்தனினு நல்லவட் சன்பனே யருமை மத வே, ளனுதினமு மனதினிலே தருசதுரகிரிவளரறப்பளீ சுர தேவனே. (27)

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

கயிலாசநாதர் சதகம்.

அரிதெனல்.

ஊமைசெவி டொடுபேடு குருடு கூனின் றியே யுல கிற் செனித்த லரிதா, மோருருப் புங்குறைக ளின்றியுயர் குலமதி லுதித்தலது தனினு மரிதாம், வாய்மைமிகு கல் விமா னாவதரி தாஞ்செல்வ வானாவ ததினு மரிதாம், வண க்கமு மொழுக்கமும் வாய்ப்பதரி தாந்தர்ம வானாவததினு மரிதாம், ஆமிதினு மத்துவித நெறியுணர்ந் தாசான னுக்ர கம் பெறுவ தரிதா, மட்டாங்க யோகமெய்ஞ் ஞானமு நிறைந்திடுத லதினுமரி தரிது கண்டாய், காமிசிவ காமி யபி ராமிமதி சாமியே கற்பக விராச மேவுங், கங்கைபுனை யீசனே மங்கை மகிழ் நேசனே கயிலையங் கிரிவா சனே.

கல்விச் சிறப்பு.

கடலுலகி லுற்றபொரு ளுக்குளே நன்மைதரு கல்வி நிலை பெற்றபொருளாங், கனலினா லுருகாது புனலினாற் கரையாது கள்ளராற் றிருடொணாது, திடமான ராசாதி ராசரா லும்ம தைத்தீண்டிச் சிதைக்கொணாது, செயன் மிகக மாதரார சேதமா காதொருவர் செலவிடிற் குறைவு றுதங், கடமிகு சகோதரர்க் கிடமது கொடாததனை யளவி டவு முடியாதுகா, ணப்பொரு ளினைப்பெறு திப்புவியி ல லைகின்ற வற்பருமு பயனென் கொலோ, கடகய முரித் துட லினிற்றரித் திடுதேவ கற்பக விராச மேவுங், கங்கை புனை யீசனே மங்கைமகிழ் நேசனே கயிலையங் கிரிவாச னே.

வியாதி வருமூலம்.

மயிரினா லுமியினாற் கடுவழி நடக்கையால் மலசல மடக்கையாலும், மனதுதுயரத்தினாற் கல்லினான் நெல்லினான் மாதர்கள் புணர்ச்சியாலுந், தயிரிரவி லுண்ணலாற் கனிபல வருந்தலாற் சருகூர னீரினாலும், தயிலமது மூழ்கிமட மங்கையொடு சேர்தலாற் றன்பனியினாற் காலையில், வெயில்காய்தலாற்கண் விழித்தலால் மிக்குணவு மேவலால்வெகு நித்திரையால், விளம்பிடும் பத்தியத்தாழ் வினால் வினையினால் வியாதிவரு மூலமென்பார், கயிரவந் தனைவென்ற செவ்விதழ் மடைந்தைசூழ் கற்பக விராசமேவுங், கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே கயிலையங் கிரிவாசனே. (30)

கலிகால வியல்பு.

தாலமா நிழலினல் லொரமுத முண்கினுந் தப்பாது குடியரென்பர், தனமிகுத் துளபேர்கள் பித்தளை யணிந்திடிற் றங்கமென்றே மொழிகுவார், வாலிபந் தன்னிலே யதிசில ராகவே வைகினும விடனென்பர்காண், வறுமைசேரெளியவர்கள் வயிரமது பூண்கினும் வளையற்க லெனவுரைப்பார், சீலம் புறத்திலு மகத்தினக் கிரமமுஞ் செயமீன ரைப்பு கழுவார், சித்தசுத் திபதாகி ஞானநெறி தேர்ந்திடுந் திவ்யபெரியோரை யிகழ்வார், காலகலி யுகதருமமீதென வுரைத்திடுவர் கற்பக விராசமேவுங், கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே கயிலையங்கிரிவாசனே. (31)

கர்வத்தாற் பங்கமுற்றோர்.

பிரமனது கருவமும் மாரன் புகழ்ச்சியும் பிடிபெறு வாலிபகமும், பேரிலங் கைக்கரச னாற்றலு மிராட்சசப்பெண் நாட கைச்சமர்த்துந், திரிபுரர்களெண்ணமுந் தக்கனது வேள்வியுந் தீங்குபுரி தாரிய னினைவுஞ், சினங்கொள்கயிடவன்மதத் தொடுசூர பன்மன் செருக்குமிகு வீரர் வலியு, மிரணியன் பிடிமான மும்பகாசூரன தியங்கொணு வயிர் பழிப்பு, மின்னும் பராக்ரம மிகுந்தபுர வலர் மதமுமிற வாது நிலைநின்றதோ, கரியமால் தேடியுங் காணாத பாத

னே கற்பக விராசமேவுங், கங்கைபுனையீசனே மங்கைம கிழ் நேசனே கயிலையங் கிரிவாசனே. (32)

கடனீயாவிடம்.

வாத்தியார் கவிவாணர் வறுமையர்க டனதுகுரு ம றையோர் கண் மந்த்ரவாதி, மாதர்பொது மங்கையர்கள் பண்டிதர்களஞ்சாத மாவீர ரடிமையானோர், சாத்திரஞ் சொல்பவர்கள் கருணிகர்கள் பிச்சாண்டி தபசிசந் நியாசி தட்டான், சவரகன கூத்தாடி வேசிகாந்தன்பந்து தாயாதி யிவர்கெட் டெலாம், பூத்தனச் செல்வர்கடனீந்திடின் மீண் டுமப் பொருள்வந்துறுது கேட்கிற், பொல்லாங்க தாய்ப் பினுங் கைப்பொருட் சேதமாய்ப் போகுமென வேயுரை ப்பார், காத்தருள்செய் கர்த்தனே நீத்தவர கத்தனே கற் பக விராசமேவுங், கங்கைபுனையீசனே மங்கைமகிழ் நேச னே கயிலையங் கிரிவாசனே, (33)

இவர்பகை யாவாதேனல்.

அற்றூர் தமைத்தாங்கு வேந்தருப தேசிக ரமைச்சர் மிகு பொருள்படைத்தோ, ரரியமந் திரவாதி கபடர்நய வஞ்சக ரதிதுட்ட ரொடுகோளர்கள், சற்றுப்ந்த பாவாணர் பிறர்கள் வர விடுதூதர் கள்ளரமர் புரிசூரர்கள், காருணிகர் வயித்தியர் தவத்தினி லுயர்ந்து மெய்க் காட்சிதரு சிவயோ கியர், சற்றுகிலுமிந்த வீரெண்மரோடு பகை தான்கொளிற் றுன்ப முளதாஞ், சர்வசன முங்கொல்ல வந்த கொடு விட மூண்ட தற்பரா சிற்சொரூபா, கற்றுக் குழாமேய்க்க வுற் றுன் தினம்பரவுகற்பக விராசமேவுங், கங்கைபுனையீசனே மங்கைமகிழ் நேசனே கயிலையங் கிரிவாசனே. (34

பட்டணச் சிறப்பு.

பக்கமொரு நாற்கரதனிலஞ்சவுக்க மாய்ப் பலர்கணி றைநருமாவணம், பணிவாவி மாடமாளிகைமேடைகோபு ரம் பகராலயங்களுடனே, மிக்கிரத கசதுரக மொடுபதா திகடுவசம் வேசையர்களாடல் பாடல், வீதியிருபாலினுந் தாழைகமுகஞ்சோலை மேவுமொளி சூழு மணிக, டக்கபுக ழந்தனர்கள் மன்னர்மந் திரிமுதற் சகலசா தியரு முள

தாச், சற்சனரொ டட்டலட் சுமிவாச முள்ளதே சதிர்பெ றும் பட்டணைமதாங், கைக்குளே நெல்லியங் கனியெனக் காட்சிதரு சற்பக விராசமேவுங், கங்கைபுனை யீற்னே மங் கைமகிழ் நேசனே கயிலையங் கிரிவா சனே. (35)

பதினேன் புராணம்.

மதிக்கின்ற பௌடிகங் காந்தமார்க் கண்டேயம் வாம னங் கூர்மலிங்க, மன்னுமுயர் பிரமாண்டம் வாராக மச்ச மிவை மங்கைபா கன்புராணங், துதிக்கின்ற பாகவதம் சைவங் காருடங் தோன்றுநா ரதமா லதாஞ், சொல்ல ரிய பிரமமொடு பதுமமிவி ரண்டுமால் சுதனயற் குரியவெ ன்பர், விதிக்கின்ற பிரமகை வர்த்தமா தித்தற்கு மேவுமக் கினிதனக்கோர், வெற்றிசே ராக்நேய மாமிவீ ரொன்ப தென மிக்கோ ருரைப்பர் கண்டாய், சதிக்கின்ற தொண் டரு ளுதிக்கின்ற சோதியே கற்பக விராசமேவுங், கங்கை புனை யீசனே மங்கைமகிழ் நேசனே கயிலையங் கிரிவா சனே. (36)

தொண்ணூற்ருறு தத்துவம்.

பூதங்க ளைந்ததாம் ஞானவிந் திரியமாம் பொறியை ந்து புலனைந் ததாம், பொல்லாத தொழில்கரும விந்திரிய மைந்ததாம் புகழ்பெறுங் கரண நாலாங், தாதுவேழ் குண மூன்று மலமுமோ ரைந்ததாஞ் சாற்றிடு விகார மாறுங், தழைத்திடும் வாயுவொரு பானென்பர் மண்டலங் தானு மொரு மூன்றதாகு, மாதார மாறுதும் வாசல்களு மொன் பதா மவத்தையைந் தாகுமிக்க வருமைசேர்ந் தூயர்நாடி பத்ததால் நோசமைந் தாம்பிணிபு மூன்றதாகுங், காதல் செய் கருவிதா தொண்ணூற்றொ டாறென்பர் கற்பக விரா சமேவுங், கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே கயி லையங் கிரிவா சனே. (37)

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

தாயுமானசுவாமிகள் பாடல்.

திருவருள்விலாசப் பரசிவ வணக்கம்.

அங்கிங்கெனாதபடி யெங்கும்ப்ரகாசமா
யானந்தபூர்த்தியாகி
யருளொடு நிறைந்ததெது தன்னருள்வெளிக்குளே
யகிலாண்டகோடியெல்லாந்
தங்கும்படிக்கிச்சை வைத்துயிர்க்குயிராய்த்
தழைத்ததெதுமனவாக்கினிற்
றட்டாமனின்றதெது சமயகோடிகளெலாந்
தந்தெய்வமெந்தெய்வமென்
றெங்குந்தொடர்ந்தெதிர் வழக்கிடவுநின்றதெது
வெங்கணும்பெருவழக்கா
யாதினும்வல்லவொரு சித்தாகியின்பமா
யென்றைக்குமுள்ள தெதுமேற்
கங்குல்பகலறநின்ற வெல்லையுளதெதுவது
கருத்திற்கிசைந்ததுவே
கண்டனவெலாமோன வுருவெளியதாகவுங்
கருதியஞ்சலிசெய்குவாம். 1

ஊரனந்தம்பெற்ற பேரனந்தஞ்சுற்று
முறவனந்தம்வினையினா
லுடலனந்தஞ்செயும் வினையனந்தங்கருத்
தோவனந்தம் பெற்றபேர்
சீரனந்தஞ்சொர்க்க நரகமுமனந்தநற்
றெய்வமுமனந்தபேதந்
திகழ்கின்றசமயமு மனந்தமதனால்ஞான
சிற்சத்தியாலுணர்ந்து

காரனந்தங்கோடி வருடித்ததெனவன்பர்
சண்ணும்விண்ணுறுநதேக்கவே
கருதரியவானந்த மழைபொழியுமுகிலெனங்
கடவுளைத்துரியவடிவைப்
பேரனந்தம்பேசி மறையனந்தஞ்சொனும்
பெரியமௌனத்தின் வைப்பைப்
பேசருமனந்தபத ஞானவானந்தமாம்
பெரியபொருளைப் பணிகுவாம். 2

பரிபூரணானந்தம்.

தெரிவாகவூர்வன நடப்பன பறப்பன செயற்கொண் டிருப்பனமுதற், றேகங்களத்தனையு மோகங்கொள் பௌதிகஞ்சென்மித்த வாங்கிறக்கும், விரிவாயபூதங்க ளொன்றொடொன்றுயழியு மேற்கொண்டசேடமதுவே, வெறுவெளிநிராலம்ப நிறைசூன்யமுபசாந்த வேதவேதாந்தஞானம், பிரியாதபேரொளி பிறக்கின்ற வருளருட் பெற்றோர்கள் பெற்றபெருமை, பிறவாமை யென்றைக்கு மிறவாமை யாய்வந்து பேசாமையாகுமெனவே, பரிவாயெனக்குநீ யறிவிக்கவந்ததே பரிபாககாலமலவோ, பார்க்குமிடமெங் குமொரு நீக்கமறநிறைகின்ற பரிபூரணானந்தமே. 3

ஆராயும்வேளையிற் பிரமாதியானுமையவொருசெய லுமில்லை, யமைதியொடு பேசாதபெருமைபெறு குணசந் ரராமெனவிருந்தபேரு, நோரகவொரும்காபமொருவேளை வரவந்த நிலையொனூமிலலாமலே, நெட்டுயிர்த்துத் தட் டழிந்துளமுவார்வசன நிர்வாகரென்றபேரும், பூராயமா யொன்று பேசுமிடமொன்றைப் புலம்புவார் சிவராத்திரிப், போதுதுயிலோமென்ற விரதியருமற்றுயிற் போலேயிரு ந்துதுயில்வார், பாராதிதனிலுள்ள செயலெலாமுடிவிலே பார்க்கினின் செயலலவோ, பார்க்குமிட மெங்குமொரு நீக்கமறநிறைகின்ற பரிபூரணானந்தமே. 4

வாராதெலாமொழிய வருவனவெலாமெய்த மனது சாக்ஷியதாகவே, மருவநிலைதந்ததும் வேதாந்தசித்தாந்த மரபுசமரசமாகவே, பூராயமாயுரை ஆகம்மது தந்தது பொய்யுடலை நிலையன்றெனப், போதநெறிசுதந்ததுஞ் சாவதவானந்த போகமேவீடென்னவே, நீராளமாயுருக வுள்ளன்புதந்தது நின்னதருளின்னுமின்னு நின்னையே துணையென்ற வென்னையே காக்கவொரு நினைவுசற் றுண்டாகிலோ, பாராதியறியாத மோனமேயிடைவிடாப் பற்றாக நிற்கவருள்வாய், பார்க்குமிடமெங்குமொரு நீக்கமறநிறைகின்ற பரிபூரணானந்தமே. 5

ஆழாழிகரையின்றி நிற்கவில்லையோ கொடியவாலமமுதாகவில்லையோ, வக்கடலின்மீதுவடவனனிற்கவில்லையோ வந்தரத்தகிலகோடி, தாழாமனிலைநிற்கவில்லையோ மேருவுந்தனுவாகவளையவில்லையோ, சத்தமேகங்களும் வச்ரதரனாணையிற் சஞ்சரித்திடவில்லையோ, வாழாதுவாழவே பிரமனடியாற்சிலையு மடமங்கையாகவில்லையோ, மணிமந்த்ரமாதியால் வேண்டுசித்திகளுலக மார்க்கத்தில் வைக்கவில்லையோ, பாழானவென்மனங் குவியவொருதந்திரம்பண்ணுவதுனக்கருமையோ, பார்க்குமிட மெங்குமொரு நீக்கமறநிறைகின்ற பரிபூரணானந்தமே. 6

ஆசைக்கோரளவில்லை யகிலமெல்லாங்கட்டி யாளினுங் கடன்மீதிலே, யாணைசெலவேநினைவ ரளகேசனிகராகவம் பொன்மிகவைத்தபேரு, நேசித்துரசவாத வித்தைக்கலைந்திடுவர் நெடுநாளிருந்தபேரு, நிலையாகவேயினுங் காயகற்பந்தேடி நெஞ்சுபுண்ணாவரெல்லாம், யோசிக்கும்வேளையிற் பசிதீரவுண்பது முறங்குவதுமாகமுடியு, முள்ளதேபோதுநானெனக்குளறியே யொன்றைவிட் டொன்றுபற்றிப், பாசக்கடற்குளே வீழாமன்மனதற்ற பரிசுத்த நிலையையருள்வாய், பார்க்குமிடமெங்குமொரு நீக்கமறநிறைகின்ற பரிபூரணானந்தமே. 7

பொருள்வணக்கம்.

நித்தியமாய் நிர்மலமாய் நிட்களமாய் நிராமயமாய் நிறைவாய் நீங்காச், சுத்தமுமாய்த் தூரமுமாய்ச் சமீபமுமாய்த்துரியநிறை சுடராயெல்லாம், வைத்திருந்ததாரகமா யானந்தமயமாகி மனவாக்கெட்டாச், சித்தருவாய் நின்றவொன்றைச்சுகாரம்பப்பெருவெளியைச்சிந்தைசெய்வாம.

இந்திரசாலங்கனவு கானலினீ ரெனவுலக மெமக்குத் தோன்றச், சந்ததமுஞ் சிற்பரத்தா லழியாததற்பரத்தைச் சார்ந்துவாழ்க, புந்திமகிழுறநாளுந் தடையற வானந்த வெள்ளம் பொலிகவென்றே, வந்தருளுங்குருமௌனி மலர்த்தாளையநுதினமும் வழுத்தல்செய்வாம. 9

சின்மயானந்தகுரு.

அங்கைகொடு மலர்தூவி யங்கமது புளகிப்ப வன்பினுருகிவிழிநீ, ராறுகவாராத முத்தியினதாவேச வாசைக் கடற்குணமூழ்கிச், சங்கரசுயம்புவேசம்புவேயெனவுமொழி தழுதழுத்திடவணங்குஞ், சன்மார்க்கநெறியிலாத் துன்மார்க்கனேனையுந்தன்னருள்கொடுத்தாள்வையோ, துங்கமிகு பக்குவச் சனகன்முதன் முனிவோர்க டொழுதருகில் வீற்றிருப்பச், சொல்லரிய நெறியையொரு சொல்லாலுணர்த்தியே சொருபானுபூதிகாட்டிச், செங்கமலபீடமேற் கல்லாலடிக்குள்வளர் சித்தாந்தமுத்திமுதலே, சிரகிரிவிளங்கவருதக்ஷிணாமூர்த்தியே சின்மயானந்தகுருவே. 10

காரிட்டவாணவக் கருவறையிலறிவற்ற கண்ணிலாக் குழவியைப்போற், கட்டுண்டிருந்தவெமை வெளியில்விட்டல்லலாங் காப்பிட்டதற்கிசைந்த, பேரிட்டுமெய்யென்று பேசும்பாழ்ம் பொய்யுடல் பெலக்கவினை யமுதமூட்டிப், பெரியபுவனத்தினிடை போக்குவரவுறுகின்ற பெரியவிளையாட்டமைத்திட், டேரிட்டதன்சுருதி மொழிதப்பினமனைவிட்டிடருறவுறுக்கியிடர்தீர்த், திரவுபகலில்லாத பேரின்ப வீட்டினிலிசைந்துதுயில்கொண்மினென்று, சீரிட்டவுலகன்னைவடிவானவெந்தையே சித்தாந்தமுத்திமுதலே, சிரகிரிவிளங்கவருதக்ஷிணாமூர்த்தியே சின்மயானந்தகுருவே. 11

மௌனகுருவணக்கம்.

மின்னனையபொய்யுடலை நிலையென்றுமையிலகு விழி கொண்டுமையல்பூட்டு, மின்னார்களின்பமேமெய்யென்றும் வளர்மாட மேல்வீடு சொர்க்கமென்றும், பொன்னையழி யாதுவளர் பொருளென்றுபோற்றியிப் பொய்வேடமிகுதி காட்டிப்,பொறையறிவுதுறவீதலாதிநற்குணமெலாம்போக் கிலேபோகவிட்டுத், தன்னிகரிலோபாதி பாழ்ம்பேய்பிடித் திடத்தரணிமிசைலோகாயதன், சமயநடைசாராமல்வேதா ந்தசித்தாந்தசமரசசிவானுபூதி, மன்னவொருசொற்கொண் டெனைத்தடுத்தாண்ட பின்வாழ்வித்தஞானகுருவே, மந்த்ர குருவேயோக தந்த்ரகுருவேமூலன் மரபில்வரு மௌன குருவே. 12

கல்லாதவறிவுமேற் கேளாதகேள்வியுங் கருணைசிறிதே துமில்லாக், காட்சியுங்கொலைகளவு கட்காமமாட்சியாக்காத வித்திடுநெஞ்சமும், பொல்லாதபொய்ம்மொழியு மல்லாது நன்மைகள் பொருந்துகுண மேதுமறியேன், புருஷர்வடி வானதேயல்லாது கனவிலும் புருஷார்த்த மேதுமில்லே, னெல்லாமறிந்தநீ யறியாததன்றெனக் கெவ்வண்ண முய் வண்ணமோ, விருளையிருளென்றவர்க் கொளிதாரகம்பெறு மெனக்குநின்னருடாரகம், வல்லானெனும்பெயருனக்குள் ளதேயிந்த வஞ்சகனையாளநினையாய், மந்த்ரகுருவேயோக தந்த்ரகுருவேமூலன் மரபில்வருமௌனகுருவே. 13

கருணாகரக்கடவுள்.

மண்ணாதியைந்தொடு புறத்திலுளகருவியும் வாக்காதி சுரோத்திராதியும், வளர்கின்றசப்தாதி மனமாதிகலையாதி மன்னுசுத்தாதியுடனே, தொண்ணூற்றொடாறுமற் றுள்ள னவுமௌனியாய்ச் சொன்னவொரு சொற்கொண்டதே, தூவெளியதாயகண் டானந்தசுகவாரி தோற்றுமதையென் சொல்லுவேன், பண்ணாருமிசையினொடு பாடிப்படித்தருட் பான்மைநெறிநின் றுதவறுப், பக்குவவிசேடராய்நெக்குநெ க்குருகிப்பணிந்தெழுந்திருகைகூப்பிக், கண்ணாறுகரைபுரள நின்றவன்பரையெலாங் கைவிடாக்காட்சியுறவே, கருதரிய சிற்சபையி லானந்தநிர்த்தமிடு கருணாகரக்கடவுளே. 14

பண்ணேனுனக்கான பூசையொருவடிவிலே பாவித்தி றைஞ்சவாங்கே, பார்க்கின்றமலரூடு நீயேயிருத்தியப் பனி மலரெடுக்கமனமு, நண்ணேனலாமலிரு கைதான் குவிக்க வெனி னாணுமென்னுளநிற்றிநீ, நான்கும்பிடும்போதரைக் கும்பிடாதலா லுன்பூசை செய்யன்முறையோ, விண்ணே விணாதியாம் பூதமேநாதமே வேதமேவேதாந்தமே, மேத க்கேள்வியே கேள்வியாம் பூமிக்குள் வித்தேயவித்தின் முளையே, கண்ணேகருத்தேயெனெண்ணேயெழுத்தேகதிக் கானமோனவடிவே, கருதரியசிற்சபையி லானந்தநிர்த்த மிடு கருணாகரக்கடவுளே. 15

துள்ளுமறியாமனது பலிகொடுத்தேன்கர்ம துட்ட தேவதைகளில்லை, துரியநிறைசாந்ததே வதையாமுனக்கே தொழும்பனன்பபிடேகநீ, ருள்ளுறையிலென்னாவி நைவே த்தியம்ப்ராண னோங்குமதிதூபதீப, மொருகாலமன்றிது சதாகாலபூசையா வொப்புவித்தேன் கருணைகூர், தெள்ளி மறைவடிபிட்ட வமுதப்பிழம்பே தெளிந்ததேனே சீனியே, திவ்யரசமியாவுந் திரண்டொழுகுபாகே தெவிட்டாதவான ந்தமே, கள்ளனறிவூடுமேமெள்ளமெளவெளியாய்க் கலக்க வருநல்லுறவே, கருதரியசிற்சபையி லானந்தநிர்த்தமிடு கருணாகரக்கடவுளே. 16

சித்தர்கணம்.

எண்ணரியபிறவிதனின் மானுடப்பிறவிதானியாதினு மரிதரிதுகா, ணிப்பிறவிதப்பினாலெப்பிறவிவாய்க்குமோ வேதுவருமோ வறிகிலேன், கண்ணாகனிலத்துநா னுள்ள பொழுதேயருட் ககனவட்டத்தினின்று, காலூன்றிநின்று பொழியானந்த முகிலொடு கலந்துமதியவசமுறவே, பண் ணுவதுநன்மையிந்நிலபதியுமட்டுமே பதியாயிருந்ததேகப், பவுரிகுலையாமலே கௌரிகுண்டலியாயி பண்ணாவிதனருளி னாலே, விண்ணிலவுமதியமுத மொழியாது பொழியவே வேண்டுவேனுமதடிமைநான், வேதாந்தசித்தாந்த சமரச நன்னிலைபெற்ற வித்தகச்சித்தர்கணமே. 17

ஆணிலே பெண்ணிலே யென்போல வொருபேதை யகிலத்தின் மிசையுள்ளதோ, வாடியசுறங்குபோ லோடியுழல் சிந்தையை யடக்கியொரு கணமேனும்யான், காணிலேன் றிருவருளை யல்லாமலெளனியாய்க் கண்மூடியோடு மூச்சைக், கட்டிக்கலாமதியை மூட்டவேமூலவெங் கனலினையெழுப்பவினைவும், பூணிலேனிற்றைநாட் கற்றதுங் கேட்டதும்போக்கிலே போகவிட்டுப், பொய்யுலகநடையினுங் கடையானபுன்மையேனின்னமின்னம், வீணிலேயலையாமன் மலையிலக்காகநீர் வெளிப்படக்தோற்றல் வேண்டும், வேதாந்த சித்தாந்த சமரசநன்னிலைபெற்ற வித்தகச் சித்தர்கணமே. 18

கல்லாதபேர்களே நல்லவர்கணல்லவர்கள் கற்றுமறிவில்லாதவென், கர்மத்தையென்சொல்வேன் மதியையென் சொல்லுவேன் கைவல்யஞானநீதி, நல்லோருரைக்கிலோ கர்மமுக்கியமென்று நாட்டுவேன் கர்மமொருவ, னுட்டினலோபழைய ஞானமுக்கியமென்று நவிலுவேன்வடமொழியிலே, வல்லானொருத்தன் வரவுந் த்ராவிடத்திலே வந்ததாவிவகரிப்பேன், வல்லதமிழறிஞர்வரி னங்ஙனே வடமொழியின் வசனங்கள் சிறிதுபுகல்வேன், வெல்லாமலெவவரையு மருட்டிவிட வகைவந்த வித்தையென் முத்திதருமோ, வேதாந்தசித்தாந்த சமரசநன்னிலைபெற்ற வித்தகச் சித்தர்கணமே. ஆனந்தமானபரம்.

கொல்லாமை யெத்தனை குணக்கேட்டை நீக்குமக்குணமொன்று மொன்றிலேன்பாற், கோரமெத்தனைபக்ஷபாதமெத்தனைவன் குணங்களெத்தனை கொடியபாழ்ங், கல்லாமை யெத்தனை யகந்தையெத்தனைமனக் கள்ளமெத்தனை யுள்ளசற், காரியஞ்சொல்லிடினு மறியாமை யெத்தனைகதிக்கென்றமைக்கவருளிற், செல்லாமை யெத்தனைவிர் தாகோஷ்டி யென்னிலோ செல்வசெருக்கெத்தனைமுயற்சி, சிந்தையெத்தனை சலன மிந்த்ரஜாலம்போன்ற தேகத்தில் வாஞ்சை முதலா, யல்லாமை யெத்தனை யமைத்தனை யுனக்கடிமை யானேனிவைக்குமாளோ, வண்டபகிரண்டமு மடங்கவொரு நிறைவாகி யானந்தமானபரமே. 20

காராருமாணவக் காட்டைக்களைந்தறக் கண்டகங்காரமென்றுங், கல்லைப்பிளந்துநெஞ் சகமானபூமிவெளி காணத்திருத்திமேன்மேற், பாராதியறியாத மோனமாம் வித்தைப் பதித்தன்பு நீராகவே, பாய்ச்சியதுபயிராகு மட்டுமாமாயையவன் பறவையணுகாதவண்ண, நேராகநின்றுவிளை போகம்புசித்துய்ந்த வின்னன்பர்கூட்டமெய்ந்நிலைவின்படிக்கு நீமுன்னின்று காப்பதே நின்னருட்பாரமென்று, மாராருமறியாத ஞானவெளியில் வெளியாகின்றதுரியமயமே, யண்டபகிரண்டமு மடங்கவொருநிறைவாகியானந்தமானபரமே. 21

எத்தனைவிதங்கடான் கற்கினுங் கேட்கினுமென் னிதயமு மொடுங்கவில்லை, யானெனுமகந்தைதா னெள்ளளவுமாறவிலை யாகினும்மபிமானமென், சித்தமிசை குடிகொண்ட தீமையொடிரக்கமென் சென்மத்துநானறிகிலேன், சீலமொடுதவவிரத மொருகனவிலாயினுந் தரிசனங்கண்டுமறியேன், பொய்த்தமொழியல்லான் மருந்துக்குமெய்ம்மொழி புகன்றிடேன் பிறர்கேட்கவே, போதிப்பதல்லாது சும்மாவிருந்தருள் பொருந்திடாப்பேதை நானே, யத்தனைகுணக்கேடர் கண்டதாக்கேட்டதா வவனிமிசையுண்டோசொலா, யண்டபகிரண்டமு மடங்கவொருநிறைவாகியானந்தமானபரமே. 22

சுகவாரி.

இன்னமுது கனிபாகு கற்கண்டு சீனிதேனெனருசித்திடவலியவந், தின்பங்கொடுத்தநினை யெந்நேர நின்னன்பரிடையறுதுருகிநாடி, யுன்னியகருத்தவிழ வுரைகுளறியுடலெங்கு மோய்ந்தயர்ந்தவசமாகி, யுணர்வரியபேரின்பவநுபூதி யுணர்விலே யுணர்வார்களுள்ளபடிகாண், கன்னிகையொருத்திசிற் றின்பம்வேம்பென்னினுங் கைக்கொள்வள் பக்குவத்திற், கணவனருள் பெறின்முனே சொன்னவாறென்னெனக் கருதிநகையாவளதுபோற், சொன்னபடி கேட்குமிப்பேதைக்கு நின்கருணைதோற்றிற் சுகாரம்பமாஞ், சுத்தநிர்க்குணமான பரதெய்வமே பரஞ்சோதியே சுகவாரியே. 23

அன்பின் வழியறியாத வென்னைத்தொடர்ந் தென்னை யறியாத பக்குவத்தே, யாசைப்பெருக்கைப் பெருக்கிக் கொடுத்தானாற்றேனலந்தேனென, வென்புலமயங்கவே பித்தேற்றிவிட்டா யிரங்கியொரு வழியாயினு, மின்பவெளமாகவந் துள்ளங்களிக்கவே யென்னைநீ கலந்ததுண்டோ, தன்பருவமலருக்கு மணமுண்டு வண்டுண்டு தண்முகைதனக்குமுண்டோ, சமியனேற்கிவ்வணந் திருவுளமிரங்காத தன்மையாற்றனியிருந்து, துன்பமுறினெங்ஙனே யழியாதநின்னன்பர் சுகம்வந்து வாய்க்குமுரையாய், சுத்தநிர்க்குணமான பரதெய்வமேபரஞ்சோதியே சுகவாரியே.' 24

கல்லேனுமையவொரு காலத்திலுருகுமென் கன்னெஞ்ச முருகவில்லையே, கருணைக்கிணங்காத வன்மையையுநான்முகன் கற்பிக்க வொருகடவுளோ, வல்லான்வகுத்ததே வாய்க்காலெனும்பெரு வழக்குக்கிழுக்குமுண்டோ, வானமாய் நின்றின்ப மழையாயிரங்கியெனை வாழ்விப்பதுன்பரங்கான், பொல்லாதசேயனிற் றாய்தள்ள னீதமோபுகலிடம் பிறிதுமுண்டோ, பொய்வார்த்தை சொல்லிலோ திருவருட்கயலுமாய்புன்மையேனுவனந்தோ, சொல்லான்முழக்கிலோ சுகமில்லைமௌனியாய்ச் சும்மாவிருக்கவருள்வாய் சுத்தநிர்க்குணமான பரதெய்வமே பரஞ்சோதியே சுகவாரியே. 25

வெந்நீர்பொருதெனுடல் காலின்முட்டைக்கவும் வெடுக்கென்றசைத்தெடுத்தால், விழியிமைத்தங்ஙனே தண்ணருளைநாடுவேன் வேறொன்றை யொருவர்கொல்லி, னந்நேரமையேயோவென் முகம்வாடிநிற்பதுவு மையநின்னருளறியுமே, யானுமெத்தப் பயந்தவனியானென்னை யாண்டநீ கைவிடாதே, யிந்நேரமென் றில்லை யுடற்சுமையதாகவு மெடுத்தாலிறக்கவென்றே யெங்கெங்கு மொருதீர்வை யாயமுண்டாயினு மிறைஞ்சுசுகராதியான, தொன்னீர்மையாளர்க்கு மானுடம்வகுத்தவருடுணையென்று நம்புகின்றேன், சுத்தநிர்க்குணமான பரதெய்வமே பரஞ்சோதியே சுகவாரியே. 26

அரும்பொனேமணியே யெனன்பேயெனன்பான வ
றிவே யெனறிவிலூறு, மானந்தவெள்ளமே யென்றென்
றுபாடினே னாடினேனாடிநாடி, விரும்பியே கூவினே னுல
றினேனலறினேன் மெய்சிலிர்த்திருகைகூப்பி, விண்மாரி
யெனவெனிரு கண்மாரிபெய்யவே வேசற்றயர்ந்தேனியா,
னிரும்புநேர் நெஞ்சகக் கள்வனாயினுமுனை யிடைவிட்டு நி
ன்றதுண்டோ, வென்று நீயன்றுநா னுன்னடிமையல்ல
வோ யாதேனுமறியாவெறுந், துரும்பனேனென்னினுங்
கைவிடுதனீதியோ தொண்டரொடு கூட்டுகண்டாய், சுத்த
நிர்க்குணமான பரதெய்வமேபரஞ்சோதியே சுகவாரியே.
எந்தநாள்கருணைக் குரித்தாகுநாளெனவு மென்னிதய
மெனைவாட்டுதே, யேதென்றுசொல்லுவேன் முன்னெடுபி
ன்மலைவறவு மிற்றைவரையாதுபெற்றேன், பந்தமானதிலி
ட்ட மெழுகாகியுள்ளம் பதைத்துப்பதைத்துருகவோ, பர
மசுகமாவது பொறுப்பரிய துயரமாய்ப் பலகாலுமூர்ச்சி
ப்பதோ, சிந்தையானதுமறிவை யென்னறிவி லறிவான
தெய்வநீயன்றியுளதோ, தேகநிலையல்லவே யுடைகப்பல்க
ப்பலாய்த் திரையாழியூடுசெலுமோ, சொந்தமாயாண்டநீ
யறியார்கள்போலவே துன்பத்திலாழ்த்தன் முறையோ,
சுத்தநிர்க்குணமான பரதெய்வமே பரஞ்சோதியே சுகவா
ரியே. 28

எங்குநிறைகின்றபொருள்.

அவனன்றியோரணுவு மசையாதெனும்பெரிய வாப்
தர்மொழியொன்றுகண்டா, லறிவாவதேதுசில வறியாமை
யேநிவை யறிந்தார்களறியார்களார், மௌனமொடிருந்த
தாரென்போலுடம்பெலாம்வாயாய்ப்பிதற்றுமவரார், மன
தெனவுமொருமாயை யெங்கேயிருந்துவரும் வன்மையொ
டிரக்கமெங்கே, புவனம்படைப்பதென் கர்த்தவியமெவ்வி
டம் பூதபேதங்களெவிடம் பொய்மெபிதமகிதமேல் வருந
ன்மைதீமையொடுபொறைபொறுமையுமெவ்விட, மெவர்சி
றியரெவர்பெரிய ரெவருறவரெவர்பகைஞர் யாதுமுனைய
ன்றியுண்டோ, விகபரமிரண்டினிலு முயிரினுக்குயிராகி
யெங்குநிறைகின்றபொருளே. 29

சாகமானவைகோடி கூடிநின்றாலுமொருகல்லின்முன்
னெதிர்நிற்குமோ கர்மமானவைகோடிமுன்னேசெய்தாலு
நின்கருணைப்ரவாகவருளைக், தாகமாய்நாடினரை வாதிக்க
வல்லதோ தமியனேற்கருட்டாகமோ, சற்றுமிலையென்பது
வும்வெளியாச்சுவினையெலாஞ் சங்கேதமாய்க்கூடியே, தேக
மானதைமிகவும் வாட்டுதே துன்பங்கள் சேராமல்யோகமா
ர்க்க, சித்தியோ வரவில்லை சகசநிட்டைக்குமென் சிந்தைக்
கும்வெகுதூரநா, னேகமாய்நின்றே டிருக்குநாளெந்தநா
ளிந்நாளின்முற்றுறுதோ, விகபரமிரண்டினிலு முயிரினுக்
குயிராகி யெங்குநிறைகின்றபொருளே. 30

சச்சிதானந்தசிவம்.

பாகத்தினாற்கவிதை பாடிப்படிக்கவோ பத்திநெறியில்
லைவேத, பாராயணப்பனுவன் மூவர்செய்பனுவலது பகர
வோவிசையுமில்லை, யோகத்திலேசிறிது முயலவென்றாற்
றேகமொவ்வாதிவூண்வெறுத்தா, லுயிர்வெறுத்திடலொக்கு
மல்லாதுகிரியைக ளுபாயத்தினாற்செய்யவோ, மோகத்தி
லேசிறிது மொழிபவிலை மெய்ஞ்ஞான மோனத்திநிற்க
வென்றான், முற்றாதுபரிபாகசத்திகளனேகநின்மூதறிவிலே
யெழுந்த, தாகத்திலேவாய்க்கு மமிர்தப்ரவாகமே தன்னந்
தனிப்பெருமையே, சர்வபரிபூரண வகண்டதத்துவமான
சச்சிதானந்தசிவமே. 31

இனியேதெமக்குனருள் வருமோவெனக்கருதி யேங்
குதே நெஞ்சமையோ, வின்றைக்கிருந்தாரை நாளைக்கிருப்
பரென்றெண்ணவோதிடமில்லையே, யனியாயமாயிந்தவுடலை
நானென்றுவரு மந்தகற்காளாகவே, வாடித்திரிந்துநான்
கற்றதுங்கேட்டதுமவலமாய்ப்போதனன்றே, கனியேனும்
வறியசெங்காயேனுமுதிர்சருகுகந்தமூலங்களேனுங் கனல்
வாதைவந்தெய்தி னள்ளிப்புசித்துநான் கண்மூடிமௌனி
யாகித், தனியேயிருப்பதற் கெண்ணினே னெண்ணமிது
சாமிநீயறியாததோ, சர்வபரிபூரண வகண்டதத்துவமான
சச்சிதானந்தசிவமே. 32

இன்னம்பிறப்பதற் கிடமென்னினிவ்வுடல மிறவாதிருப்பமூலத், தெழுமங்கியமிர்தொழுகு மதிமண்டலத்திலுறவென்னம்மைகுண்டலினிபாற், பின்னம்பிறக்காதுசேயெனவளர்த்திடப் பேயேனைநல்கவேண்டும், பிறவாதநெறியெனக்குண்டென்னினிம்மையே பேசுகர்ப்பூரதீப, மின்னும்படிக்ககண்டாகாரவன்னைபால் வினையேனை யொப்புவித்து, வீட்டுநெறிகூட்டிடுதன்மிகவுநன்றிவையன்றி விவகாரமுண்டென்னிலோ, தன்னந்தனிச்சிறிய னாற்றிலேன்போற்றிவளர் சன்மார்க்கமுத்திமுதலே, சர்வபரிபூரணவகண்டதத்துவமான சச்சிதானந்தசிவமே. 33

தேசோமயானந்தம்.

இப்பிறவியென்னுமோ ரிருட்கடலின் மூழ்கிநா னென்னுமொருமகரவாய்ப்பட், டிருவினையெனுந்திரையி னெற்றுண்டுபுற்புதமெனக்கொங்கைவரிசைகாட்டுந், துப்பிதழ்மடந்தையர் மயற்சண்டமாருதச் சுழல்வந்து வந்தடிப்பச், சோராதவாசையாங்கானுறுவான திசுரந்ததெனுமேலுமார்ப்பக், கைப்பரிசுகாரர்போலறிவானவங்கமும் கைவிட்டுமதிமயங்கிக், கள்ளவங்கக்காலர் வருவரென்றஞ்சியே கண்ணருவிகாட்டுமெளியேன், செப்பரியமுத்தியாங்கரைசேரவுங்கருணைசெய்வையோசத்தாகியென், சித்தமிசைகுடிகொண்ட வறிவானதெய்வமே தேசோமயானந்தமே. 34

தந்தைதாய் தமர்தார மகவென்னுமிவையெலாஞ் சந்தையிற்கூட்டமிதிலோ, சந்தேகமில்லைமணி மாடமாளிகைமேடை சதுரங்கசேனையுடனே, வந்ததோர் வாழ்வுமோ ரிந்த்ரசாலக்கோலம் வஞ்சனைபொருமைலோபம், வைத்தமனமாங்கிருமி சேர்ந்தமலபாண்டமோ வாஞ்சனையிலாதகனவே, யெந்தநாளுஞ்சரியெனத்தேர்ந்துதேர்ந்துமே யிரவுபகலில்லாவிடத், தேகமாய் நின்றநின்னருள்வெள்ளமீதிலேயானென்பதறவுமூழ்கிச்,சிந்தைதான்றெளியாதுசுழலும்வகையென்கொலோ தேடரியசத்தாகியென், சித்தமிசைகுடிகொண்ட வறிவானதெய்வமே தேசோமயானந்தமே.

கந்துகமதக்கரியை வசமாகநடத்தலாங் கரடிவெம்புலிவாயையுங், கட்டலாமொருசிங்கமுதுகின்மேற்கொள்ளலாங் கட்செவியெடுத்தாட்டலாம், வெந்தழலினிரதம்வைத் தைந்துலோகத்தையும் வேதித்துவிற்றுண்ணலாம், வேறொருவர்காணும லுலகத்துலாவ

லாம் விண்ணவரையேவல்கொளலாஞ், சந்ததமுமிளமையோடிருக் கலாமற்றொருசரீரத்தினும்புகுதலாஞ், சலமேனடக்கலாங் கனன் மேலிருக்கலாந் தன்னிகரில் சித்திபெறலாஞ், சிந்தையையடக் கியேசும்மாவிருக்கின்ற திறமறிதுசத்தாகியென் சித்தமிசைகுடி கொண்டவறிவானதெய்வமே தேசோமயானந்தமே. 36

சிற்சுகோதயவிலாசம்.

காகமோடுகெழுகலைகைநாய்நரிகள்சுற்றுசோறிடுதுருத்தியைக், காலிரண்டுநவவாசலபெற்றுவளர்'காமவேணடனசாலையை, மோக வாசை முறியிட்டபெட்டியை முமலமிகுந் தொழுகுகேணியை, மொய்த்துவெங்கிருமிதத்துகும்பியைமுடங்கலார்கிடைசரக்கினை, மாகவிந்த்ரதனு மின்னையொத்திலக வேதமோதிய குலாலனூர், வனையவெய்யதடிகாரனனயமன் வந்தடிக்குமொருமட்கலத், தேக மானபொய்யை மெய்யெனக்கருதி யையவையமிசைவாடவோ, தெரிவதற்கரிய பிரமமேயமல சிற்சுகோதயவிலாசமே. 37

தேன்முகம்.

அல்லலாந் தொழில்படைத்தே யடிக்கடி யுருவெடுத்தே
மல்லன்மா ஞாலங்காக்க வருபவர் கடவுளென்னிற்
றெல்லையாம் பிறவிவேலை தொலைந்திடா திருணீங்காது
நல்லது மாயைதானு நானென வந்துநிற்கும். 38

சொல்லற்கரிய.

இன்பக் கடலிற் புகுந்திடுவா னிரவும் பகலுந் தோற்றும
லன்பிற் கரைந்து கரைந்துருகி யண்ணுவரசே யெனக்கூவிப்
பின்புற் றழுஞ்சே யெனவிழிநீர் பெருக்கிப் பெருக்கிப் பித்தாகித்
துன்பக் கடலவிட் டகல்வேனோ சொரூபானந்தச் சுடர்க்கொ
[ழுந்தே.
கண்டார் கண்ட காட்சியுநீ காணார் காணக் கல்வனுநீ
பண்டா ருயிர்நீ யாக்கையுநீ பலவாஞ் சமயப் பகுதியுநீ
யெண்டோண் முக்கட் செம்மேனி யெந்தாய் நினக்கேயெவ்வாறு
தொண்டாய்ப் பணிவ ரவர்பணிநீ சூட்டிக்கொள்வ தெவ்வாறே.

சிவன்செயல்.

சிவன்செயலாலே யாதும் வருமெனத் தேறேனூ
மவந்தரு நினைவையெல்லா மகற்றிலே னாசைவெள்ளங்
கவர்ந்து கொண்டிழுப்பவந்தக் கட்டிலே யகப்பட்டையோ
பவந்தனை யீட்டியீட்டிப் பதைக்கின்றேன் பாவியேனே. 41

பாவியே னினியென்செய்கேன் பரமனேபணிந்துன்பாதஞ்
சேவியேன் விழிநீர்மல்கச் சிவசிவவென்று தேம்பி
யாவியே நிறையவந்த வமுதமே யென்னே னந்தோ
சாவிபோஞ்சமயத்தாழ்ந்து சகத்திடைத்தவிர்க்கின்றேனே.

தன்னையொருவர்.

தன்னையொருவர்க்கறிவரிதாய்த் தானே தானுயெங்குநிறைந்
துன்னற்கரியபரவெளியா யுலவாவமுதா யொளிவிளக்கா
யென்னுட்கலந்தா யானறியா திருந்தா னிறைவா வினியேனு
நின்னைப்பெறுமாறெனக்கருளானிலையைக்கொடுக்கநினையாயோ.

ஆசையெனும்.

ஆசையெனும் பெருங்காற்றூ டிலவம்பஞ் செனவுமன தலையு ங்கால, மோசம்வரு மிதனுலே கற்றதுங் கேட்டதுந்தூர்ந்து முத்தி க்கான, நேசமுநல் வாசமும்போய்ப் புலனுயிற் கொடுமைபற்றி நிற்பரந்தோ, தேசுபழுத் தருள்பழுத்த பராபரமே நிராசையின் றேற் றெய்வமுண்டோ. 44

சொல்லாலும் பொருளாலு மளவையாலுந் தொடரவொண் ணுவருணெறியைத் தொடர்ந்துநாடி, நல்லார்க ளவையகத்தேயிரு க்கவைத்தாய் நன்னர்நெஞ்சந் தன்னலமு நணுகுவேனே, வில் லாளியாயுலகோடியிரை யீன்றிட்டெண்ணரிய யோகினுக்கு மிவ னேயென்னக், கல்லாலின்கீழிருந்த செக்கர்மேனிக் கற்பகமே பராபரமே கைலைவாழ்வே. 45

குலமி லான்குணங் குறியிலான் கொடிதாம்
புலமி லான்றனக் கென்னவோர் பற்றிலான் பொருந்து
மிலமி லான்மைந்தர் மனைவியி லானென வனவன்சஞ்
சலமி லான்முத்தி தரும்பர சிவனெனத் தகுமே. 46

எத்தனை பிறப்போ வெத்தனையிறப்போ வெளியனேற் கிது வரையமைத்த, தத்தனையெல்லா மறிந்தநீயறிவை யறிவிலியறி கிலேனந்தோ, சித்தமும் வாக்குந் தேகமுநினவே சென்மமுமினி யெனுலாற்று, வைத்திடிங்கென்னை நின்னடிக்குடியா மறைமுடி யிருந்தவான்பொருளே. 47

எனக்கெனச் செயல்.

என்னைத் தானின்ன வண்ணமென் றறிகிலா வேழை
தன்னைத் தானறிந்திடவருள் புரிதியேற்றக்கோய்
பின்னைத் தானின்ற னருள்பெற்ற மாதவப்பெரியோர்
நின்னைத் தானிக ராரென வாழ்த்துவர் நெறியால். 48

வேத மெத்தனை யத்தனை சிரத்தினும் விளங்கும்
பாத நித்திய பரம்பர நிரந்தர பரம
நாத தற்பர சிற்பர வடிவமாய் நடிக்கு
நீத நிற்குண நினையன்றி யொன்று நானினையேன். 49

தந்தை தாய்தமர் மகவெனு மவையெலாஞ் சகத்திற்
பந்தமா மென்றே யருமறை வாயினுற்பகர்ந்த
வெந்தை நீயெனை யின்னமவ் வல்லலி லிருத்திற்
சிந்தை தான்றெளிந் தெவ்வண முய்வணஞ் செப்பாய். 50

பாயப்புலி.

எண்ணாத தெண்ணிய நெஞ்சே துயரொழி யென்னிரண்டு
கண்ணேயுறங்குறங் கென்னுணே முக்கட் கருணைப்பிரான்
றண்ணாற் கருணை மௌனத்தி ளுன்முத்தி சாதிக்கலா
நண்ணாத தொன்றில்லை யெல்லா நலமு நமக்குளவே. 51

எனக்கோர் சுதந்தர மில்லையப்பாவெனக் கெய்ப்பில் வைப்பாய்
மனக்கோ தகற்றும் பரம்பொருளே யென்னை வாழ்வித்திட
நினக்கே பரநின்னை நீககாதபூரண நீள்கருணை
தனக்கே பரமினிச் சும்மா விருக்கத் தகுமென்றுமே. 52

இடம்பெறு வீடுமின் ளுர்சேய் சகமு மிருநிதியு
முடம்பைவிட் டாருயிர் போம்போது கூடியுடன்வருமோ
மடம்பெறு மாயை மனமே யினியிங்கு வாமௌனி
திடம்பெற வைத்த மௌனஞ் சகாயந் தெரிந்துகொள்ளே. 53

நாற்றச் சடலத்தை யொன்பது வாசனடைமனையைச்
சோற்றுப் பசையினை மும்மல பாண்டத் தொடக் கறையை
யாற்றுப் பெருக்கன்ன கன்மப் பெருக்கை யடர்கிருமிச்
சேற்றைத் துணையென்ற நாய்க்குமுண் டோகதி சேர்வதுவே.

கற்புறுசிந்தை.

கற்புறு சிந்தை மாதர் கணவரை யன்றி வேறோ
ரிற்புறத் தவரை நாடார் யாங்களு மின்பவாழ்வுந்
தற்பொறியாக நல்குந் தலைவனின் னலதோர் தெய்வம்
பொற்புறக் கருதோங் கண்டாய் பூரணானந்த வாழ்வே. 55

மலைவளர்காதலி.

தெட்டிலே வலியமடமாதர்வாய்வெட்டிலே சிற்றிடையிலேநடையிலே, சேலொத்தவிழியிலே பாலொத்தமொழியிலே சிறுபிறைநுதற்கீற்றிலே, பொட்டிலேயவர்கட்டு பட்டிலேபுனைகந்த பொடியிலே யடியிலேமேற், பூரித்தமுலையிலே நிற்கின்றநிலையிலேபுந்திதனை நுழையவிட்டு, நெட்டிலே யலையாமலறிவிலேபொறையிலே நின்னடியர்கூட்டத்திலே, நிலைபெற்றவன்பிலேமலைவற்ற மெஞ்ஞான நேயத்திலேயுனிருதாள், மட்டிலேமனதுசெலநினதருளுமருள்வையோ வளமருவு தேவையரசே, வரைராஜனுக்கிருகண் மணியாயுதித்தமலை வளர்காதலிப்பெணுமையே. 56

பூரணிபுராதனி சுமங்கலைசுதந்தரி புராந்தகித்ரியம்பகியெழிற், புங்கவிவிளங்குசிவ சங்கரிசகஸ்ரதள புட்பமிசைவீற்றிருக்கு, நாரணிமனாதீத நாதாந்த சத்தியென்றுன், னாமமேயுச்சரித்திடுமடியர்நாமமே நானுச்சரிக்கவசமோ, வாரணிசடைக்கடவு ளாரணியெனப்புகழ வகிலாண்டகோடியீன்ற, வன்னையேபின்னையுங் கன்னியென மறைபேசுமானந்த ரூபமயிலே, வாரணியுமிருகொங்கை மாதர்மகிழ் கங்கைபுகழ் வளமருவுதேவையரசே, வரைராஜனுக்கிருகண் மணியாயுதித்தமலை வளர்காதலிப்பெணுமையே. 57

பெற்றவட்கே.

பெற்றவட்கேதெரியுமந்தவருத்தம்பிள்ளை
பெறுப்பேதையறிவாளோபேரானந்த
முற்றவாக்கேகண்ணீர்கம்பலைபுண்டாகு
முறுதவரேகன்னெஞ்சமுடையாராவார். 58

பராபரக்கண்ணி.

ஆராவமுதேயரசேயா னந்தவெள்ளப்
பேராறேமோனப் பெருக்கேபராபரமே. (1

எத்திக்குந் தானாகி யென்னிதயத்தேயூறித்
தித்திக்குமானந்தத் தேனேபராபரமே. (2)

முத்தேபவளமே மொய்த்தபசும்பொற்சுடரே
சித்தேயென்னுள்ளத் தெளிவேபராபரமே. (3)

அன்பைப்பெருக்கியென தாருயிரைக்காக்கவந்த
வின்பப்பெருக்கே யிறையேபராபரமே. (4)

போதாந்தபுண்ணியர்கள் போற்றிசையபோற்றியெனும்
வேதாந்தவிட்டில் விளக்கேபராபரமே. (5)

பாராயோவென்னைமுகம் பார்த்தொருகாலென்கவலை
தீராயோவாய்திறந்து செப்பாய்பராபரமே. (6)

ஒயாதோவென்கவலை யுள்ளேயானந்தவெள்ளம்
பாயாதோவையா பகராய்பராபரமே. (7)

எண்ணாத வெண்ணமெலா மெண்ணியெண்ணியேழை நெஞ்சம், புண்ணாகச்செய்ததினிப் போதும்பராபரமே.

எத்தனைதான்சன்மமெடுத் தெத்தனைநாள்பட்டதுய
ரத்தனையுநீயறிந்த தன்றோபராபரமே. (9)

சொன்னத்தைச் சொல்வதல்லாச் சொல்லறவென் சொல்லுமறச், சொன்னத்தைச் சொல்வே னெளியேன் பராபரமே. (10)

உன்னைநினைந் தன்னினைறவி னுள்ளேயுலாவுமென்னை
யன்னைவயிற்றினடைக் காதேபராபரமே. (11

ஆரிருந்தென்னாபோயென் னாரமுதாநின்னருளின்
சீரிருந்தாலுய்வேன் சிவமேபராபரமே (12

எத்தனையோகோடி யெடுத்தெடுத் தச்சோனுஞ்
சித்தமிரங்கிலையென் செய்வேன்பராபரமே. (13)

பைங்கிளிக்கண்ணி.

சின்னஞ்சிறியேன்றன் சிந்தைகவர்ந்தாரிறைவர்
தன்னந்தனியே தவிப்பேனோ பைங்கிளியே. (14)

நன்னெஞ்சத்தன்பரெல்லா நாதனைச்சேர்ந்தின்பணைந்தார்
வன்னெஞ்சத்தாலேநான் வாழ்விழந்தேன் பைங்கிளியே.

என்நாட்கண்ணி.

வெஞ்சேலெனும்விழியார் வேட்கைநஞ்சுக்கஞ்சினரை
யஞ்சேலெனுங்கைக் கபயமென்பதென்நாளோ. (16)

அஞ்சுமுகங்காட்டாமலாறுமுகம்காட்டவந்த
செஞ்சரணச்சேவடியைச் சிந்தைவைப்பதென்நாளோ. (17)

தத்துவங்கொண்ணூற்றறுவர் தாமாய்வாழிந்நாட்டைப்
பித்தனென்னும் பிதற்றொழிவதென்நாளோ. (18)

வேலையிலாவேதன் விதித்தவிந்திரசாலவுடன்
மாலைவியாபார மபக்கொழிவதென்நாளோ. (19)

கண்டுமொழிபேசிமனங் கண்டுகொண்டுகைவிலையாக்
கொண்டுவிடுமோனர்பொய்க் கூத்தொழிவதென்நாளோ. (20)

வீங்கித்தளர்ந்து விழுமுலையார்மேல்வீழ்ந்து
தூங்குமதன்சோம்பைத் துடைக்குநாளென்நாளோ. (21)

எள்ளுக்குளெண்ணெய்போ லெங்கும்வியாபகமா
யுள்ளமெய்யான்மையுள்ளபடியோருநாளென்நாளோ. (22)

கன்னலுடன்முக்கனியுங் கற்கண்டுஞ்சீனியுமாய்
மன்னுமின்பவாரமுதை வாய்மடுப்பதென்நாளோ. (23)

புண்ணியபாவங்கள் பொருந்தாமெய்யன்பரெல்லா
நண்ணியபேரின்டசுக நாமணைவதென்நாளோ. (24)

பட்டினத்தார் பாடல்.

திருவேகம்ப விருத்தம்

அன்னை யெத்தனை யெத்தனை யன்னையோ
 வப்ப னெத்தனை யெத்தனை யப்பனோ
பின்னை யெத்தனை யெத்தனை பெண்டிரோ
 பிள்ளை யெத்தனை யெத்தனை பிள்ளையோ
முன்னை யெத்தனை யெத்தனை சென்மமோ
 மூட னாயடி யேனு மறிந்திலே
னின்ன மெத்தனை யெத்தனை சென்மமோ
 வென்செய் வேன்கச்சி யேகம்ப நாதனே.

கைப்பிடிநாயகன் றூங்கையி லேயவன்கையையெடுத்
தப்புறந்தன்னிலசையாமல் முன்வைத்தயல்வளவி
லொப்புடன்சென்று துயினீத்துப் பின்வந்துறங்குவளை
யெப்படிநானம்புவே னிறைவாகச்சியேகம்பனே. (1)

பிறக்கும்பொழுதுகொடுவந்த தில்லைப்பிறந்துமண்மே
லிறக்கும்பொழுதுகொடுபோவ தில்லையிடைநடுவிற்
குறிக்குமிச்செல்வஞ்சிவன்றந்த தென்றுகொடுக்கறியா
திறக்குங்குலாமருக்கென்சொல்லு வேன்கச்சியேகம்பனே.

அன்னவிசாரமதுவேவிசார மதுவொழிந்தாற்
சொன்னவிசாரந்தொலையா விசாரநற்றோகையரைப்
பன்னவிசாரம்பலகால் விசாரமிப்பாவிநெஞ்சுக்
கென்னவிசாரம்வைத்தா யிறைவாகச்சியேகம்பனே. (3)

கல்லாப்பிழையுங்கருதாப் பிழையுங்கசிந்துருகி
நில்லாப்பிழையுநினையாப் பிழையுநின்னஞ்செழுத்தைச்
சொல்லாப்பிழையுந்துதியாப் பிழையுந்தொழாப்பிழையு
மெல்லாப்பிழையும்பொறுத் தருள்வாய்கச்சியேகம்பனே.

காதென்று மூக்கென்று கண்ணென்று காட்டியென் கண்ணெதிரே, மாதென்று சொல்லி வருமாயைதன்னை மற லிவிட்ட, தூதென்றெண் ணாமற் சுகமென்று நாடுமித் தூர்

ப்புத்தியை, யேதென் றெடுத்துரைப்பேனிறைவா கச்சி
யேகம்பனே. (5)

ஊருஞ்சதமல்லவுற்றார் சதமல்லவுற்றபெற்ற
பேருஞ்சதமல்லபெண்டிர் சதமல்லபிள்ளைகளுஞ்
சீருஞ்சதமல்லசெல்வஞ் சதமல்லதேசத்திலே
யாருஞ்சதமல்லநின்றாள் சதங்கச்சியேகம்பனே. (6)

சீறும்வினையதுபெண் ணுருவாகித்திரண்டுருண்டு
கூறுமுலையுமிறைச்சியு மாகிக்கொடுமையினாற்
பீறுமலமுமுதிரமுஞ் சாயும்பெருங்குழிவிட்
டேறுங்கரைகண்டிலே னிறைவாகச்சியேகம்பனே.

பொருளுடை யோரைச் செயலினும் வீரரைப்போர்க்
களத்துந், தெருளுடை யோரை முகத்திலுந் தேர்ந்துகொ
ளிவதுபோ, லருளுடை யோரைத் தவத்திற் குணத்தி
லருளிலன்பி, லிருளறு சொல்லினுங் காணத் தகுங்கச்சி
யேகம்பனே. (8)

ஓயாமற்பொய்சொல்வர் நல்லோரைநிந்திப்பருற்றுப்பெற்ற
தாயரைவைவர்சதியா யிரஞ்செய்வர்சாத்திரங்க
ளாயார்பிறர்க்குபகாரஞ்செய் யார்தமையண்டினர்க்கொன்
றீயாரிருந்தென்னபோயென்ன காண்கச்சியேகம்பனே.

நாயாய்ப்பிறந்திடினல் வேட்டையாடிநயம்புரியுந்
தாயார்வயிற்றினராய்ப் பிறந்துபின்சம்பன்னராய்க்
காயாமரமும்வறளாங் குளமுங்கல்லாவுமென்ன
வீயாமனிதரையேன்படைத் தாய்கச்சியேகம்பனே. (10)

பெண்ணாகிவந்தொருமாயப் பிசாசம்பிடித்திட்டென்னைக்
கண்ணால்வெருட்டிமுலையான் மயக்கிக்கடிதடத்துப்
புண்ணாங்குழியிடைத்தள்ளியென் போதப்பொருள்பறிக்க
வெண்ணாதுனைமறந்தே னிறைவாகச்சியேகம்பனே. (11)

சொல்லால் வருந் தற்றஞ் சிந்தனை யால்வருந்தோட
ஞ்செய்த, பொல்லாத தீவினை பார்வையிற் பாவங்கள் புண்
ணியது, லல்லாத கேள்வியைக் கேட்டிடுந் தீங்குகளாயவு

மற், றெல்லாப் பிழையும் பொறுத்தருள் வாய்கச்சி யேகம்
பனே. (12)

பிறந்துமண்மீதிற் பிணியே குடிகொண்டுபேரின்பத்தை
மறந்துசிற்றின்பத்தின் மேன்மைய லாகிப்புன் மாதருக்குட்
பறந்துழன் றேதடுமாறிப்பொன் றேடியப்பாவையர்க்கீந்
திறந்திடவோபணித்தா யிறைவாகச்சியேகம்பனே. (13)

திருத்தில்லை.

காம்பிணங் கும்பணைத் தோளார்க்கும் பொன்னுக்குங்
காசினுக்குந், தாம்பிணங் கும்பல வாசையும்விட்டுத் தனித்
துச் செத்துப், போம்பிணந் தன்னைத் திரளாகக் கூடிப் புர
ண்டினிமேற், சாம்பிணங் கத்துதை யோவென்செய் வேன்
றில்லைச் சங்கரனே. (14)

முடிசார்ந்தமன்னருமற்றுமுள் ளோருமுடிவிலொரு
பிடிசாம்பராய்வெந்துமண்ணாவ துங்கண்டுபின்னுமிந்தப்
படிசார்ந்தவாழ்வைநினைப்ப தல்லாற்பொன்னினம்பலவ
ரடிசார்ந்துநாமுய்யவேண்டு மென்றேயறிவாரில்லையே. ()

பிறவாதிருக்கவரந்தரல் வேண்டும்பிறந்துவிட்டா
லிறவாதிருக்கமருந் துண்டுகா ணிதுவெப்படியோ
வறமார்புகழ்த்தில்லை யம்பலவாணரடிக்கமல
மறவாதிருமனமே யதுகாணன் மருந்துனக்கே. (16)

திருவிடைமருதூர்.

தாயும்பகைகொண்டபெண்டிர் பெரும்பகைதன்னுடைய
சேயும்பகையுறவோரும் பகையிச்செகமும்பகை
யாயும்பொழுதிருஞ்செல்வ நீங்கிலிங்காதலினாற்
றேயுநெஞ்சேமருதீசர்பொற் பாதஞ்சுதந்திரமே. (17)

திருக்கழுக்குன்றம்.

காடோசெடியோகடற்புறமோ கனமேமிகுந்த
நாடோநகரோநகர்நடுவோ நலமேமிகுந்த
வீடோபுறந்திண்ணையோ தமியேனுடல்வீழுமிட
நீடோய்கழுக்குன்றிலீசா வுயிர்த்துணை நின்பதமே.

திருக்காளத்தி

பத்தும்புகுந்துபிறந்து வளர்ந்துபட்டாடைசுற்றி
முத்தும்பவளமும் பூண்டோடியாடிமுடிந்தபின்பு
செத்துக்கிடக்கும்பிணத்தருகேயினிச்சாம்பிணங்கள்
கத்துங்கணக்கென்ன காண்கயிலாபுரிக்காளத்தியே (19)

முப்போதுமன்னம் புசிக்கவுந்தூங்கவுமோகத்தினற்
செப்போதிளமுலையாருடன் சேரவுஞ்சீவன்விடு
மப்போதுகண்கலக்கப்படவும் மமைத்தாயையனே
யெப்போதுகாணவல்லேன் றிருக்காளத்தியீச்சுரனே. (20)

கயிலாயம்.

இல்லந்துறந்துபசிவந்தபோதங்கிரந்துநின்று
பல்லுங்கறையற்றுவெள்வாயுமாயொன்றிற்பற்றுமின்றிச்
சொல்லும்பொருளுமிழந்துசுகானந்தத்தூக்கத்திலே
யல்லும்பகலுமிருப்பதென்றோகயிலாயத்தனே. (21)

மதுரை.

விடப்படுமோவிப்பிரபஞ்ச வாழ்க்கையைவிட்டுமனந்
திடப்படுமோவின்னருளின்றி யேதினமேயலையக்
கடப்படுமோவற்பர்வாயிலிற் சென்றுகண்ணீர்ததும்பிப்
படப்படுமோசொக்கநாதா சவுந்தரபாண்டியனே. (22)

பொது.

வீடுநமக்குத்திருவாலங் காடுவிமலர்தந்த
வோடுநமக்குண்டுவற்றாத பாத்திரமோங்குசெல்வ
நாடுநமக்குண்டுகேட்ட தெல்லாந்தரநன்னெஞ்சமே
யீடுநமக்குச்சொலவோ வொருவருமிங்கில்லையே. (23)

கையொன்று செய்ய விழியொன்றுநாடக் கருத்தொன்றெண்ணப், பொய்யொன்று வஞ்சக நாவொன்றுபேசப் புலால்கமழு, மெய்யொன்று சாரச் செவியொன்று கேட்க விரும்புமியான், செய்கின்ற பூசையெவ் வாறுகொள் வாய் வினை தீர்த்தவனே. (24)

கண்ணுண்டுகாணக்கருத் துண்டுநோக்கக்கசிந்துருகிப்
பண்ணுண்டுபாடச்செவி யுண்டுகேட்கப்பல்பச்சிலையா
லெண்ணுண்டுகாத்த வெதிர்நிற்கவீசனிருக்கையிலே
மண்ணுண்டுபோகுதையோ கெடுவீரிந்தமானுடமே. (25)

சொல்லினுஞ்சொல்லின் முடிவினும்வேதச்சுருதியினு
மல்லினுமாசற்றவாகாயந் தன்னினுமாய்ந்துவிட்டோ
ரில்லினுமன்பரிடத்தினு மீசனிருக்குமிடங்
கல்லினுஞ்செம்பினுமோ விருப்பானெங்கள்கண்ணுதலே.

வினைப்போகமேயொரு தேகங்கண்டாய்வினை தானொ
ழிந்தாற், றினைப்போ தளவுநில் லாதுகண் டாய்சிவன்பாத
நினை, நினைப்போரை மேவு நினையாரை நீங்கி நெறியினி
னறு, வினைப்போ லொருவருண் டோமனமே யெனக்குற்
றவரே. (27)

மனையாளுமக்களும்வாழ்வுந் தனமுந்தன்வாயின்மட்டே
யினமானசுற்றமயானமட் டேவழிக்கேதுதுணை
தினையாமளவெள்ளளவா கினுமுன்புசெய்ததவந்
தனையாளவென்றும்பரலோகஞ் சித்திக்குஞ்சத்தியமே. ()

அத்தமும்வாழ்வுமகத்துமட்டே விழியம்பொழுக
மெத்தியமாதருமவீதிமட்டே விம்மிவிம்மியிரு
கைத்தலைமேல்வைத்தழு மைந்தருஞ்சுடுகாடுமட்டே
பற்றித்தொடருமிருவினைப் புண்ணியபாவமுமே. (29)

மாடுண்டுகன்றுண்டுமக்களுண் டென்றுமகிழ்வதெல்லாங்
கேடுண்டெனும்படிக் கேட்டுவிட் டோயினிக்கேண்மனமே
யோடுண்டுகந்தையுண்டுள்ளே யெழுத்தைந்துமோதவுண்டு
தோடுண்டகண்டனடியார் நமக்குத்துணையுமுண்டே. (30)

என்செயலாவதியாதொன்று மில்லையினித்தெய்வமே
யுன்செயலேயென்றுணரப்பெற் றேனிந்தவூனெடுத்த
பின்செய்ததீவினையாதொன்று மில்லைப்பிறப்பதற்கு
முன்செய்ததீவினையோவிங்ங னேவந்துமூண்டதுவே. (31)

எரியெனக்கென்னும்புழுவோ வெனக்கெனுமிந்தமண்ணுஞ்
சரியெனக்கென்னும்பருந்தோ வெனக்கெனுந்தான்புசிக்க
நரியெனக்கென்னும்புன்னு யெனக்கென்னுமிந்நாறுடலைப்
பிரியமுடன்வளர்த்தேனிதனாலென்னபேறெனக்கே. (32)

என்பெற்றதாயருமென்னைப் பிணமென் றிகழ்ந்துவிட்டார்
பொன்பெற்றமாதரும்போவென் றுசொல்லிப்புலம்பிவிட்
டார், கொனபெற்றமைந்தரும்பின் வலம்வந்துகுடமுடை
த்தா, ருன்பற்றொழிப வொருபற்றுமில்லையுடையவனே.

அழுதாற் பயனென்ன நொந்தாற்பயனென்ன வாவதில்லை
தொழுதாற்பயனென்ன நின்னையொருவர்சுடவுரைத்த
பழுதாற் பயனென்ன நன்மையுந்தீமையும்பங்கயத்தோ
னெழுதாப்படிவருமோசலி யாதிரென்னேழைநெஞ்சே.

நாய்க்குண்டுதொண்டு நமக்குண்டுபிச்சைநமனைவெல்ல
வாய்க்குண்டுமந்திர பஞ்சாட்சரமதியாமல்வரும்
பேய்க்குண்டுநீறு திகைப்புண்டுநின்றபிறவிப்பிணி
நோய்க்குண்டுதேசிகன றன்னருணோக்கங்களுகுதற்கே.

நானெத்தனைபுத்திசொன் னாலுங்கேட்டிலைநன்னெஞ்சமே
போனிப்படிக்கெட் டுழலுகின்றாயினியேதுமிலா
வானத்தின்மீனுக்கு வன்றூண்டிலிட்டவகையதுபோற்
போனத்தைமீளநினைக்கின் றனையென்னபுத்தியிதே. (36)

தாயாருஞ்சுற்றமும் பெண்டிருங்கைவிட்டுத்தாழ்ந்திடுநா
ளீயாருநானென்னப்பகர் வாரந்தநேரத்திலே
நோயாரும்வந்துகுடிகொள்ள வேகொண்டநோயுமாரு
பாயாருநீயுமல்லாற்பின்னை யேதுநட்பாமுடலே. (37)

பூணும்பணிக்கல்லபொன்னுக் குத்தானல்லபூமிதனைக்
காணும்படிக்கல்லமங்கையர்க் கல்லநற்காட்சிக்கல்ல
சேணுங்கடந்தசிவனடிக் கல்லவென்சிந்தைகெட்டுச்
சாணும்வளர்க்கவடியேன் படுந்துயர்சற்றலலவே. (38)

உடற்கூற்று வண்ணம்.

தன தனதான தனதனதான
　　தந்தனதந்தன தந்தனதந்தன
தனனதனந்த தனனதனந்த
　　தானனதான தானனதந்த—
　　　　தந்ததனதான தனதானா.

ஒருமடமாது மொருவனுமாகி
　　யின்பசுகந்தரு மன்புபொருந்தி
யுணர்வுகலங்கி யொழுகியவிந்து
　　வூறுசுரோணித மீதுகலந்து—
பனியிலொர்பாதி சிறுதுளிமாது
　　பண்டியில்வந்து புகுந்துதிரண்டு
பதுமவரும்பு கமடமிதென்று
　　பார்வைமெய்வாய்செவி கால்கைகளென்ற—
உருவமுமாகி யுயிர்வளர்மாத
　　மொன்பதுமொன்றுநி றைந்துமடந்தை
யுதரமகன்று புவியில்விழுந்து
　　யோகமும்வாரமு நாளுமறிந்து—
மகளிர்கள்சேனை தரவணையாடை
　　மண்படவுந்தியு தைந்துகவிழ்ந்து
மடமயில்கொங்கை யமுதமருந்தி
　　யோரறிவீரறி வாகிவளர்ந்து—
ஒளிநகையூற லிதழ்மடவாரு
　　வந்துமுகந்திட வந்துதவழ்ந்து
மடியிலிருந்து மழலைமொழிந்து
　　வாவிருபோவென நாமம்விளம்ப—
உடைமணியாடை யரைவடமாட
　　வுண்பவர்தின்பவர் தங்களொடுண்டு

தெருவிலிருந்து புழுதியளைந்து
தேடியபாலரொ டோடிநடந்து—

அஞ்சுவயதாகி விளையாடியே

உயர்தருஞான குருவுபதேச
முத்தமிழின்கலை யுங்கரைகண்டு
வளர்பிறையென்று பலரும்விளம்ப
வாழ்பதினாறுபி ராயமும்வந்து—

மயிர்முடிகோதி யறுபதநீல
வண்டிமிர்தண்டொடை கொண்டைபுனைந்து
பணிபொனிலங்கு பணிகளணிந்து
மாகதர்போதகர் கூடிவணங்க

மதனசொரூப னிவனெனமோக
மங்கையர்கண்டும ருண்டுதிரண்டு
வரிவிழிகொண்டு சுழியவெறிந்து
மாமயில்போலவர் போவதுகண்டு—

மனதுபொருமை வளர்பிறகோடி
மங்கலசெங்கல சந்திகழ்கொங்கை
மருவமயங்கி யிதழமுதுண்டு
தேடியபாமுதல் சேரவழங்கி—

ஒருமுதலாகி முதுபொருளாயி
ருந்ததனங்களும் வம்பிலிழந்து
மதனசுகந்த விதனமிதென்று
வாலிபகோலமும் வேறுபிரிந்து—

வளமையுமாறி யிளமையுமாறி
வன்பகல்விழுந்திரு கண்களிரண்டு
வயதுமுதிர்ந்து நரைதிரைவந்து
வாதவிரோதகு ரோதமடைந்து—

செங்கையினிலோர் தடியுமாகியே. (௨)

வருவதுபோவ தொருமுதுகூனு
மந்தியெனும்படி குந்திநடந்து
மதியுமழிந்து செவிதிமிர்வந்து
வாயறியாமல் விடாமன்மொழிந்து—

துயில்வருநேர மிருமல்பொருது
தொண்டையுநெஞ்சமு லர்ந்துவறண்டு
துகிலுமிழந்து கலையுமழிந்து
தோகையர் பாலர்கள் கோரணிகொண்டு—

கலியுகமீதி லிவர்மறியாதை
கண்டிடுமென்பவர் சஞ்சலமிஞ்ச
கலகலவென்று மலசலம்வந்து
கால்வழிமேல்வழி சாரநடந்து—

தெளிவுமிராம னுரைதடுமாறி
சிந்தையுநெஞ்சமு லைந்துமருண்டு
திடமுமலைந்து மிகவுமலைந்து
தேறிநலாதர வேதனைநொந்து—

மறையவன்வேத னெழுதியவான்
வந்ததுகண்டமு மென்றுதெளிந்து
இனியெனகண்ட மினியெனதேகந
மேதினிவாழ்வினி லாதினிநின்று—

கடன்முறைபேசு மெனவுரைநாவு
றங்கிவிழுந்துலை கொண்டுமொழிந்து
கடைவழிகஞ்சி யொழுகிடவந்து
பூதமுநாலுசு வாசமுநின்று—

நெஞ்சுதடுமாறி வருநேரமே. (௫)

வளர்பிறைபோல வெயிறுமுரோம
முஞ்சடையுஞ்சிறு குஞ்சியும்விஞ்ச
மனதுதிரண்ட வடியுமிலங்க
மாபலைபோல்பமதார்கள்வந்து—

உலைகொடுவிசி யுயிர்கொடுபோக
மைந்தநம்வந்தரு ளிந்தநேர்ந்து
மடியில்விழுந்து மனைவிபுலம்ப
மாழ்கினரேயிவர் காலமறிந்து

பழையவர்காணு மெனும்பலர்கள்
பஞ்சுபறந்தி டநின்றவர்பந்த
ரிடுகி னவந்து பறையிடமுந்த
வேபணம்வேகவி சாரியுமென்று—

பறையுமோவி முதியவர்தாமி
ருந்தசயங்கமு வஞ்சிலரென்று
டனிதுகிறெங்கல் களபமணிந்து
பாவகமச்செய்து நாலுமுடம்பை—

வரிசைகெடாம லெடுமெனவோடி
வந்திளமைந்தர்கு ளிந்துசுமந்து
கடுகிநடந்து சுடலையடைந்து
மானிடவாழ்வென வாழ்வெனநொந்து—

விறகிடைமூடி யழல்கொடுபோட
வெந்துவிழுந்தழ றிந்ததினங்க
ளுருகிவெளுப்பு கருகியடங்கி
யோர்ப்பிடிநீறுமி லாதவுடம்பை—

நம்புமடிபேணி யினியாளுமே. (௬).
